

# ஞானச்சுடர்





சித்திரை

2018

244 ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு.

**பொருள்:** பொருளில்லாதவர்களுக்கு இவ்வுலகத்தில் இன்பம் இல்லாதிருப்பதுபோல உயிர்களிடத்து அருளில்லாதவர்களுக்கு மறு உலகத்தில் இன்பம் இல்லையாகும். (247)

பொருளற்றார் பூப்ப ரொருகால் அருளற்றார்
அற்றார்மற் றாத லரிது.


**பொருள்:** பொருளில்லாதவர் ஒரு காலத்தில் செல்வராவர்; அருளில்லாதவர் அழிந்தவரேயாவர்; அவர் பின் ஒரு போதும் சிறப்படைய மாட்டார். (248)

# நற்சிந்தனை

மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

## உற்றதுணை



*வெண்பா*

சேவித்துஞ் சென்றிரந்துஞ் சீவன் சிவனென்று
பாவித்துக் கொண்டாலிப் பாரினிலே – ஆவிக்கே
உற்ற துணையென் றுறுதிகொண்டு நல்லூரில்
நற்றவனை நாடுவோம் நாம் 01

நாமந்தி சந்திதொறும் நல்ல சிவநாமம்
சேம முறப்பாடிச் சிந்தையிலே – காமமுதல்
கட்டறுத்து நிட்டையிலே கங்குல் பகலின்றி
இட்டமுடன் வாழ்வோம் இனிது 02

இனியே தெனக்குன் அருள்வருமென் றெண்ணாது
கனிகாய் அருந்திக் கடும்பசிக்குத் – தனியே
இருந்துமுத்தி சேர்வதற் கெண்ணுவதே யல்லாமல்
பொருந்துவனோ பூவிற் புகுந்து 03

போதுகொண்டு போற்றேன் பொறிவழியே போயலையேன்
தீது செயுமனத்தைச் சேர்ந்திடேன் – யாதுக்கும்
அஞ்சேன் அவரிவரை அண்டிடேன் எஞ்ஞான்றுந்
தஞ்சமென்று வாழ்வேன் தனித்து 04

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 244

2018 சித்திரை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நாலுபேர் சென்ற வழி | கு. சோமசுந்தரம் | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -07 |
| மேன்மைகொள் சைவநீதி... | திருமதி வி. சிவஞானவதி | 08 -13 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 14 -17 |
| சீமானைப் போலிருந்து... | கே.எஸ். சிவஞானராஜா | 18 -21 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 22 -23 |
| நந்தியம் பெருமானின்... | ஆர்.வீ. கந்தசுவாமி | 24 -26 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 27 -28 |
| பிட்டுக்கு மண் சுமந்து... | அ. சுப்பிரமணியம் | 29 -32 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 33 -35 |
| மாதோர் பாகத்தன் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 36 -37 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 38 -39 |
| முருகப்பெருமானின் பெருமை... | வி. செல்வரத்தினம் | 40 -42 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 43 -44 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 45 -49 |
| தூய உள்ளம் இறைவன் இல்லம் | பு. கதிரித்தம்பி | 50 -51 |
| நித்திய வாழ்வு | - | 52 -55 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 56 -58 |
| வட இந்திய யாத்திரை | மோகனதாஸ் சுவாமிகள் | 59 -60 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் பங்குனிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் 243ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை இளைப்பாறிய அதிபர் திரு வ. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் ஆரம்ப உரையின்மூலம் ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளையும் விதந்துரைத்ததுடன், இப்பணிகளினூடாக சந்நிதியான் ஆச்சிரமம் சமயத்தையும் சமூகத்தையும் வளர்த்து வருவதுடன் நாமும் பங்குபற்றுவது மனநிறைவைத் தருகின்றது என்று கூறியதோடு பேரவையினூடாக மாதா மாதம் வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் மலரானது ஞாலமெல்லாம் தழைக்க சந்நிதி வேற்பெருமான் அருள்புரிய வேண்டும் எனும் வேண்டுதலுடன் மலரில் சமய வழிபாட்டில் ஏற்படுகின்ற சந்தேகங்களைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளையும் வருங்காலத்தில் இடம்பெறச் செய்யவேண்டும் எனும் கோரிக்கையுடன் வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

ஞானச்சுடர் பங்குனிமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும் அன்னைதாசன் என்று சமூகத்தால் போற்றப்படுபவரும், ஆச்சிரமச் செயற்பாட்டுக்குத் தன்னாலான பங்களிப்பை வழங்கி வருபவருமான கவிமணி க. ஆனந்தராசா அவர்கள் நிகழ்த்தினார்கள்.

சமய சமூகப் பணிகளினூடாக சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பணிகள் வளர்ந்துகொண்டே செல்கின்றது. அதற்கமைவாக தாமும் அதனுடன் இணைந்து செயற்பட்டுக்கொண்டிருப்பதை முதலில் சபையோருக்கு விளக்கிக் கூறியதுடன், மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பைத் தனது கவி ஞானத்தினூடாக வெளிப்படுத்திய பாங்கு மிக அருமையாகவும், நேர்த்தியாகவும் அமைந்திருந்தது.

இவ்வெளியீடு காரணமாக இலைமறை காயாக இருந்த எத்தனையோ ஆன்மீக எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து அவர்களது எழுத்தாற்றலையும் வளர்த்துக்கொண்டு இருக்கிறது என்று கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்



சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர், சைவ சித்தாந்த முதுகலைமாணி, ஆன்மீகச் சொற்பொழிவாளர் நித்தியானந்தன் தசீதரன் (நித்தியதசீதரன்) அவர்கள் ஆண்டவன் அடி சேர்ந்து ஆண்டொன்று கடந்துவிட்டது. சிவபதமடைந்த அன்னாரின் நினைவு தின நிகழ்வு 02.05.2018இல் அவரது வீட்டில் நடைபெற உள்ளது.

சிவ தீட்சகராக நெற்றி நிறைந்த திருநீறு- சந்தனம்- குங்குமம் துலங்க, இலகு நடையில் அட்சரம் பிசகாத அழுத்தமான உச்சரிப்புடன், ஆணித்தரமாக கருத்துக் களை வெளிப்படுத்தும் திறமை, அவரை ஆசிரியராக, சொற்பொழிவாளராக, வர்ணனையாளராக, பட்டிமன்ற பேச்சாளராக - நடுவராகப் பல்வேறு பரிமாணங்களுடன் வலம்வர வைத்தது.

சந்நிதியான் ஆச்சிரமத்துடன் மறைந்த நித்திய தசீதரன் நெருக்கமான ஈடுபாடு கொண்டிருந்ததுடன் ஆச்சிரம வாராந்த வெள்ளி நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு சிறப்பித்தார். ஆச்சிரமம் சார்பான மாதாந்த மலையக சுற்றுப்பயண வேளையில் நம்மோடு இணைந் திருந்து, பயன்தரு கருத்துக்களுடன் கூடிய சொற்பொழிவு களை ஆற்றிச் சிறப்பித்தார். அப்படியான ஒரு சந்தர்ப் பத்தில் பண்டாரவளை இந்து மாமன்றத்தினரால் நினை வுக் கேடயம் வழங்கி அன்னார் கௌரவிக்கப்பட்டமை யும் எம்மால் மறக்கமுடியாது.

2016இல் எம்மால் மேற்கொள்ளப்பட்ட வட இந்திய ஸ்தல யாத்திரையில் பங்குகொண்டு காசி- நேபாளம்- காத்மண்டு எனப் பல இடங்களிலுமுள்ள ஸ்தலங்களை தரிசித்ததுடன், அந்த அனுபவங்களை தமது மேடைப் பேச்சுகளில் பகிர்ந்து கொண்டமையையும் நாம் மறக்க முடியாது. எதிர்வரும் 04.05.2018இல் சந்நிதியான் ஆச்சிரமத்து வாராந்த வெள்ளி நிகழ்வினில், மறைந்த நித்திய தசீதரனின் நினைவுகளை மீட்கும் நிகழ்வுகள் நடைபெறவும் ஏற்பாடாகியுள்ளது. இறைவன் திருப்பாதங் களில் அன்னாரின் ஆத்மா நித்தியமாக இளைப்பாற நாமும் பிரார்த்திக்கின்றோம்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 06. பூத வேதாள வகுப்பு

கரண மிடுவன குணலை யிடுவன
கழையை நடுவன பவுரி வருவன
ககன கூடமு டைந்துவி ழும்படி
கதறி வாயனல் கண்கனல் சிந்துவ
கைச்சதியி னாமுறைவி தித்தவா முற்கடித
சச்சபுட சாசபுட சட்பிதா புத்திரிக
கண்டச் சம்பதிப் பேத மாம்பல
கஞ்சப் பஞ்சகத் தாள மாம்படி
கற்சரி யுற்சவ தர்ப்பண லசஷண
சச்சரி மட்டிசை யொற்றிய றுப்பன
காயெரிய பங்கியொடு சேகரமி குந்தசைவ
காதுபடு சங்கவள மாலிகைபு னைந்திசைவ
கருணைய திந்துவந் தொண்கோகு லப்பெரிய
கருமுடியொ டும்படுங் கங்காள மொத்துவன
கடிபயிர வாதிகள் ப்ரியப்படுக திக்கிசைய
நடைநவிலு பாவனை யுதிக்குநட வித்தையின
கடகம டுத்த விடக்கை வலக்கை வாளின
கருதிய லசஷிய லசஷண முற்று மோதுவ
காலமா றாத வராளிசி கண்டிகை
பாலசீ காமர மானவி பஞ்சிகை
கவுட பயிரவி லளிதை கயிசிகை
கவுளி மலகரி பவுளி யிசைவன
கனவ ராடிய ரும்பட மஞ்சரி
தனத னாசிவி தம்படு பஞ்சமி
கைச்சுலவு கோன்முறைவி தித்தரா கத்தடைவி
லுச்சமது சாதிகமெ டுத்துமே லெட்டுவன
கஞ்சக் கஞ்சநற் றேசி ராஞ்சிகு
றிஞ்சிப் பண்குறித் தியாழை யேந்துவ
கற்றவு டுக்கையி டக்கைக ளப்பறை
மத்தளி கொட்டிய முற்றும டிப்பன
காரெனமு ழங்குகுர லேறுதுடி சந்த்ரவளை
வீரமுர சுந்திமிற டாரிகுட பஞ்சமுகி
கரடிபறை யங்கனந் தங்கோடி கொட்டுவன
முறைமுறை கவந்தநின் றொன்றொடு கிட்டுவன
கசரதப தாகினிய ரக்கர் துணி பட்டுவிழு
களமுழுதும் வாழியதி ருப்புகழ்மு ழக்குவன
கடியகு ணத்த சினத்த சகத்ர யோசனை
நெடிய கழுத்த சுழித்த விழித்த பார்வைய
காதநூ றாயிர கோடி வளைந்தன
பூதவே தாள மநேகவி தங்களே.

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

திருமதி எழில்மதி ஜெயநாதன்
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி தெமட்டகொட, கொழும்பு)
திருமதி S. லோஜினி
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, வெள்ளவத்தை)
அப்பர்சாமி கோபாலகிருஷ்ணன்
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
நா. உமாசங்கர்
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)
நா. குகன்
(குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)
பொ. பாலசிங்கம்
(பத்தமேனி, அச்சுவேலி)
இராசையா சற்குணதாஸ்
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
திருமதி ஸ்ரீனிவாசன்
(பழம்றோட், கந்தர்மடம்)
Dr R. பாக்கியநாதன்
(பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி)
திருமதி T. ராமச்சந்திரன்
(யாழ்ப்பாணம்)
திருமதி சிவராஜா
(நல்நடத்தை உத்தியோகத்தர், கொழும்பு)
செல்வி சாவித்திரி செல்வரெத்தினம்
(யாழ்ப்பாணம்)
வீ. கிருஷ்ணராஜா
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)
சி. கனகசபாபதி
(சிவன் கோயிலடி, ஆவரங்கால்)
மா. குலநாதன்
(நாதன் கராஜ், அச்சுவேலி)
ச. மனோகரி
(சுண்ணாகம்)

ஐயாத்துரை முருகதாசன்
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசாரகர்)
செ. மகேஸ்வரன்
(கோப்பாய் வடக்கு)
செ. சிவராசா
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)
S. தர்மபாலகிருஷ்ணன்
(தும்பளை பருத்தித்துறை)
த. நடேசன்
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
க. கிரிதரன்
(திரு இல்லம், கரவெட்டி)
வீரையா சிவஞானம்
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)
க.கு. கிருபாகரராசா
(பிரதானவீதி, ஆவரங்கால்)
இ. மனோகரன்
(மனோ லைற், கோப்பாய்)
சி. நந்தகுமார்
(வங்கி ஊழியர், உரும்பராய்)
ச. கனகராசா
(யாழ்ப்பாணம்)
சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)
வ.க. சாம்பசிவம்
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)
சி. அமிர்தசாகரன்
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)
தி. பாலசிங்கம்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
சி. சுகிர்தலிங்கம்
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)
T. இரவீந்திரதாஸ்
(சாமியன் அரசடி, கரவெட்டி)
சி. குமாரவேல்
(தலைவர், சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)
உரிமையாளர்
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

க. ஞானச்சந்திரன்
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)
ஐ. நற்குணநாதன்
(உடுவில், சுண்ணாகம்)
இ. ஸ்ரீஸ்கந்தராம்
(உப தபாலதிபர், உரும்பராய்)
வே. சந்திரசேகரம்பிள்ளை
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
K. இராமச்சந்திரன்
(சங்கானை)
த. இராஜசிங்கம்
(நீர்வேலி)
ம. புலேந்திரன்
(கரணவாய், கரவெட்டி)
கி. தவராசா
(காந்தியூர், புலோலி)
ஐ. சத்தியபாலன்
(பலாலி வீதி, உரும்பராய்)
க. இராஜேஸ்வரி
(சுண்ணாகம்)
செ. ஸ்ரீனிவாசன்
(அல்வாய்)
செல்வி சந்திரலிங்கம் மாதுமை
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
சுப்பிரமணியம் சுரேஸ்குமார்
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
க. கணேசதேவா
(மாதகல்)
அதிபர்
(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)
வி. செல்வரெத்தினம் J.P
(அராலிமத்தி, வட்டுக்கோட்டை)
ஐ. குகேந்திரராணி
(ஐயனார் கோயிலடி, சுண்ணாகம்)
N. பாலசுப்பிரமணியம்
(நீர்வேலி வடக்கு)

ம. கந்தையா
(சிவன்கோவிலடி, சாவகச்சேரி)
க. மகேந்திரன்
(சங்கத்தானை, சாவகச்சேரி)
தங்கராசா கலாஜோதி
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
செல்வி பாலாம்பிகை கந்தசாமி
(கட்டைவேலி, கரவெட்டி)
S. தங்கேஸ்வரா
(காட்டுப்புலம்)
ம. சிவானந்தம்
(நாவலர் ரோட், யாழ்ப்பாணம்)
எஸ்.ரி. குமரன்
(மல்லாகம்)
பொ. காசிலிங்கம்
(கொக்குவில்)
கா. செல்லத்துரை
(உடுவில், சுண்ணாகம்)
வீ. புஸ்பநாதன்
(உரும்பராய் வடக்கு)
சந்திரசேகரம் மகிந்தன்
(சிறுப்பிட்டி மேற்கு)
தர்சினி பகீரதன்
(உப தபாலதிபர், நீர்வேலி)
கு. குணரூபன்
(மீசாலை கிழக்கு)
வ. ஆறுமுகம்
(இளை. அதிபர், ஆவரங்கால்)
கி. வரதராசன்
(அச்சுவேலி தெற்கு)
அ. சந்திரகுமாரன்
(சந்திரகோட்டம், சுழிபுரம்)
வி. நாகம்மா
(பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)
சர்மிளா இராசலிங்கம்
(கோப்பாய்)

# நாலுபேர் சென்ற வழி

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

இவ்வுலகில் கிடைத்தற்கரிய மானுடப்பிறவி எமக்குக் கிடைக்கப்பெற்றமை, அரும் பெரும்பேறு ஆகும். அதிலும், சைவ சமயிகளாகப் பிறந்து, சிவநெறியில் நின்று, சைவச் சூழலில் வாழ்வதற்குக் கிடைக்கப் பெற்ற அரிய வாய்ப்பு மிகவும் மகத்தானது. இதனை நாம் உணர்ந்துகொண்டால் வையத்துள் வாழ்வாங்கு வாழவும், மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் அறநெறி, ஒழுக்க வாழ்வு வாழவும் எமக்கு வழி பிறக்கும்.

உலகிலுள்ள உயிரினங்கள் யாவற்றிலும், மேலான தோற்ற வடிவமைப்பைக் கொண்டுள்ளதும்; ஆறாவது அறிவு எனப் படும் பகுத்தறிவு எனும் பிரித்துணரும் திறன்; நல்லது, கெட்டது வேறுபடுத்தும் பண்பு ஆகியவற்றை இயல்பாகவே உடையதும் மனித இனம்.

"அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது" என்பது ஔவையின் பொன் வாக்கு. மனிதரினால்த்தான், "நாலு பேர் சொன்ன நல்ல வார்த்தைகளைக் கேட்டும்; அவர்கள் சென்ற நல்ல வழியில் சென்றும், நல்லபடி வாழ்க்கைப் பயணத்தை நிறைவு செய்ய முடியும். மனிதர்களினாலேயே தமக்கும், பிறருக்கும்; பிற உயிர்களுக்கும், இயற்கைக்கும் இன்னல்கள், துன்பங்கள் பயவா, இன்ப வாழ்வு வாழ முடிகின்றது. ஆயினும் மனிதர்கள் அத்தகைய இன்ப வாழ்வை, தமக்கும் பிறருக்கும், பிறவற்றிற்கும் துன்பம் தராத தூய மனித வாழ்வை வாழ மறுத்தும், மறந்தும் வருவது ஏனோ? என்பதுதான் இன்றைய பெரும் புதிராக உள்ளது. "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" எனத் தொண்டு நெறியில் நின்று சிவபதமடைந்த அப்பர் பெருமான் பாடியுள்ளார். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதும் அப்பரடிகளின் திருவாக்கு. "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்கிறார் தமிழ் மூதாட்டி ஔவையார். தொண்டு என்பது அதியுயர் நிலையில் வைத்துப் போற்றப்படுகிறது. மனம் இரண்டு நிலைகளில் ஒன்றிற்கொன்று; எதிரும் புதிருமாக உள்ளது. தொண்டு மனம், மிண்டு மனம் என்பனவே அவ்விரண்டு நிலைகளுமாகும்.

மனம் படைத்தவன் மனிதன்; மனத்தை தொண்டு மனம் ஆக உருவாக்கியவன் மாமனிதன்; மனிதருள் மாணிக்கம் எனப் போற்றப் படுகிறான். "நான்" என்னும் தற்பற்றும், "எனது" எனும் பொருட்பற்றும் முற்றிலாகத் துறந்தவர்கள். மனிதநேயம், ஆன்ம நேயம் இரண்டையும், வாழ்க்கையில் அவற்றின் நலன் ஓம்பி பேணிக் காத்து வருபவர்கள்.

மனிதநேயம் என்பது, எவ்வித வேறுபாடுகளையும் காட்டாது; எல்லா மனிதர்களிடமும் செலுத்துகின்ற அன்பும் கருணையும் ஆகும். அதே அன்பையும் கருணையையும் உலகிலுள்ள அனைத்து உயிரினங்கள் மீதும் செலுத்தும்போது, ஆன்மநேயமாக விரிவடைகின்றது. சமூகநோக்கு, ஆன்மிக நோக்கு; இவ்விரண்டையும் பெரிதும் மதித்துப் போற்றிச் செயற்படுத்துபவர்களே; தொண்டுமனத்தவர் ஆவர். "மிண்டுமனத்தவர் போமின்காள்; மெய்யடியார்கள் விரைந்து வம்மின்" என மணிவாசகப் பெருமான், தொண்டுமனம் உடைய மெய்யடியார்களை, சிவனடியார் கூட்டத்தில் சேருமாறு அழைப்பு விடுக்கின்ற திருவாசகப்

*சரியாகவும் உண்மையாகவும் உழைப்பதே கடவுளிடம் கூட்டிச்செல்லும் தங்கப் பாதை.*

பாடலடி இதுவாகும். எந்த மனிதன் தனது மனத்தை இதமாக, இனிமையாக, கருணை உடையதாக வைத்துக் கொள்கிறானோ அவன்தான் மனிதன் என்ற திருப்பெயரைப் பெற உரித்துடையவன். மனிதன் என்ற சொல்லைப் பிரித்தால் மன்+இதன்= மனிதன் என அமையும். மனம் படைத்த மனிதன்; மனிதத் தன்மைகள், மனிதப் பண்புகள் கொண்ட மனிதனாக; மெய்ப்பொருள் அறிவு பெற்ற ஆன்மீக வாழ்வு வாழ்வதற்கு மனம், மொழி, செயல் மூன்றிலும் இனிமை தோன்ற வாழவேண்டும். எண்ணங்களில், பேச்சில், நடத்தையில்- செயலில் பரிபூரணமான தூய்மை இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார்; சீவகாருண்ணியம் என்னும் விழுமிய அறத்தைப் பரப்புவதைத் தமது வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு, தொண்டாற்றிய இராமலிங்க வள்ளலார்.

இத்தகைய மென்மனம், தொண்டு மனம் கொண்டவர்களையே வள்ளுவப் பெருந்தகை; பண்புடையார், விழுமியர், செம்பொருள் கண்டார் என்கிறார். மனத்தைத் தூய்மைப் படுத்தி, தெளிந்து, மனம் நிலைத்து; மனிதர்களுக்கும், பிற உயிரினங்களுக்கும்; இயற்கைச் சூழல் பாதுகாப்புக்கும்; திரிகரண சுத்தியுடன், மனம் இதமாய்த் தொண்டாற்றுகின்ற சான்றோர் பெருமக்களே, நிறை மனிதர்கள் ஆவர். இத்தகைய தொண்டு மனத்தினர் சிலர் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பதனாலேயே இப்பூமி, மண்ணுக்குள் புதைந்து போகாமல்; இன்னமும் உள்ளதாய் இருக்கின்றது.

**"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"**

என்னும் திருக்குறட்பா, இதனை விளக்குகிறது.

**"நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு
எல்லோர்க்கும் பெய்யும் மழை"**

என்பது ஔவை வாக்கு. இத்தகைய செம்மனச் செல்வர்கள், தொண்டு மனத்தினர், நல்லோர், சான்றோர், விழுமியர் ஆகியோர் நன்கு செப்பனிட்ட, சீரான, செம்மையான, இதமான வாழ்க்கைப் பாதையில், பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிறந்த வாழ்வியல் வழிகாட்டிகள். அவர்களைப் பின் பற்றி அவர்கள் சென்ற, செல்கின்ற அடிச் சுவட்டைப் பின்பற்றி அவர்கள் சென்ற, செல்கின்ற அடிச்சுவட்டைப் பின் தொடர்ந்து, வேறு பராக்கில்லாமல், நிதானமாக மனிதர்கள் அனைவரும் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டால் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்னும் உன்னத வாழ்வு, வாழும் காலத்தில் கிடைக்கப் பெறுவதோடு மனிதப் பிறவியின் இறுதி இலக்கு ஆகிய பேரின்ப வீடு அடைதலும் சித்திக்கும். துன்பங்கள், துயர்கள் ஆகியவற்றிற்குக் காரணமான பிறப்பு- இறப்புத் தொடரையும் முடித்துக்கொள்ளலாம்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை அடைதல்தான்; மனித வாழ்க்கையின் நோக்கங்களும், பயன்களும் ஆகும். சைவ நெறி வகுத்து, நமக்கு வழங்கியுள்ள இவற்றை நாம் அடைய முயற்சிக்க வேண்டும்.

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்ற தேவாரப் பாடலை நாம் அடிக்கடி நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். மனிதராகப் பிறப்பதற்குக் கிடைத்த வாய்ப்பினைத் தவறவிட்டால், பிறகு எக்காலத்தில் இத்தகைய வாய்ப்பு மீண்டும் கிடைக்கும் என்பதை எவராலும் கூறமுடியாது. "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ; யாது மறியோம்" என்கிறார், உண்மைநிலையை உணர்ந்த ஓர் அருளாளர்.

மனிதப் பிறவியை எமக்குத் தந்த இறைவனுக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். நாம் ஒவ்வொரு

*செழுமை நண்பர்களைச் சேர்க்கிறது. கஷ்ட காலம் நண்பர்களைச் சோதிக்கிறது.*

கருமத்தையும் மேற்கொள்ள முன்னர், இறைவனை நினைந்து; இறைவனை விசாரித்து, ஒப்புதல் பெற்று, அதன் பின்னரே, கருமத்தை ஆற்ற வேண்டும். செய்யப் போகின்ற கருமம், காரியம், செயல்; எதுவாக இருப்பினும் அது தர்மந்தானா? அதனால் ஏற்படும் பின்விளைவுகள் தமக்கோ பிறருக்கோ நன்மை பயப்பனவா; அல்லது தீமைகளை விளைவிப்பனவா? என்று தம்முடைய மனச்சாட்சியை உசாவியறிந்து; நன்மை பயப்பனவாய் அமையும் பட்சத்திலேயே, அக்கருமத்தைச் சிரத்தையோடு செய்யவேண்டும். அதை விடுத்துத் தான்தோன்றித்தனமாக செய்தல் ஆகாது. விளைவறிந்து வினையாற்றுதலே வேண்டத்தக்கது.

"வேண்டத் தக்க அறிவோய் நீ; வேண்டமுழுதும் தருவோய் நீ"

என்கிறார் மணிவாசகப் பெருமான். மனிதப் பிறவியை எமக்கு ஈய்ந்தமைக்காக, இறைவனுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்; அவன் சொற்படி நடக்க வேண்டும். அதே வேளை, இறைவனின் நோக்கத்தையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இறைவனின் கருத்தறிந்து, கருமமாற்றுதல் நமது ஈடேற்றத்திற்கும், சமூக வாழ்விற்கும் இன்றியமையாதது.

வையத்துள் வாழும் வழியறிந்து; அது அறவழி என்பதைத் தெளிந்து; வாழ்வாங்கு வாழவும்; வாழ்வில் உடல் நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞானம், ஓங்கி நல்லவண்ணம் வாழவும், ஈற்றில் தெய்வ நிலையை எய்தி; பிறப்பு, இறப்புத் தொடர் நிகழ்விலிருந்து விடுதலைபெற்று, மரணமில்லாப் பேரின்பப் பெருவாழ்வினை எய்தவும் வாய்ப்பாகவே; உயிர்கள்மீது கொண்டுள்ள அளப்பருங் கருணையினால்; மனிதப்பிறவி நமக்குத் தரப்பட்டது என்பதை நாம் உணர்ந்து, தெளிந்து கொள்ளுதல் வேண்டும்.

பொதுவாகப், பெரியவர்கள் அறிவுரை கூறும்போது; "நாலுபேர் சொன்னவற்றைக் கேட்டு நடக்க வேண்டும்; நாலுபேர் போன பாதையில் நாமும் செல்ல வேண்டும். நாலு பெரியவர்கள் வாழ்ந்து காட்டிய முறையில் நாமும் வாழவேண்டும்; அப்படி வாழ்ந்தால் ஒரு பொல்லாப்பும் இல்லை" என்று கூறுவது ஒரு மரபாக வந்துவிட்டது.

மரபுவழியாக, இந்த நாலுபேர் என்று குறிப்பிடப்படுவோர் யாவர்? ஆம்! சைவத் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில்; திருவருட் செல்வர்களாகிய, திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமய குரவர்கள் நால்வரையுமே, இங்கு "நாலுபேர்" என்று குறிப்பிட்டுக் கூறப்படுகின்றனர். அவர்கள் "அன்பே சிவம்" என்று கொண்டு; அன்பு நெறியில் பற்றும் பக்தியும் கொண்டவர்களாய்; தொண்டு மனத்தினராய் வாழ்ந்து காட்டிய அருளாளர்கள். அவர்கள் நமக்குக் குரவர்களாகக் கிடைக்கப்பெற்றமை எமது தவப்பயன் ஆகும். நால்வர் வாழ்ந்து காட்டிய சைவநெறியாம் அன்பு நெறியில், தொண்டு நெறியில் எமக்கு இயன்றவாறு நின்று ஒழுகி, நல்வாழ்வு வாழ்வோமாக.

வாழ்க வையகம்; வாழ்க வளமுடன்.

**இறைவழி**

பக்தி, ஞானம் இரண்டுமே இறைவனை அடைவதற்கான வழிகள்தான். பக்தனுடைய மனோபாவமும் ஞானியினுடைய மனோபாவமும் வெவ்வேறு என்றாலும், அவர்கள் சென்றடையும் இடம் என்பது எப்போதும் ஒன்றுதான். ஞானியின் இறைவன் ஒளிமயமானவன். பக்தனின் இறைவன் அன்புமயமானவன்.

-இராமகிருஷ்ணர்-

*இளமையில் திறமை திசைமாறிவிடின் வாழ்வின் வளமை தடுமாறிவிடும்.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...)

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 06. அநுபோக சுத்தி

57. போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந் தருளி யிருள்நீக்கி
வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள அருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாயிங் குழல்வேனோ கொடியேன் உயிர்தான் உலவாதே.

**ப-ரை:**

போர் ஏறே- உயிர்களின் மலபந்தங்களை நீக்கும் போரில் அரியேறு போன்றவனே, நின் பொன் நகர் வாய்- நினது பொன்மயமான சிவபுரத்திகணுள்ள திருக்கோயிலினின்றும், வார் ஏறு இள மெல் முலையாளொடு நீ உடன் போந்தருளி- கச்சு அணிந்த இளமையும் மென்மையும் பொருந்திய தனங்களையுடைய அம்மையாரொடும் நீ ஒருங்கு புறப்பட்டருளி, வந்து இருள் நீக்கி அருள- இந்நிலவுலகின்கண் வந்து ஆணவமல இருளின் ஆற்றலைக் கெடுத்து அருள்புரிய, அருள்பெற்ற சீர் ஏறு அடியார்- அத்திருவருளைப் பெற்ற சிறப்புமிக்க மெய்யடியார்கள், நின் பாதம் சேர கண்டும்- நின் திருவடிகளை அடைய நேரே பார்த்திருந்தும், கண்கெட்ட ஊர் ஏறாய் இங்கு உழல்வேனோ- யானும் அதனைப் பெறமாட்டாது கண்கெட்ட குருட்டு ஆண் ஊர்ப்பன்றி போலாக இவ்வுலகில் அலைந்து திரிவேனோ? கொடியேன் உயிர்தான் உலவாதே- கொடிய பிராரத்தவினையையுடைய என் உயிர் ஒழிகின்றிலதே; யாது செய்வேன்.

பேரேறே, நின் பொன்னகரினின்றும் உமையம்மையாளொடும் நீ ஒருங்கு புறப்பட்டருளி இந்நிலவுலகின்கண் வந்து இருள் நீக்கி அருள அத்திருவருளைப் பெற்ற சீரேறு அடியார்கள் நின் திருவடிகளை அடையக் கண்டிருந்தும் யானோ அதனைப் பெறமாட்டாது கண்கெட்ட ஊரேறாய் இவ்வுலகில் அலைந்து திரிவேனோ? கொடிய வினையையுடைய என் உயிர் ஒழிக்கின்றிலதே யாது செய்வேன் என்பதாம்.

பொன்னகர்- சிவபுரத்தின்கணுள்ள செம்பொற்றிருக்கோயில், "புகுவதாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப்போந்த, (சத 36) என வந்தமையுங் காண்க. பொன்னகர்வாய் என்னும் ஏழாவது ஐந்தாவதன் பொருட்கண் வந்தது. இளமைச் செவ்வி குன்றாது என்றுங் கன்னியாய் இருப்பவளாதலின் அம்மையை, வாரே றிளமென் முலையாரொடு" என்றருளினார். முலையாளோடு நீ உடன் போந்தருளி வந்து இருள் நீக்கி என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க. இறைவன் மெய்யன்பர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு அம்மையொடு போந்தருவான் என்பது,

*ஆயிரம் நூல்களிலிருந்து பெறமுடியாத ஞானத்தை ஓர் அனுபவம் உணர்த்தும்.*

"தேவியும் தானும்வந் தெம்மையாள"

திருப்பொற் 2.

"மருவார் மலர்க் குழல் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட"

கோத் 14.

"அரையாடு நாக மசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்"

தெள் 6.

"கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவேய் அனவளைத் தோளியொடும் போந்தருளி
நனவே யெனைப்பிடித் தாண்டவா"

தெள் 10.

"பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான்"

பொன்னூசல் 9.

என அடிகள் பிறாண்டு அருளியவற்றானுமறிக. மென்முலையாளென்றது திருவருட் சத்தியை, "அலர்ந்தநின் மெய்க்கருணையும் நீயும், அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்" (திருப்பள்ளி 10) என வருதலுங் காண்க. "அருளது சத்தியாகும் அரன்றனக்கு" எனச் சிவஞானசித்தியாரில் (சூத் 5. செய் 9) வருதலும் ஈண்டு அறியற்பாலது.

சீரேறடியார்- இறைவன் திருவருளைப் பெற்ற சிறப்புமிக்க மெய்யடியார். பாதஞ்சேர என்றது தாடலைபோல் இரண்டறக் கலக்க என்றவாறு.

"ஒன்றன் றிரண்டன் றிரண்டொன்று தானன்று
நின்றதொரு தன்மை நிலை" (61)
"சாற்றில் அதற்குவமை தாடலைபோற் சன்மார்க்க
வேற்று விதிபலவும் வேண்டாவே" (62)

எனத் துகளறு போதத்து வருவனவும் காண்க.

கண்டும் உழல்வேனோ என இயையும் உம்மை எதிரது தழீஇய எச்சவும்மை. ஊரேறு என்பதற்குப் பொலியெருது என்று உரைப்பாரு முளர். பொலியெருது விடுதல் முப்பத்திரண்டு அறங்களுள் ஒன்றாயினும் அதற்குக் கண்கெட்ட ஏற்றினை விடும் வழக்கம் யாண்டுமின்மையானும் பொலியெருது எல்லாராலும் பாதுகாக்கப்படுதலின் அதற்கு அலைந்து திரியும் வழக்கம் இன்மையானும், "ஊர் நாயிற் கடையானே" (சத 56) என்பது போலத் தம்மைப் பலவிடங்களிலும் தாழ்த்திக் கூறும் அடிகள் ஊரேறாகத் தம்மை உரையாராதலானும் கண்கெட்ட ஊரேறு என்பதற்குக் குருடாகிய ஆண் ஊர்ப்பன்றி எனவுரைத்தலே இயை புடைத்தாமென்க. பன்றியின் ஆண்பால் ஏறு எனப்படுதல், "பன்றி புல்வாயுழையே கவரி, யென்றிவை நான்கு மேறெனப்படும்" (தொல் மரபு 38) என்பதனால் அறிக. உழல்வேனோ என்பதில் ஓகாரம் வினாப்பொருளில் வந்தது. அடியார் நின்பாதம் சேரக்கண்டும் அதனைத் தாமும் பெற முடியாத பிராரத்தவினையுடைமை பற்றி அடிகள் தம்மைக் "கொடியோன்" என்றார். தான்- அசை. உலவாதே என்பதில் ஏ- ஒழியிசை.

*தன் நடத்தை அளவுக்கு ஒருவன் தன்னை உயர்த்திக் கொள்கிறான்.*

இதன்கண், ஊரே நாயிங்குழல்வேனோ என்பதனால் உழலும் துன்ப நிலையை ஒழித்தல் வேண்டும் என்பது பெறப்படுதலின் அநுபோகசித்தியென்னும் ஆறாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 53.

58. உலவாக் காலந்தவமெய்தி உறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப் பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட்டேன் மணியேஉனைக் காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன் என்கொண் டெழுகேன் எம்மானே.

**ப-ரை:**

மணியே- மாணிக்கம் போல்பவனே, எம்மானே- எங்கள் தலைவனே, இங்கு பல மா முனிவர்- இவ்வுலகிற் பல பெரிய முனிவர்கள், உனை காண்பான்- உன்னைக் காணும் பொருட்டு, உலவா காலம் தவம் எய்தி- அளவில்லாத காலம் தவநெறியிற் றலைப்பட்டு, உறுப்பும் வெறுத்து நனிவாட- அதனால் தமது உடம்பையும் வெறுத்து மிகவும் வாடிவருந் தவும், பாவியேனை பணி கொண்டாய்- பக்குவமின்மையால் அவர்க்கருளாத நீ பாவியாகிய என்னைத் தொண்டனாகக் கொண்டாய்; மல மா குரம்பை இது மாய்க்க மாட்டேன்- பணி கொண்டு பின்னர் என்னைப் பிரிந்த நின்னைக் காணும் பொருட்டு மலங்களையுடைய பெரிய யாக்கையாகிய குரம்பையை ஒழிக்க மாட்டாதவனாயிருக்கின்றேன்; உனை காணும் பொருட்டு வருந்தி நிற்கும் அன்பு இலேன்- நின்னைக் காணும் பொருட்டு மலங்களையுடைய பெரிய யாக்கையாகிய குரம்பையை ஒழிக்க மாட்டாதவனாயிருக்கின்றேன்; உனை காண்பான் அலவா நிற்கும் அன்பு இலேன்- நின்னைக் காணும் பொருட்டு வருந்தி நிற்கும் அன்பு இல்லாதவனாகிய யான், என் கொண்டு எழுகேன்- எதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு மேற்பட்டு நின்னைக் காண வல்லேன்.

மணியே, எம்மானே, இவ்வுலகத்திலே பல பெரிய முனிவர்கள், உன்னைக் காணும் பொருட்டு அளவில்லாத காலம் தவநெறியிற் றலைப்பட்டு அதனாற் றமது உடம்பையும் வெறுத்து மிகவும் வாடி வருந்தவும், பக்குவமின்மையால் அவர்க்கு அருள் புரியாத நீ பாவி யாகிய என்னைத் தொண்டனாகக் கொண்டனை; அங்ஙனம் பணிகொண்டு பின்னர் பிரிந்த நின்னைக் காணும் பொருட்டு இந்த மலமாக்குரம்பையாகிய இதனை அழித்து ஒழிக்கமாட்டாத வனாயிருக்கின்றேன்; நின்னைக் காணும் பொருட்டு வருந்தி நிற்கும் அன்பில்லாதவனாகி யான் எதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு மேற்பட்டு நின்னைக் காணவல்லேன் என்பதாம்.

உலவாக்காலம்- அளவில்லாத காலம். உலப்பு- அளவு. "மிடைந்தவர் உலப்பிலர்" கம்ப. உருக்காட்டு 23 பெரிய முனிவர்கள் அளவில்லாத காலம் தவம் இயற்றினராதலின் "உலவாக்காலந் தவமெய்தி" என்றார்.

"புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டியா யண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணா மன்ன" செத்.2.

என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. உறுப்பு அதனையுடைய உடலை உணர்த்தியது. உம்மை, உயர்வு சிறப்பு உடலை வெறுத்தல்- உடலுக்கு வேண்டிய

உணவு முதலியன கொடாது ஒறுத்தல். நனிவாட என்றது முனிவர்கள் நெடுங் காலம் கடுந்தவம் புரிந்தும் காண்டற்கருமையால் மிகவும் வாட என்றவாறு. முனிவர் நனிவாடப் பாவியேனைப் பணி கொண்டாய் என்றது இறைவனது பேரருளினை வியந்தவாறு. அடிகள் தம்மைப் பாவியேன் என்றது பலவிடத்தும் பணிவுடைமை தோன்றக் கூறும் முறைமை பற்றியாகும். "பாவியேற் கீதலாது நின்க ளொன்றும் வண்ண மில்லையே" (சத 77) "பாவியேன்... அழுக்கு மனத்தடியேன்" (அடைக்கலப் 1) "பாவியேற்கு முண்டாமோ" (பிரார்த்தனைப் 5) "பாவியேனுடைய ஊனினையுருக்கி" (பிடித்த 9) என அடிகள் பிறாண்டு அருளியவாறும் காண்க.

மலமாக் குரம்பை- மலங்களையுடைய பெரிய யாக்கையாகிய குரம்பை, "மலவன்மாக் குரம்பையை மாற்றியம் மான் முதல் வானவர்க்கப்பாற் செலவன் பர்க்கோக்குஞ் சிவன்" என்னும் திருக்கோவையார் (155) உரையில் மலவன்மாக் குரம்பை என்பதற்கு மலங்களை உடைய வலிய யாக்கையாகிய குரம்பை எனப் பேராசிரியார் உரைத்தமையுங் காண்க. "மும்மலம் பொதிந்த முழுமலக் குரம்பை" எனச் சிதம்பரச் செய்யுட்கோவையில் (68:3) வருதலுங் காண்க. குரம்பை- குடில். "ஈத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை" பெரும்பாண்-88. அடிகள் யாக்கையைக் குரம்பை என்றலை,

"கொடியேன் ஊன்றழை குரம்பை தோறும்"
திருவண்டப் 171-2

"புழுக்கணுடைப் புன்குரம்பை... அழுக்குமனத் தடியேன்"
அடைக்கலப் 1.

"நீக்கிமுன்னெனைத் தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து"
அதிசயப் 8.

"முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து, கடைப்படாவண்ணம்"
பிடித்த 2.

"புழுவினாற் பொதிந்திடு குரம்பையில்" சென்னிப் 8.

என வருவனவற்றிலுங் காண்க. குரம்பையை மாய்க்கமாட்டாமை பிராரத்த வினையுடைமையால் என்க.

உலகத்துச் சிறந்த பொருள்களுள் மணி சிறந்ததாதல் பற்றி "மணியே" என்றார்.

"என் மணியே, வெறுத்தெனை நீ விட்டிடுதி" நீத் 6.
"மணியே யமுதேயென் மதுவெள்ளமே" நீத் 13.
"சுடர்மா மணியே... கறைக்கண்டனே" நீத் 32.
"எனையாண்ட பொல்லா மணியே யோ" ஆசைப் 1.
"ஏதா மணியே யென்றேத்தி... அணைவது என்றுகொல்லோ" புணர்ச்சிப் 9.
"அம்பலத் தாடுகின்ற என்பொலா மணியை" அச்சப் 3.
"ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த வாரமுதே" பிடித்த 3.

(தொடரும்...

நல்லவனாகப் பிறப்பது சந்தர்ப்பத்தினால், நல்லவனாக வாழ்வது முயற்சியினால்.

# மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

– திருமதி சிவஞானவதி விஸ்வலிங்கம் அவர்கள் –

சைவ மதமே உலகிலுள்ள மதங்கள் அனைத்திலும் தொன்மையானது. மிகவும் பெருமை வாய்ந்தது. காலத்திற்குக் காலம் வாழ்ந்த பல ஆயிரக்கணக்கான ஞானிகளாலும் யோகிகளாலும் உய்த்துணரப்பட்ட பல அரிய தத்துவக் கோட்பாடுகள் நிரம்பியது. பலகோடி மக்களால் பல்லாயிரம் ஆண்டுகளாக அநுட்டிக்கப்பட்டு வருவது. சிவபூமி என்று சித்தர்களால் விதந்துரைக்கப்பட்ட ஈழத்திலும் வடக்கே இமாலயம் (கைலாசமலை) தொடக்கம் தெற்கே குமரி முனை வரைக்கும் பரந்துபட்ட பாரததேசம் முழுவதும் மட்டுமன்றி தென் கிழக்காசிய நாடுகள் (யாவா, சுமத்திரா) பலவற்றிலும் சைவ மதம் பரவியிருந்தது என்பதற்குப் பல ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இதனையே மணிவாசகப் பெருமான் "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

சைவ சமயத்தின் தோற்றம் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிக காலத்திற்குரியதாக இருக்கலாம் என சேர். ஜோன் மார்ஷல் என்ற தொல்பொருளியல் ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். இங்கு கண்டெடுக்கப்பட்ட பல இலச்சினைகளில் சிவவழிபாடு நிலவியதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. எருது, திரிசூலம், நடராசரை ஒத்த வடிவம், சிவலிங்கம், யோக நிலையில் ஒருவர் அமர்ந்திருப்பதும் அவரைச் சூழ விலங்குகள் இருக்கும் இலச்சினைகள் பல கிடைத்துள்ளன. இவை சிவவழிபாட்டுக்குரிய சின்னங்களாகும். மேலும் இங்கு அகழ்வாய்வின்போது கண்டு பிடிக்கப்பட்ட மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்கள் சிறந்த நகர நாகரீகப் பண்பாடுடைய மக்கள் வாழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. கி.மு ஆயிரத்து ஐநூறாம் ஆண்டளவில் ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்து கங்கை சமவெளிவரை அவர்கள் வாழ்ந்து பரப்பிய நாகரீகத்தைவிட முற்போக்கான மாறுபட்ட தன்மையுடையனவாகக் காணப்படுவதால் திராவிட மக்களே சிந்துவெளி நாகரிக மக்கள் எனக் கருத இடமுண்டு. மேலும் அண்மையில் ஜேர்மன் நாட்டறிஞர்கள் செய்த ஆய்வின்படி தமிழ் மொழி இற்றைக்கு நாலாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பதும் தமிழ் மொழியிலிருந்தே ஏனைய திராவிட மொழிக் குடும்பங்கள் கிளைவிட்டெழுந்தன எனவும் ஐரோப்பா, மத்திய ஆசியா ஆகிய பகுதிகளை மேலும் ஆய்வு செய்தால் தமிழ் மொழியின் தொன்மை இன்னும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே தமிழ் மொழி உலகின் மிக மிகத் தொன்மையான மொழியெனபதும் அவர்களால் வழிபடப்பட்ட மதமே சைவசமயம் எனவும் ஆதாரபூர்வமாக அறியமுடிகின்றது.

சிந்துவெளி நாகரீக காலத்திற்குப் பின்னர் கி.மு ஆயிரத்து ஐநூறாம் ஆண்டளவில் இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்களினால் உருவாக்கப்பட்ட நாகரீகம் வேதகால நாகரிகம் என்பர். வேதங்களில் இந்திரன்,

*நன்மதிப்பை உடைமையாக்கிக் கொள்வதைவிட அதற்குத் தகுதியாவது சிறப்பு.*

வருணன், அக்கினி, சூரியன், உருத்திரன் போன்ற தெய்வங்களும் காயத்திரி, சவிதா போன்ற பெண் தெய்வங்களும் குறிப்பிடப்படு கின்றன. வேதங்களில் உருத்திரன் என அழைக்கப்பட்ட தெய்வம் சிவனாக இருக்க லாம் எனக் கருதப்படுகின்றது. வேதங்கள் ஆகமங்கள் உபநிடதங்கள் என்பன சைவ சித்தாந்தக் கோட்பாடுகளுக்கு மூல நூல் களாக விளங்கின.

வேதகாலத்தைத் தொடர்ந்து எழுச்சி அடைந்த இதிகாச புராணகாலத்திலும் சிவனே தனிப் பெரும் தெய்வமாக வழிபடும் மரபினைக் காணலாம். இராவணன் திக் விஜயம் செய்த போது குறுக்கே நின்ற கைலாச மலையைப் பெயர்க்க முயன்றான் எனவும் சிவனின் சீற் றத்திற்காளாகி இறைவனின் காற் பெருவிர லால் நசிபட்டான் எனவும் நாரதரின் வேண்டு கோளின்படி சாமகானம் இசைத்து இறை வனை மகிழ்வித்தான் என்பதும் வரலாறு. அத்துடன் சீதா பிராட்டியின் சுயம்வரத்தின் போது சிவதனுஷ் எனப்படும் சிவனால் வழங் கப்பட்ட வில்லை வளைத்தே சீதையைத் திருமணம் புரிந்தான் எனவும் கூறப்படு கின்றது.

மகாபாரதத்திலும் "பாசுபதம்" என்ற அஸ்திரத்தைப் பெறுவதற்காகச் சிவனை நோக்கி கடுந்தவம் செய்தான். புராணங்களும் சிவனையே முதன்மைப்படுத்துகின்றன. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும் மூர்த்திகளிடம் யார் பெரியவர் என்ற போட்டி எழுந்தபோது சிவன் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதிப் பிழம்பாக நின்றார். பிரம்மாவும் விஷ்ணுவும் அன்னப் பறவை வடிவிலும் பன்றி உருவிலும் அடியும் முடியும் தேடியும் காணமுடியாத ஒப்பற்ற தலைவனாகச் சிவன் விளங்கினார்.

இதேபோல தமிழ் மக்களின் சங்க காலத் தமிழ்ப்பண்பாட்டு மரபிலும் சிவனே தனிப்பெரும் தெய்வமாகப் போற்றப்படுகின் றான். கி.மு. 3ம் நூற்றாண்டிற்கும் கி.பி. 3ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட சங்கம் வைத்துத் தமிழ் ஆய்வு செய்யப்பட்ட காலத் தில் வடக்கே வேங்கட மலைக்கும் தெற்கே கன்னியாகுமரி முனைக்கும் இடைப்பட்ட பெரு நிலப்பரப்பில் சேர, சோழ, பாண்டியர் என்று கூறப்படும் மூவேந்தர்களும் பல குறு நில மன்னர்களும் ஆட்சி புரிந்து வந்தனர். தமிழர் மரபுக்கேற்ப ஐந்துவகை நிலங்களி லும் ஐந்து தெய்வங்கள். அதாவது குறிஞ் சிக்கு முருகனும் முல்லைக்குத் திருமாலும் மருதத்திற்கு இந்திரனும் நெய்தலுக்கு வருணனும் பாலைக்குக் கொற்றவையும் விசேடமாக வழிபட்டனர். இருப்பினும் இத் தெய்வங்களுக்கு மேலாக சங்க இலக்கியங் களில் "பிறவா யாக்கைப் பெரியோன்" (பிறப்பு இறப்பு அற்றவர்) "கொன்றை அலங் கல் அம் தெரியலாள்" (கொன்றை மலர் மாலையை அணிந்தவன்) கறைமிடற்று அண் ணல் (நஞ்சுண்டதனால் நீல கண்டத்தை உடையவன்) "நுதல் விழி நாட்டத்து இறையோன்" (நெற்றிக் கண்ணை உடை யவன்) "பிறங்கு நீர்சடைக் கரந்தன்" (கங்கை யைச் சடையில் வைத்திருப்பவன்) "ஏற்று ஊர்தியான்" (இடபத்தை வாகனமாக உடை யவன்) எனக் குறிப்பிடப்படும் பெயர்கள் சிவனையே குறிக்கின்றன.

சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத் தில் சமண பௌத்த மதங்களின் வருகை யால் மன்னர்களும் மக்களும் அம்மதக் கருத்துக்களால் நிலை தடுமாறி மதம் மாற லாயினர். சைவ மதம் சற்றுத் தளர்ச்சி அடைந்தது. இவ்வேளையில் ஞானசம்பந்தர் தோன்றினார். மூன்று வயதிலேயே உமை அம்மையின் ஞானப்பாலுண்டு ஞானம் கைவரப்பெற்றுத் தேவாரத் திருப்பதிகங் களைப் பாடினார். சமணர்களால் மதம்

*பிறர் உழைப்பில் வாழ்பவன் ஒருநாளும் முன்னேற முடியாது.*

மாற்றப்பட்டிருந்த பாண்டிய மன்னனையும் மக்களையும் சைவ மதத்தின் பெருமையை எடுத்துக் கூறியும் பல அற்புதங்கள்மூலம் மீண்டும் சைவ சமயத்திற்கு கொண்டு வந்தார். சமகாலத்தில் வாழ்ந்த நாவுக்கரசரும் சைவனாகப் பிறந்து சமணராக மாறிச் சைவதின் பெருமையைப் பக்திப் பாசுரங்கள்மூலம் சமணர்களின் கொடுமைகளை எல்லாம் தகர்த்தெறிந்தார். பல்லவ மன்னன் மகேந்திரவர்மனும் மக்களும் மீண்டும் சைவர்களாக மாறினர். சுந்தரரும் மாணிக்கவாசகரும் சைவ சமயத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெரியோர்களே. மணிவாசகப் பெருமான் வாய்பேச முடியாத ஊமைப் பெண்ணுக்கு ஞானம் வரச்செய்து பௌத்த துறவிகளுடன் வாதம் புரிய வைத்து சைவ சமயத்தின் பெருமையை நிலைநாட்டினார். நாயன்மார்களின் தேவார திருவாசகங்கள் தமிழ் வேதங்கள் என்பார்கள். இப்பக்திப் பாசுரங்களில் வேதங்கள், ஆகமங்கள் உபநிடதங்கள் புராண இதிகாசக் கருத்துக்கள் கோட்பாடுகள் செறிந்திருந்தன. இந்நூல்கள் வடமொழியில் அமைந்திருந்தமையால் வடமொழிச் செல்வாக்கும், பிராமணியச் செல்வாக்கும் தமிழ் மொழியிலும் தமிழர்தம் பண்பாட்டிலும் இணையலாயின. ஆலயங்களை ஆகம விதிப்படி அமைத்தலும் அந்தணர்கள் ஆலயங்களில் பூஜை செய்வதும் வேத மந்திரங்கள் வடமொழியில் ஓதுவதும் ஆரம்பமாகியது.

**"வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க**
**பூதபரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுத"**

எனச் சேக்கிழாரும்,

**"வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது**
**நாதன் நாமம் நமச்சிவாயவே"**

என நாவுக்கரசரும் குறிப்பிடும் பாடல் அடிகளிலிருந்து இதனை அறிய முடிகின்றது.

பல்லவர் காலத்தைத் தொடர்ந்து தமிழ்நாட்டை ஆட்சிபுரிந்த சோழப் பெருமன்னர் காலத்தில் சைவ மதம் பேரெழுச்சி பெற்றது. சம்பந்தர் முதலான அறுபத்து மூன்று நாயன்மார்களினதும் வரலாற்றைக் கூறும் பெரிய புராணமும், சிவபிரானதும், சிவகுமாரனாகிய முருகப்பெருமானினதும் வரலாற்றினைக் கூறும் கந்தபுராணமும் பெரும் சைவ காப்பியங்களாக தோன்றுகின்றன. சோழ மன்னர்களால் தஞ்சைப் பெருங்கோயில் போன்ற சிவாலயங்கள் தமிழ் நாட்டில் மட்டுமன்றி ஈழத்திலும் கடல் கடந்து தென்கிழக்காசிய நாடுகளிலும் அமைக்கப்பட்டன. ஆலயங்கள்தோறும் மன்னர்களும் மக்களும் சென்று வழிபடுவதுடன் பக்திப் பாசுரங்களை இசையுடனும் நடனக் கலைகள் ஊடாகவும் வழிபாடியற்றும் மரபும் தோன்றலாயின. அத்துடன் ஆலயங்கள் ஊடாகத் திராவிட கட்டிட சிற்ப ஓவியக் கலைகளும் எழுச்சி அடைந்தன.

13ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் வட இந்திய அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டன. வடமேற்கு எல்லைப் புறங்கள் ஊடாக பாரசீக நாட்டிலிருந்து இஸ்லாமியர்கள் படையெடுத்து வந்தனர். பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புகள்மூலம் பல புகழ்பெற்ற சிவாலயங்கள் தகர்க்கப்பட்டு விக்கிரகங்களில் இருந்த வைரம், மாணிக்கம், பொன் என்பன சூறையாடப்பட்டன. படிப்படியாக வட இந்தியா முழுவதையும் கைப்பற்றி சாம்ராச்சியங்களை அமைத்ததுடன் இஸ்லாமிய மதத்தையும் பரப்பலாயினர். சிந்து (ஹிந்து) நதி பாயும் பிரதேச மக்களை இந்துக்கள் எனவும் (ஹிந்துக்கள்) அவர்களது மதத்தை ஹிந்து எனவும் அழைக்கலாயினர். காலப்போக்கில் இப்பெயரே இந்தியா, இந்துக்கள் எனவும் வழங்கலாயிற்று.

பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னதாக ஐரோப்பியர் ஆட்சியும், கிறிஸ்தவ

மதமும் இந்தியாவை ஆக்கிரமித்தது. சம காலத்தில் இலங்கையிலும் இஸ்லாமிய மதம் ஐரோப்பியர் ஆட்சியும் கிறீஸ்தவ மதங் களும் பரவலாயின. இந்திய மக்கள் இந்து என்ற சொல்லை எவ்வித எதிர்ப்புமின்றி இயல்பாக ஏற்றுக்கொண்டனர். அன்றைய காலகட்டத்தில் இந்தியாவில் சைவம், சாக் தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய ஆறு மதங்களும் வேதாக மங்களை ஏற்றுக்கொண்டமையால் அவை வைதீக சமயங்கள் எனப்பட்டன. இந்து என்ற மதத்தில் அறுவகைச் சமயங்களும் உள்ளடக் கப்பட்டிருந்தன. இவற்றைவிட சமண, பௌத் தம் போன்ற சமயங்கள் புறச்சமயங்களாக விளங்கின.

சைவ சமயத்தின் வரலாற்றை நாம் ஆய்வு செய்யும்போது இந்து என்பது தனியான மதம் அன்று என்பதும் அவற்றை யாரும் தோற்றுவிக்கவில்லை என்பதும் அம் மதத்திற் குத் தனியான கொள்கைகளோ கோட்பாடு களோ வழிபாட்டு முறைகளோ கிடையா தெனத் தெளிவாகின்றது.

ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப் பற்றி ஆதிக்கம் செலுத்தியபோது ஆங்கிலக் கல்வியும் கிறீஸ்தவ மதமும் அதிகார மொழி யும் மதமாகவும் ஆயிற்று. ஆங்கிலேயரால் தோற்றுவிக்கப்பட்ட பாடசாலைகளில் ஆங் கிலம்மூலம் கல்வி கற்ற வர்க்கம் ஒன்று உருவாயிற்று. ஆங்கில மொழி மோகத்தில் மூழ்கி இந்திய மொழி, மதங்கள், பண்பாட் டினைவிட மேற்குத்தேசப் பண்பாடு மதம் என்பன உயர்வானது என்ற எண்ணம் மக் களிடையே உருவானது. பலர் மதம் மாறி யதுடன் பட்டக்கல்வி, பட்டமேற்கல்வி என் பன கற்கவேண்டும் என்ற ஆசையினால் இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கவும் ஆர்வம் காட்டலாயினர். இதனால் இந்திய மொழிகளைவிட மதத்தைவிட மேற்கு நாட்டு மொழி பண்பாடு மதம் என்பவற்றைத் தழுவும் நிலை மக்களிடையே ஏற்பட லாயிற்று.

இந்நிலையில் சுவாமி விவேகானந் தரின் தோற்றத்துடன் இந்துமதம் மீண்டும் புத்துயிர் பெற்று எழுச்சியடைந்தது. சுவாமி விவேகானந்தர் நரேந்திரர் என்ற இயற்பெயர் கொண்ட வங்காள தேசத்தவர். தாய்மொழி யான வங்காளத்துடன் ஆங்கிலம், சமஸ் கிருதம் கற்று தேர்ச்சி பெற்றதுடன் பீ.ஏ. பட்டம் பெற்றவராகவும் விளங்கினார். வேதங் கள் உபநிடதங்கள் பகவத்கீதை என்பவற் றையும் கற்றுச் சிறந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார். அதுமட்டுமன்றி குர்ஆன், பைபிள் ஆகிய இஸ்லாமிய, கிறிஸ்தவ மதக்கோட்பாட்டு நூல்களையும் நன்கு கற்றிருந்தார். பகவான் இராமகிருஸ்ண பரம ஹம்சரிடம் ஆன்மீக ஞானதீட்சை பெற்று முதலாவது சீடராகவும் விளங்கினார்.

அன்றைய காலகட்டத்தில் பாரத மக்களின் இழிநிலை கண்டு வேதனை அடைந்து வடக்கே காசி மாநகரிலிருந்து தெற்கே கன்னியாகுமரிவரை பரந்து விரிந் திருந்த பாரத தேசம் முழுவதும் ஊர் ஊரா கத் திரிந்து மக்களிடையே ஆன்மீக விழிப் புணர்வையும் இந்து மக்களின் தனிச்சிறப் பினையும் வலியுறுத்திப் பிரசங்கங்கள் புரிந்தார்.

இந்நிலையில் அமெரிக்காவின் சிக் காக்கோ நகரில் நடைபெற்ற சர்வமத மகா நாட்டில் இந்து மதத்தின் பிரதிநிதியாகப் பங்குபற்றும் வாய்ப்பு சுவாமிகளுக்குக் கிடைத்தது.

1893ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி உலகின் ஆன்மீக வரலாற்றில் மிகவும் முக்கியமான நாள். உலகின் பல் வேறு சமயங்களின் பிரதிநிதிகளும் பங்கு பற்றிய அம்மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரை உலகப் புகழ் பெற்றது.

*வலுவான காரணங்கள் வலுவான செயல்களை உருவாக்குகின்றன.*

உலகமே வியந்து இந்தியாவையும் இந்து மதத்தையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

"அமெரிக்க நாட்டுச் சகோதர சகோதரிகளே" என விழித்து உலகத்திலேயே மிகமிகத் தொன்மை வாய்ந்த துறவியர் திருக்கூட்டத்தின் சார்பாகவும் எல்லா மதங்களுக்கும் அன்னையான இந்து மதத்தின் சார்பாகவும் கோடானு கோடி இந்துக்களின் சார்பாகவும் சபையோருக்கு நன்றி கூறினார். இந்து சமயத்தின் தத்துவங்களையும் சிறப்புக்களையும் தெளிவான ஆங்கிலத்தில் ஆணித்தரமாக எடுத்தியம்பினார். சபையோர் மெய் மறந்து நின்றனர். சைவ மதமாக குடத்துள் விளக்காக விளங்கிய மதம் இந்து மதமாகப் புதுப்பொலிவு பெற்று குன்றிலிட்ட தீபமானது. சுவாமி அவர்கள் அமெரிக்காவின் பல்வேறு இடங்களுக்கும் சென்று பல சொற்பொழிவுகளை ஆற்றி இந்துசமயத்தின் கோட்பாடுகளை உலகறியச் செய்தார். அமெரிக்காவிலும் பின்னதாக ஐரோப்பாவிலும் ஏராளமான சீடர்கள் சுவாமிகளின் கருத்துக்களால் கவரப்பட்டனர். உலகின் பல்வேறு நாடுகளிலும் சுவாமிகளது குருநாதரின் பெயரினால் உருவாக்கப்பட்ட இராமகிருஷ்ண மிஷன்கள் இதற்குச் சான்றாகும்.

சுவாமிகள் ஐரோப்பிய பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பும் வழியில் இலங்கைக்கும் வருகை தந்தார். இங்கு கொழும்பில் மட்டுமன்றி கண்டி, மாத்தளை, அநுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் எனப் பல இடங்களுக்கும் சென்று ஆன்மீகச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். ஈழ மக்களும் அவரது கருத்துக்களால் கவரப்பட்டனர். அதன் விளைவுதான் இந்து என்ற சொல் இயல்பாக சைவம் என்ற சொல்லுக்கு மாற்றீடாக சைவ சமயத்தில் நுழைந்தது.

ஆங்கில மொழி, கிறீஸ்தவமதம் என்பவற்றின் ஆதிக்கத்தால் ஈழத்து மக்களும் கவரப்பட்டிருந்த சூழலில் ஆறுமுகநாவலர் அவர்கள் பல வழிவகைகள்மூலம் மீண்டும் சைவ சமயத்தினை எழுச்சிபெற வைத்தார். ஆலயங்கள்தோறும் பிரசங்கங்கள், பழைய சமய நூல்களை அச்சிட்டு வெளியிடுதல் பல கண்டன நூல்களை எழுதி வெளியிடுதல் என்பவற்றின் ஊடாகவும் பல சைவ சமயப் பாடசாலைகளை உருவாக்கி சைவ மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். நாவலர் அவர்களால் உருவாக்கப்பட்ட சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையிலே ஏராளமான தமிழ் நூல்கள் உரைநடை வடிவில் மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் அச்சிட்டு வெளியிடப் பட்டன.

நாவலர் அவர்களால் உருவாக்கப்பட்ட அச்சுயந்திரசாலையிலேயே 1889ஆம் ஆண்டு "இந்துசாதனம்" என்ற சஞ்சிகை நாவலர் வழிவந்தவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்து என்று சைவ அபிமானிகளால் உத்தியோகபூர்வமாக எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து "இந்துபோட்" இராஜரட்ணம் அவர்களால் இந்துக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. தமிழ் மக்களின் பண்பாட்டுடனான அதே வேளை ஆங்கில மொழியுடன் நவீன கல்விச் சீர்திருத்தங்களையும் இணைந்ததான சர்வதேச கல்வித்தரத்திற்கு உகந்ததான கல்வியை இக்கல்லூரிகள்மூலம் சைவ மக்கள் பெற்றுக்கொண்டனர். ஏறத்தாழ பல இந்துக் கல்லூரிகள் நூற்றாண்டை நிறைவு செய்து உள்ளன. இந்துக்களின் மைந்தர்கள் சர்வதேச அளவில் பரந்து உயர்ந்த கல்விமான்களாக, சட்ட வல்லுனர்களாக, வைத்திய கலாநிதிகளாக, பொறியியலாளர்களாக வாழ்ந்து இந்துக்களின் பெருமையைப் பறை சாற்றி வருகிறார்கள்.

சைவமும் இந்துவும் இரண்டறக் கலந்து விட்ட இன்றைய நிலையில் தமிழர்களின் மதம்

*உன்னைத் தியாகம் செய்வதன்மூலமே பிறரது இதயங்களை வெல்ல முடியும்.*

இந்துவா? சைவமா? என்ற போராட்டம் அவசியமானதா?

அத்துடன் இன்று சைவ மதத்தை அநுட்டிப்பவர்கள் தனித்து சிவவழிபாட்டுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. சிவபெருமானுக் குரிய சிவராத்திரி விரதத்தைக் கடைப்பிடிக் கின்ற அதேவேளை நவரச நாயகியான அன்னை பராசக்தியின் நவராத்திரி விழா ஆலயங்கள், பாடசாலைகள், வீடுகள் என எங்கும் விமரிசையாகக் கொண்டாடுகிறார் கள். சிவனின் மூத்த குமாரனான கணபதி யையும் மிகச் சிறப்பாக வழிபடுகின்றார்கள். விநாயக சதுர்த்தி விரதமும், விநாயகர் பெருங்கதையும் கஜமுக சங்கார விழாவும் விநாயகர் ஆலயங்களின் முக்கிய நிகழ்வு களாகும். முருக வழிபாடும் கந்தசஷ்டி விரத மும் கந்தபுராண கலாச்சாரமும் எம் மக் களுடன் பின்னிப் பிணைந்துள்ள அம்சங் களாகும். அதேபோல சூரிய வழிபாடு சூரி யனுக்கு அறுவடையின்போது முதல் பொங் கல் பொங்கிக் காணிக்கை செலுத்தும் தைப் பொங்கல் விழாவும் எமது பண்பாட்டுப் பெரு விழாவாகும். விஷ்ணு வழிபாடும் எம்மிடம் முக்கிய இடம்பெறுகின்றது. விஷ்ணு ஆல யங்கள் பலநூறு ஆண்டுகளுக்கு முற்பட் டவையாகும். இலங்கையின் பல பாகங்களி லும் காணப்படுகின்றன.

ஆகவே பல ஆயிரம் ஆண்டுகளா கக் காலத்துக்குக் காலம் பல போராட்டங் களைச் சந்தித்தும், சுடச்சுடப் பொன் ஒளிர் வதுபோல சைவ மதமும் மேலும் மேலும் புதுப்பொலிவு பெற்று விளங்குவதே சைவசம யத்தின் வரலாறாகும். சமயச் சான்றோர் களின் தீர்க்க தரிசனம் "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" என்பது இன்று முழு உலகிலும் நிதர்சனமாகி வரு வதைக் காண்கின்றோம். எனவே ஆன்மா வைப்போல சைவ சமயமும் அழிவில்லாது என்றென்றும் நித்தியமானது.

"பழையன கழிதலும் புதியன புகு தலும் வருங்கால மரபினாலே" என்ற சான் றோர் கூற்றின்படி சைவர்களாகிய நாம் கால நீரோட்டத்துடன் இசைந்து வாழ்தலே எமது எதிர்காலச் சந்ததியினருக்கு நன்மையளிக்க வல்லது.

பேரானந்தமயமான ஒப்பற்ற தலை வனான சிவன் காலத்திற்குக் காலம் தேவைக் கேற்ப பல்வேறு வடிவங்களை எடுத்து ஆன் மாக்களுக்கு அருள்புரிந்து வருகின்றான். இறைவன் பல்வேறு வடிவங்களை எடுத் தாலும் இறைவன் ஒருவனே. இதனையே,

**"ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்**
**திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ"**

என மணிவாசகப் பெருமான் குறிப் பிடுகின்றார்.

எனவே சைவர்களாகிய நாம் சைவ சமயத்தின் உன்னதமான தத்துவங்களை இயல், இசை, நடனம், நாட்டியம் போன்ற கலை வடிவங்கள் ஊடாக ஜனரஞ்சகப் படுத்தும் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். எம்மவர்கள் மதம் மாறாதது மட்டு மன்றிப் பிற மதத்தவரும் நம்மதத்தை நாடும் காலம் விரைவில் மலரும். எம் பணி சைவ சமயத்தை உலகெலாம் பரவும் வகை செய்தலாகும்.

**முயற்சி**

**ஒவ்வோர் ஆசிரியரும் சாதகனைச் சும்மா இருக்கச் சொல்கிறார். அதனையே புத்தகங்களும் கூறுகின்றன. ஆனால் அது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அப்படிச் செய்வதற்கு முயற்சி தேவைப்படுகிறது. உயர்ந்த நிலையை அடைந்தவர்கள்கூட, அதற்கு முன்பாக முயற்சி செய்திருப்பார்கள்.**

-ரமணர்-

*நம்பிக்கை இல்லாதவர் ஒவ்வொரு வாய்ப்பிலும் துன்பத்தைக் காண்கிறார்.*

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



### 73. முதல்வனுக்கு இன்ப நுகர்ச்சியில்லை

இன்பதனை எய்துவார்க்கு ஈயும் அவற்கு உருவம்
இன்ப கனம் ஆதலினால் இல்.

**பொருள்:**

தன்னை அடைந்தார்க்கு இன்பத்தை வழங்குகின்ற இறைவன் இன்ப மயமான வடிவினன். அப்படிப்பட்ட அவன் அவ்வின்பத்தைத் தான் நுகர்தல் என்பது இல்லை.

**சொற்பொருள்:**

இன்புதனை- இன்பத்தை, எய்துவார்க்கு- தன்னை அடைந்தார்க்கு, ஈயும்- தருகின்ற, அவற்கு- இறைவனுக்கு, உருவம் இன்ப கனம்- இன்ப மயமான வடிவம், ஆதலினால்- ஆதலால், இல்- அப்படிப்பட்ட அவன் அவ்வின்பத்தைத் தான் நுகர்தல் என்பது இல்லை.

**விளக்கம்:**

**இறைவனுக்கு நுகர்ச்சியில்லை:**

முந்திய செய்யுளில், பெண்மகள் ஒருத்தி ஆடவன் ஒருவனை அணைந்து இன்புறுவதை உவமை காட்டி, உயிர் சிவத்தை அணைந்த பொழுதே அதற்கு இன்ப நிலை உண்டாகும் என்பது கூறப்பட்டது. அந்த உவமையின்படி தம்மிற் கூடிய ஒருவன் ஒருத்தி ஆகிய இருவருமே இன்பத்தைத் துய்க்கின்றனர். அதன்படி பார்த்தால், முத்திநிலையில் சிவத்தை அணைந்த உயிர் இன்பத்தைத் துய்ப்பது போல உயிரை அணைந்த சிவமும் இன்பத்தை நுகர்தல் வேண்டும் என்று ஆகிறது. அப்படியானால், இறைவனுக்கும் இன்ப நுகர்ச்சி உண்டோ? என்ற ஐயம் எழுகிறது. அவ்வையத்தை இச்செய்யுளில் நீக்குகின்றார் ஆசிரியர். உயிருக்கு இன்பமேயன்றி இறைவனுக்கு இன்பமில்லை என்று தெளிவுபடுத்துகிறார்.

**இரண்டு காரணங்கள்:**

இறைவனுக்கு நுகர்ச்சியில்லை என்பதை இரண்டு காரணங்கள் காட்டி நிறுவலாம். 1) முன்பு இல்லாது பின்பு பெற்றபொழுதே நுகர்ச்சி என்பது உண்டாகும். உயிரிடத்தில் இன்பம் இயற்கையாக இல்லை. இன்பத்தைத் தன்னிடம் கொண்டிராத உயிரே இறைவனைச்

*கீழே விழுந்தவனைப் பார்த்துச் சிரிக்கவேண்டாம். உன் பாதையும் வழுக்கல் நிறைந்தவை.*

சார்ந்து அவனது இன்பத்தைப் புதிதாகப் பெற்று நுகரும். இறைவனிடத்தில் இன்பம் என்றும் இருத்தலால் அவனே இன்ப வடிவம் ஆதலால், அவன் இன்பத்தைப் புதிதாகப் பெற்று நுகர்தல் இல்லை.

2) அனுபவித்தல் என்பதற்கு அழுந்தி நிற்றல் என்பது பொருளாகும். அந்த அந்தப் பொருளில்த்தான் அதுவேயாய் அழுந்தி நிற்றல் ஆன்மாவின் இயல்பேயாகும். இறைவன் எதிலும் தோயாது நின்று அறிபவன். அவன் எதனையும் அழுந்தியறியான். ஆகவே, அவனுக்கு எதிலும் நுகர்ச்சியில்லை என்பது இனிது விளங்கும்.

**திருவாசகச் சான்று:**

இனி, மூன்றாவதாக இறைவனை அனுபவித்த பெரியோர் அருளிச் செய்த அனுபவ மொழிகளும் மேற்கூறிய கருத்தை வலியுறுத்தும். திருவாசகப் பாடற் கருத்து ஒன்றினை இங்கு எடுத்துக் காட்டலாம்.

"எம்பெருமானே, அடியேன் அனுபவிக்கும் படியாக உன்னைத் தந்தாய். உன்னைத் தந்ததற்கு மாற்றாக என்னைக் கொண்டாய். நம் இருவருள் யார் அறிவுத் திறம் படைத்தவர்?

உயர்ந்த பொருளைக் கொடுத்து இழிந்த பொருளைக் கொண்டவரா, இழிந்த பொருளைக் கொடுத்து உயர்ந்த பொருளைப் பெற்றவரா, இப்பண்டமாற்றில் யார் வல்லவர்?

அடியேன் உன்னைப் பெற்றதனால் எல்லையில்லாத ஆனந்தம் அடைந்தேன். நீ என்பால் பெற்றது யாது? ஒன்றும் இல்லை.

கோயில் திருப்பதிகத்தில் வருகின்ற ஒரு பாடற்பொருள் இது. உலகில் நெல்லைக் கொடுத்துப் பதரைக் கொள்வார் உண்டோ? அவ்வாறு கொண்ட பேதையர் செயல் போன்றது இறைவன் செயல் என்று பழிப்பது போலக் கூறி இறைவனது கைம்மாறு கருதாத பெருங் கருணைத் திறத்தினைப் போற்றுகிறார் மணிவாசகர்.

சிவத்தினிடமிருந்து சீவன் பெற்றது ஆனந்தம். சீவனிடமிருந்து சிவன் பெற்றது என்ன? என்று வினவி, இறைவனுக்கு இன்ப நுகர்ச்சி இல்லை என்ற கருத்தைப் பெற வைத்துள்ளமை காணலாம்.

### 74. இன்பக் கூடலுக்கு உவமை

தாடலை போல் கூடியவை தாம் நிகழா வேற்றின்பக்
கூடலை நீ ஏகம் எனக் கொள்.

**பொருள்:**

தாள், தலை என்னும் இரு சொற்கள் புணர்ந்து, இரண்டாகக் காணப்படுதல் இன்றித் "தாடலை" என ஒரு சொல்லாய் நிற்கின்றன.

இச் சொற்புணர்ச்சி போல உயிரும் சிவமும் ஆகிய இரண்டும் தம்முட் கலந்து வேறாய் நில்லாத பேரின்பப் புணர்ச்சியையே ஒன்றாதல் ஆகிய முத்திநிலை என்று நீ கொள்வாயாக.

மாணவனை முன்னிலைப்படுத்தி ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

*வார்த்தைகளில் குற்றமுடையவன் சான்றோர்களால் இகழப்பட்டு தாழ்வு நிலைக்கு ஆளாகிறான்.*

**சொற்பொருள்:**

தாடலை போல்- தாள், தலை என்னும் இரு சொற்கள் தம்முட் கூடித் தாடலையென ஒரு சொல்லே போல் ஒன்றாய் நிற்கின்றன. அதுபோல், கூடியவை- தம்முட்கூடிய உயிரும் சிவமும் ஆகிய இரு பொருளும், தாம் நிகழா வேற்று இன்பக் கூடலை- வேறு நில்லாத பேரின்பப் புணர்ச்சியையே, நீ- மாணவனே, நீ, ஏகம் எனக் கொள்- ஒன்றாதல் ஆகிய முத்தி நிலை என்று உணர்வாயாக.

**விளக்கம்:**

**தாடலை போல் கூடல்:**

உயிர் சிவத்தோடு கூடி நிற்கும் முறைமைக்கு உவமையாக்ச் சொற்புணர்ச்சி ஒன்றினை எடுத்துக் காட்டுகிறார் நம் ஆசிரியர்.

"தாடலை" என்பதில் தாள், தலை என்னும் இரு சொற்கள் இணைந்துள்ளன. ஆயின் அவை வேறாகக் காணவாராமல் ஒரு சொல் போலவே நிற்கின்றன. தாடலை என்பதை ஒரு சொல் என்றும் கொள்ள முடியாது. இரு சொல் என்றும் கூற ஒண்ணாது. அது போல உயிர் சிவத்தோடு சேரும்போது ஒரு பொருளேயாகி விடாமலும், இரண்டு பொருளாய் நில்லாமலும் இயைந்திருக்கும்.

முத்தியில் இன்பத்தைத் துய்க்கின்ற உயிரும், அதற்கு அவ்வின்பத்தைக் கொடுக்கின்ற சிவமும் ஆகிய இரு பொருளும் உள்ளன. ஆயினும் அவை அங்ஙனம் பிரித்தறிய வாராமல் ஒன்றாய் உள்ளன என்பதாம். இக்கருத்தை அடுத்த செய்யுளிலும் எடுத்துக்கொண்டு மேலும் விளக்குவார் ஆசிரியர்.

இறைவனோடு இரண்டற்றுக் கூடி நின்று நுகரும் இன்பத்தை விரும்பிய வாதவூரடிகள் "புல்லிப் புணர்வது என்று கொல்லோ?" (புணர்ச்சிப்பத்து) என்று அருளியமை இங்கு நினையத்தக்கது. அருணகிரி நாதரும் இந்நிலையை விரும்பி,

"இறவியொடு பிறவியற நீயும் நானுமாய்
ஏகபோகமாய் இறுகும் வகை பரமசுகம் அதனையருள்"

என வேண்டி நிற்பார்.

**தாள், தலை ஆகியவை நினைப்பிக்கும் பொருள்:**

இனி, இது போன்ற புணர்மொழிகள் வேறு பல இருக்கவும், தாடலை என்ற இதனை ஆசிரியர் எடுத்துக் காட்டியதிலே ஒரு குறிப்பு உண்டு. தாள் என்பது இறைவனது திருவடியைக் குறிக்கும். தலை என்பது உயிரைக் குறிக்கும்.

உயிர்களாகிய நம்மிடம் நான் என்ற அகங்காரம் உள்ளது; எனது என்ற மமகாரம் உள்ளது. இந்த இரண்டும் இருப்பதைக் காட்டும் அடையாளமே நமது நிமிர்ந்த தலை.

நம்மிடமுள்ள இந்தச் செருக்கு அடியோடு எப்போது போகின்றதோ அப்போது இறைவனது திருவருளுக்கு உரியவர் ஆவோம். இச் செருக்கினைப் போக்க வல்லது வழிபாடு. "பெருமானே, எல்லாம் என் செயலால் நடக்கிறது என்று எண்ணி இறுமாந்திருந்தேன். எனக்கென்று என்ன செயல் இருக்கிறது? நீதான் உள் நின்று இயக்குகிறாய். நீதான்

*அதிஷ்டத்தை நம்பாதே, கடுமையான உழைப்புதான் வாழ்க்கையில் முன்னேற உதவும்.*

செய்விக்கிறாய். எனவே எல்லாம் உன் செயலேயாகும்" என அடியற்ற மரம்போலத் தரையில் வீழ்ந்து இறைவனது திருவடியில் தலை வைத்து வணங்கினால் எல்லாச் செருக்கும் போய்விடும். தலையைப் பெற்ற பயன் இறைவன் தாளில் விழுந்து வணங்குவதுதான். இவ்வாறு வணங்குவதையே திருவடியைச் சூடுதல் என்றும், திருவடியைப் புனைந்து கொள்ளுதல் என்றும் குறிப்பிடுவர்.

இனி, ஞான நெறியில் நிற்கும் மாணாக்கர் தமது உடல், பொருள், ஆவி மூன்றனையும் சிவனது உடமையாக உணர்ந்து அவற்றை அருட்குருவினிடத்தில் நீர் வார்த்து ஒப்புவிப்பர். அருட்குரவர் அவை முழுவதையும் தம்முடையனவாக ஏற்றுக்கொண்டு, அம்மாணாக்கரது பழவினை முழுவதையும் பற்றற ஒழித்து, அதன்பின் தமது திருவடிகளை அவரது தலைமேற் சூட்டிப் பிறவித் தொடக்கு அறும்படியாக ஞானத்தைத் தந்தருள்வர்.

எனவே, தாளின்கீழ் தலையை வைத்தல் என்பது ஆன்மாவின் செயலாய் ஆன்மா தன் முனைப்பு அடங்கி அருள்வழி நிற்றலைக் குறிப்பதாகும். தலையின்மேல் தாளினை வைத்தல் என்பது ஆசான் மூர்த்தியாகிய இறைவன் செயலாய் பாசப் பற்றறுத்து அருள் வழங்குதலைக் குறிப்பதாகும்.

இவற்றையெல்லாம் நினைப்பிக்கும் வகையிலே தாள், தலை என்னும் சொற்களை எடுத்துக் கொண்டார் நம் ஆசிரியர் என்று கருதலாம். வேறு ஏதேனும் ஒரு புணர்மொழியை எடுத்துக் கொண்டிருந்தால் இப்பொருள்கள் எல்லாம் நம் சிந்தனைக்கு வருமா என்ன?

(தொடரும்...

எந்நிதியும் தந்திடுவான் என்றுனது வாசலில்
வந்துனை நித்தம் வணங்குவோம் - சந்நிதியில்
தொல்லைகள் நீக்கியிடர் தீர்த்திடும் கந்தனே
நல்லருள் தாவடியார் நமக்கு.

வாடிவரும் பக்தர் வறுமைதனைப் போக்கிட
நாடியருள் சந்நிதி நாயகனே - தேடிநீ
கோடியா யின்பங் கொடுத்து மகிழ்விக்க
ஓடி வந்துன் அன்பர்க் கருள்.

பூவ ரசமரத் தில்கோவில் கொண்டடியார்
பாவங் களிக்கும் புண்ணியனே - காவலனாய்
பொன்னெழில் சந்நிதியில் பாடிப் பணியாற்று
மென்னை யுனக்கடியா னாக்கு.

ஆற்றங் கரையிருந்து ஆட்சிதந் தெம்முன்னே
தோற்றி யருளுந் தயாளனே - போற்றி
மறந்துமுன் நாமம் மறந்திடா தெம்மை
பிறந்திறக்க வைத்திடாது பார்.

- சீ சாந்தநாதன் -

# சீமானைப் போலிருந்து செகத்தினிலே வாழ்ந்திடலாம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

ஆயிலிய நட்சத்திரம், மாதாமாதம் வரும்போது தவத்திரு யோகர் சுவாமிகளை உலகமானது கரங்குவித்து வழிபாடாற்றுகின்றது. இலங்கையிலும் அது சிறப்பாக அனுட்டிக்கப்படுகிறது. அவர் அடியவர்களுக்கு வரமீந்த கொழும்புத்துறை, சிவதொண்டன் நிலையம், மற்றும் செங்கலடி, திருகோணமலை, கிளிநொச்சி, நல்லூர், கொழும்பு, மாத்தளை, பேராதனை, கம்பளை, நாவலப்பிட்டி, மாவிட்டபுரம், சுன்னாகம், கீரிமலை ஆகிய இடங்களில் இவரைத் தரிசித்தபோது ஆயிரம் ஆயிரம் அடியார்கள் சீமான்களாகப் பேறு பெற்றனர்.

**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எமையாண்ட அத்தனே யோகர் சுவாமிகள்**

சிவனொளிபாத மலையிலே சூரியோதயக் காட்சியினைக் கண்டது முதல், சிவத்தோடு ஒன்றித்து, சிவப்பிரம்மத்தின் திருவருள் சுரக்கப் பெற்றார். தன்பாட்டிலேயே தனக்குள்ளிருக்கும் இறைவனோடு பேசத் தொடங்கினார். இவருக்குள் ஏதோவொரு தெய்வீக ஒளி பிரவாகிப்பதை உணர்ந்த இவரது தந்தையார் அம்பலவாணர் அவர்கள் இவரைத் தான் கடமைபுரிந்த மஸ்கெலியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கே அனுப்பி வைத்தார்.

## கடவுள் மனிதன்

இரணைமடுக் குளக் கட்டுமானப்பணி துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை, அதற்குப் பொறுப்பாக இருந்த பொறியியலாளரான பிறவுண் என்ற ஆங்கிலேயர் இவரது ஆங்கிலப் புலமையின் தேர்ச்சியைக் கண்டு தொழிலாளர்களிடையே சக வாழ்வினைத் தோற்றுவித்தார். அது மட்டுமல்ல கடமைகளுக்கப்பால் பிரார்த்தனையிலும், தியானத்திலும் ஈடுபட்டுக் கொள்வதை அவதானித்த பிறவுண் இவரைக் "கடவுள் மனிதன்" என அழைக்க லானார். கடமை கண்ணியம் கட்டுப்பாடு கணக்கு வழக்கு எல்லா விடயங்களிலும் யோகநாதன் சித்தி பெற்றதனால், இவருக்கு வீடு செல்வதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டது. அவ்வேளைகளில் யோகநாதன் மாவிட்டபுரம், நல்லூர், கொழும்புத்துறை ஆகிய இடங்களுக்கு அடிக்கடி சென்று வருவதனை ஒரு ஒழுங்குமுறையாகக் கடைப்பிடித்து வந்தார். இதன் பிரகாரம் யோகரிடத்தே ஒரு உள்ளொளி பெருகுவதை பிறவுண் அவதானித்தார். நீ ஒரு கடவுள் மனிதன் என்றார்.

## ஆரடா நீ

தன்னுடைய வேலைகளில் நாட்டம் மெல்ல மெல்லக் குறையக் குறைய, நல்லூரில் நாட்டமும் நம்பிக்கையும், ஈர்ப்பும் அதிகரித்தது. கொழும்புத்துறை திருஞானசம்பந்தர், இராமலிங்கம் என்பவர்களோடு யோகநாதன், செல்லப்பரைத் தரிசிப்பதற்காக நல்லூர் தேரடிக்குச் சென்றனர். யோகநாதனைக் கண்ட செல்லப்பர் சீறிப்பாய்ந்தவராய்,

*சத்தியத்திடம் பக்தி கொண்டவர்கள் உயர்ந்த கலைகளின் நுட்பத்தை அறிந்தவர்கள்.*

ஆரடா நீ!
தேரடா உள்!!
தீரடா பற்று!!! என்றார்.

இதைக்கேட்ட யோகர் வியப்போடு மலைத்து நின்றார். நல்லதொரு சீடன் கிடைத்துவிட்ட காரணத்தினால் யோகரை உள்வாங்கினார். ஆசீர்வதித்தார். அருகில் அமர்த்தினார். ஆற அமர நோக்கிப் பார்வையால் வசீகரப் படுத்தினார். வாலாயப்படுத்தினார்.

"உன்னைத்தான் பார்த்திருந்தேன்
உனக்கே பட்டஞ் சூட்டப் போகின்றேன்
வா! வா!" என்று அருகிலமரச் செய்து,

அருள் கலந்த அறிவுரைகளை அகம்மலரவும் புளகாங்கிதம் எய்தவும் தேனென உரைத்தார்.

யோகரிடம் ஏதோவொரு மின்சாரம் பாய்ந்தாற்போல ஒரு ஒளிக்கற்றை ஊடுருவியது. ஒவ்வொரு மூச்சும் ஒவ்வொரு பாடலாகப் பிரவாகித்தது. அவை ஒவ்வொன்றும் எக்காலத்துக்கும் பொருந்துவனவாய் நற்சிந்தனையாய் மிளிர்கின்றன.

"ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்
பேசாதன வெல்லாம் பேசினான் - கூசாமல்
நின்றேன் நீ யாரடா வென்றே யதட்டினான்
அன்றே யான் பெற்றே னருள்"

"தன்னை யறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப் போல ஆதரிக்கும் ஆறுமுகன் சந்நிதியில்
தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடாவுள் ளென்றான் சிரித்து"

## குருநாதன்

எங்கள் குருநாதனான எழில் நல்லை வாசன், இங்கும் அங்கும் எங்குமே பிரகாசமானவன்! மங்களகரமான வாக்கியப் பிரசாதனாக, மாறாத மௌனனாக, தியானப்பிரவேசனாக என்னுள்ளே வாசஞ் செய்கின்ற மாட்சி அலாதியானதாக யோகர் பாடுகின்றார். வஞ்சம் பொறாமை கோபம் வைத்திடும் மாந்தர்க்கும் அஞ்சாதே என்று அருளை ஈந்திடும் சுதந்திரன்! அப்பேற்பட்ட குருநாதனான செல்லப்பனின் கஞ்சமலர்ப் ப(ா)தத்தைக் கனவிலும் மறவாதிருப்போர்க்குப் பஞ்சாமிர்தம் போல் நெஞ்சில் பண்புடன் இனிப்பவனாகின்றான்.

## இரும்பு பொன்னாகியது

குருநாதனைக் கண்டு அவரது கர்ச்சனையும், அதட்டலும் யோகரின் மேனியில் பட்டபோது, யோகர் தெளிவு பெற்று, யோகர் சுவாமிகளானார். நாளடைவில் மெய்ப்பொருளான ஞானம் கைவரப்பெற்று அஞ்ஞானம் தீர்ந்து அகவொளியாயும் சிவனொளி கொண்டார். இரும்பாயிருந்த தேகம் பொன்னாக மாறி கரும்பாகி யாவரையும் கவர்ந்தது. இத்தகு நிலையினை ஞானமுறுக்கு என்பர். தனது உடல் மொழியினால் திடமான நெஞ்சையும் உடனாகிக் கனியவும் பணியவும் வைத்திட வல்லவராகத் திகழ்ந்தார். பொன்னாக்கிய நான்கு மகாவாத்தியங்கள் அற்புதமே!

*பகைமை வைத்துக்கொண்டு வாழ்த்த முடியாது. வாழ்த்தும்போது பகைமை நிற்காது.*

**குரு பணிவும் பாட்டும்**

சுவாமிகள் குருவாக்கைத் தட்டாது, அவர் உபதேசித்த நான்கு மகாவாக்கியங்களையும் தாரக மந்திரமாகக் கொண்டு இந்த மண்ணுக்கு வரமீந்தார். தானும் வரமானார். இதோ அந்த முனி சொன்ன மொழி நான்கு:-

ஒரு பொல்லாப்பும் இல்லை
முழுதும் உண்மை
நாமறியோம்! ஆரறிவார்?
எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்.

இந்த மகா வாக்கியங்களைச் சீடனான யோகர்சுவாமிகளின் செவியில் கொட்டியபின் செல்லப்பா சுவாமிகள் வெறுங்கோதாயினர்.

இதேபோல, விவேகானந்தருக்கும் இராமகிருஷ்ணர் உபதேசங்களைக் கொட்டிய பின்னர் மிகவும் வறியவரைப் போலாகினார். இதுவும் ஒருவிதமான,

கொடுப்பதும் கொள்வதும்
கொய்தலும் கொழித்தலும்
எடுப்பதும் விடுவதும்
ஏற்பதும் நோற்பதுமாகும்!

இரண்டற்ற ஒன்றான அத்துவித உண்மைகளாக, நானே அவன். அவனே நான். ஒன்றில் இருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. நாம் அனைவரும் சிவத்தின் அம்சம். அதை நாம் அடிக்கடி மறந்து போகின்றோம். உன்னை இறைவனுக்கு ஒப்புக்கொடுப்பாயானால், உனக்கு எந்நாளும் இன்பமேயன்றித் துன்பமில்லை. வண்டுகள் பூவைக் கிண்டித் தேனை உண்டு ஒன்றுமறியாமல் கிடப்பதுபோல, பக்தனும் சித்தமாகிய பூவைச் சிவத்தியானத்தால் கிண்டி ஆங்குவரும் ஆனந்தத்தேனை உண்டு, நன்மை தீமை, இன்ப துன்பமெதுவுமின்றி பேரானந்த வாழ்வில் திளைக்கின்றான்.

"பணிதலைக் கொள்ளல் பாரினி லின்பம்
பணி பயன் கருதாது ஆற்றிடலின்பம்
பணி முயன்றாற்றி முற்றுறலின்பம்
பணி யெலாஞ் சிவபணி யாக்கிடலின்பம்"

"யாவரும் சமமென வுணர்ந்திட லின்பம்
யாவரும் சகோதர ரென்பது மின்பம்
யாவரும் நலனுற வுழைத்திட லின்பம்
யாவரும் ஒன்றென ஒன்றிட லின்பமே"

"எங்கும் மாதவர் மாமறை முழக்கம்
எங்குஞ் சான்றோர் அறவுரை முழக்கம்
எங்குந் தொண்டர் சுதந்திர முழக்கெனில்
பொங்கும் இன்பம் புவிமிசைச் சிறந்தே"

அந்த நாளிலேயே அதாவது 1948 மலர் 12இல் (நற்சிந்தனை) சுவாமிகள் பாடியுள்ளார்.

*மற்றவர்களின் பாராட்டுக்களைவிட அவர்களின் நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொள்.*

## தேரடி

நல்லூர்த் தேரடியிலேதான் இவ்வுலகின் பேரின்பம் நிறைந்திருக்கின்றது. அதிலே ஒரு ஈர்ப்புச்சக்தி எல்லோரையும் கவர்ந்து இழுக்கின்றது. செல்லப்பரும் யோகரும் முருகனோடு கலந்து இருந்து விளையாடிய அற்புத பீடம் அது. எனவே தான் அடியார்கள் தேரடியில் இருந்து வரம் பெறுவதுண்டு.

ஆரறி வாரென அடிக்கடி ஓதும்
பேரறிவாளன் பேர் செல்லப்பன்
பாரறியாத பயித்தியக்காரன்
தேரடிப் படியில் தினமுமிருப்பான்.

தேரடியில் இருக்கும் சுகத்திற்கு ஈடிணை எதுவுமில்லை. நலமறியமாட்டாமல் நான் என்று சொல்லிப் பலபேசும் பாவிகாள்! இந்நிலவுலகில் நல்லூரெனும் பதியை நாடித் தரிசித்தால் பல்லூழி வாழலாம் பாரீர்!

## வில்லங்கம் சுகமாகும்

வில்லங்கம் வருவது சுகத்திற்கேயாகும். சண்டையும் சமாதானமும், கூடுதலும் பிரிதலும், இன்பமும் துன்பமும், ஆணும் பெண்ணும், பிறப்பும் இறப்பும் யாவுமே உயிருக்கு வேண்டிய உணவுகளே! அது உணர்வுகளுமாகும். தானே வளர்த்த பசுமாடு சுவாமிகளைக் கண்டு துள்ளிக் குதித்து விளையாடியபோது சுவாமிகள் நோதல்பட்டார். வைத்தியமனையிலே அனுமதிக்கப்பட்டார். அன்பர் திருநாவுக்கரசர் கண்ணும் கருத்துமாக சுவாமிகளைப் பராமரித்தார்.

இது ஆண்டவன் தந்த வரப்பிரசாதம்! நோவும் எனக்கல்ல! நோயும் எனக்கல்ல! இரண்டுமே இந்த நிலையில்லா உடலுக்கேயாகும்.

நீ உடம்பன்று
நீ மனமன்று
நீ புத்தியன்று
நீ சித்தமன்று
நீ ஆத்மா
ஆத்மா ஒருநாளும் அழிவதில்லை
ஆத்மா என்பது அவனே
அவனே நான். நானே அவன்.

ஆனால் நீ கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. அதாவது நீ தருமநெறியில் பிசகாதே. சிவன் சொத்தாக ஒவ்வொரு உயிரையும் போற்றி நடந்துகொள். எனவே உனக்கு எதிரியென்று எவரும் முன்வரமாட்டார்கள். இப்போ நீ ஒரு தூய ஆத்மா. சீவன் சிவனென்னும் தெளிவு உண்டாகும்.

**ஆன்மீகச் சிந்தனை**

ஈரமான விறகுக் கட்டையாக இருந்தாலும் அது நெருப்பிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்து விடும்போது நெருப்பின் சொருபத்தை அடைந்து விடுகிறது. அதுபோல் பாவிகளாக இருந்தாலும்கூட இறைவனிடம் தங்களை முழுமையாக ஒப்படைப்பவர்கள் பாவங்களிலிருந்து நீக்கப்படுகிறார்கள்.

*உள்ளத்தில் எழும் ஒழுங்கற்ற எண்ணமே உண்மையில் உனக்கு எதிரி.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| செல்வி டிலக்சனா ஸ்ரீபாலன் | கனடா | 7000. 00 |
| செல்வி அக்ஷியா ராஜ்குமார் | கனடா | 5000. 00 |
| லோகேஸ்வரன் சத்தியபாமா குடும்பம் | நீர்கொழும்பு | 5000. 00 |
| திருமதி சீ பத்மாவதி | சங்கானை | 3000. 00 |
| வி. திருக்கோணேஸ்வரி | வத்தளை | 6000. 00 |
| சி. சச்சிதானந்தம் | வட்டுக்கோட்டை | மரக்கறி, 1மூடை அரிசி |
| R.S. தனபாலன் | வட்டுக்கோட்டை | 1புட்டி அரிசி |
| சந்திரகுமாரி தேவராசா | பருத்தித்துறை | 10000. 00 |
| வ. சண்முகநாதமுதலி மூலம் பரணிதரன் அக்ஷரா | லண்டன் | 2000. 00 |
| இ. சொக்கலிங்கம் ஆசிரியர் | நாவற்குழி | 1000. 00 |
| பூவேந்தன் பகல்பராமரிப்பு நிலையம் | சாவகச்சேரி | 15000. 00 |
| அ. கஜந்தனா | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| ஐ. நாகேந்திரம் | கனடா | 10000. 00 |
| ஐ. முகுந்தன் தோப்பு | அச்சுவேலி | 5000. 00 |
| இ. ராஜேஸ்வரி | பருத்தித்துறை | 1000. 00 |
| S. ரஜீவ் | சுன்னாகம் | 5000. 00 |
| கு. ஈஸ்வரகுமார் | நீர்வேலி | 2000. 00 |
| S. சிவகுமாரி | கொழும்பு-15 | 9000. 00 |
| ந. ஈசன் | லண்டன் | 25000. 00 |
| திருமதி மகேந்திரன் பத்மாதேவி | சுவிற்சலாந்து | 23500. 00 |
| T. கணேசநாதன் | குப்பிளான் | 5000. 00 |
| க. கேதீஸ்வரன் | கனடா | 1000. 00 |
| சி. வள்ளிநாயகி | அச்சுவேலி | 12000. 00 |
| திருமதி சண்முகநாதன் குடும்பம் | சுழிபுரம் | 5000. 00 |
| ஞா. வினோரஞ்சினி | பொலிகண்டி | 1100. 00 |
| S. குணராஜ் | கொக்குவில் | 10000. 00 |
| லோ. சிவகாமசுந்தரி | தெல்லிப்பளை | 1000. 00 |
| திருமதி வ. கமலச்சந்திரன் | இணுவில் | 500. 00 |
| தி. மகாதேவன் | கொக்குவில் | 1புட்டி பருப்பு, 1மூடை அரிசி |
| த. மேகநாதன் | யாழ்ப்பாணம் (கல்விப்பணி) | 10000. 00 |
| ஆ. சத்தியபாமா | இடைக்காடு | 2000. 00 |
| க. அருந்தவராசா | அளவெட்டி | 500. 00 |
| S. ராஜேஸ்வரி | அச்சுவேலி | 2000. 00 |

*மனதின் தன்மையே மனிதனின் தன்மை, மனதின் மாண்பே மனிதனின் மாண்பு.*

| | | |
|---|---|---|
| சு. புஸ்பராணி | கொழும்பு | 5000. 00 |
| வீ. சந்திரகுமாரன் | கொழும்பு | 3000. 00 |
| சி. தங்கவேல் குடும்பம் | சுவிஸ் | 10000. 00 |
| K. சிவலிங்கம் | வவுனியா | 2000. 00 |
| நல்லையா குடும்பம் | கோண்டாவில் | 1000. 00 |
| இராசையா குடும்பம் | கோண்டாவில் (கனடா) | 1500. 00 |
| ஜெயதாசன் குடும்பம் | கோண்டாவில் | 1000. 00 |
| திருமதி ராமேஸ்வரன் | கனடா | 1000. 00 |
| A. ஞானமூர்த்தி | கரவெட்டி | 4000. 00 |
| ரா. ஓவியா | கல்வியங்காடு | 10000. 00 |
| பொ. தர்மராஜசிங்கம் | தெல்லிப்பளை | 5000. 00 |
| இ. ரத்தினசீலன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| க. இரவி | கோப்பாய் | 5000. 00 |
| ர. அஞ்சனன் | வெள்ளவத்தை | 2000. 00 |
| சங்கரப்பிள்ளை சண்முகம் | அவுஸ்திரேலியா | 45000. 00 |
| அ. சுபதீபன் | நீர்வேலி | 25000. 00 |
| Dr R. ராமச்சந்திரன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| S. ராஜேஸ்வரன் | நீர்கொழும்பு | 1000. 00 |
| மு. யோகேஸ்வரி நினைவாக | கொக்குவில் | 2000. 00 |
| R. மணிவாசகன் | அவுஸ்திரேலியா | 15000. 00 |
|ச. கஜந்தன் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| க. தீபா | சாவகச்சேரி | 1000. 00 |
| சு.ம. உத்தமிப்பிள்ளை நினைவாக | யாழ்ப்பாணம் | 13000. 00 |
| ரா. ஆதவன் | பிரான்ஸ் | 1புட்டி பருப்பு, 1மூடை அரிசி |
| V. திருநீலகண்டன் (லக்சுமி அச்சகம்) | கொழும்பு-6 | 5000. 00 |
| திரு நடேசன் குடும்பம் | கொழும்பு-6 | 5000. 00 |
| சி. சோமஸ்கந்தா | லண்டன் | 10000. 00 |
| S. தனபாலசிங்கம் | ஏழாலை | 5000. 00 |
| S. கணேஸ் | புன்னாலைக்கட்டுவன் | 5கிலோ பருப்பு, 1மூடை அரிசி |
| S. செந்திவாசன் | ஆவரங்கால் | 10000. 00 |
| சுந்தரலிங்கம் சுகரஞ்சிதன் | மீசாலை | 3000. 00 |
| சி. சாரங்கன் | இடைக்காடு | 3000. 00 |
| ம. சங்கர்சனன் | கொழும்பு | 1மூடை அரிசி |
| S. விஜயகுமார் | சுன்னாகம் | 1500. 00 |
| S. சிவநேசன் குடும்பம் | கனடா | 10000. 00 |
| ஸ்ரீதரன் சஜீபா | வல்வெட்டி | 10000. 00 |
| கு. விஜயபாலா | கரவெட்டி | 2000. 00 |

(தொடரும்...


*எல்லைகளை உண்டாக்குவதும் ஞானம், எல்லைகளை நீக்குவதும் ஞானம்.*

# நந்தியம் பெருமானின் அவதார வரலாறு

– திரு ஆர். வீ. கந்தசுவாமி அவர்கள் –

எல்லாச் சிவாலயங்களிலும் நந்தியம் பெருமான் காட்சி தருவார். பழமையான பெரிய சிவாலயங்களில் ஐந்து வகையான நந்தி தேவர்கள் காட்சி தருவார்கள்.

1) இந்தரநந்தி- கோவிலுக்கு வெளியிலும்
2) வேதநந்தி, சுதையால் செய்யப்பட்டும்
3) ஆத்மநந்தி, கொடிமரத்தின் கீழேயும்
4) மால்விடை நந்தி, சக்தியதமான இரண்டாம் சுற்றிலும்
5) திருமநந்தி, இறைவனுக்கு மிக அருகில் எதிரேயும் அமர்ந்திருப்பார்.



சமம், விசாரம், சந்தோஷம், சாத்வீகம் ஆகிய நான்கு குணங் களை நான்கு கால்களாகக் கொண்டிருக்கிறார் நந்திதேவர். பிர தோஷ காலத்தில் நந்திதேவர் சிவ பெருமானுக்குச் சமமாக பூஜிக்கப் படுகின்றார். இறைவன் பிரதோஷ வேளையில் நடனமாடியது நந்தி யின் இரு கொம்புகளுக்கு இடை யில். அதனால் நந்திதேவரை வழி பட்டு அவரைக் கொம்புகளுக்கு இடையே இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்பது முக்கியமாகச் சொல்லப்படுகின்றது. அதுமட்டு மல்ல, நந்தியிடம் நம் குறைகளைச் சொன்னால், அவர் அதனை அர னிடம் சொல்லி நம் குறைகள் தீர வழி செய்வார் என்றும் ஒரு நம் பிக்கை உண்டு. நந்தி ஈசனுக்கு இணையானவர் என்று புராணங்கள் சொல்லுகின்றன. மகேசனைப் போலவே மான்மழு ஏந்துபவர்;

நெற்றிக்கண் உள்ளவர்; ஈசனைப்போல் இவருக்கும் ருத்ரன் என்னும் பெயரும் உண்டு. "ருத்" என்றால் துக்கம்; "ரன்" என்றால் ஓட்டுபவன்; "துக்கத்தை ஓட்டுபவன்" என்பதால் ருத்திரனுக்கு நந்தி என்னும் பெயரும் உண்டு. எப்படியாயினும் பிரதோஷ காலத்தில் நந்தி வழிபாடு மிகவும் முக்கியம்.

## நந்தியம் பெருமானின் பிறப்பு

உத்தமமான முனிவர் சிலாதர், அவர் பத்தினி சித்திரவதி. இவர்கள் இந்திரனைக் குறித்துத் தவம் செய்து புத்திரப்பேறு வேண்டி இறவாப் புத்திரனை அளிக்குமாறு கோரினர். அவர் தன்னால் முடியாதென்றும் ஈசனை வேண்டித் தவம் புரியுமாறும் கூற, பல்லாண்டு தவத்திற்குப் பிறகு ஈசன் அவர் முன் தோன்றி, தன்னுடைய அம்சமாய் நந்தி என்று ஒரு மகன் தோன்றுவான் என வரம் அளித்து மறைந்தார்.

அதன் பிற்பாடு சிலாத முனிவர் ஒரு யாகம் செய்யக் கருணைக் கடலான சிவ பெருமான் அருளால் சூரியனைப்போல் பிரகாசமான நந்தி தோன்றினார். அவருக்கு மூன்று கண்கள், நான்கு கால்கள் இருக்க ஒரு பக்கத்தில் சூலமும் மற்றொரு கையில் கதையும் இருந்தன. வீட்டிற்குச் சென்றவுடன் அவர் சாதாரண மானிடக் குழந்தையாக மாற, ஏழு வயதில் சகல கலைகளையும் தந்தை- சிலாதர் முனிவர் கற்பித்தார். அவர் சகல வேத சாஸ்திரத்திலும் தேர்ந்து விளங்கினார்.

நந்தி எட்டு வயதில் இறந்து விடுவார் என ஜோதிட சாத்திரம் உரைக்க, அவர் ஈசனை நோக்கித் தவம் புரிந்து இறவாவரம் பெற்றுக் கணநாதரானார்.

நந்தி பஞ்சாக்கினியில் பல ஆண்டுகள் நின்றுகொண்டு கடும் தவம் செய்தார். கடும் தவம் புரியும் முனிகுமாரனை ஆசிகள் கூறி வாழ்த்தினார் பரமேஸ்வரன்.

"எனது ஆணை எங்கும் நிறைந்தது; அதுபோல் இன்றுமுதல் உனது அதிகாரமும் எங்கும் நடக்கும்; அதிகார நந்தி என்று அழைக்கப்படுவாய்" என்று ஆசிகள் கூறினார் பரமன்.

நந்திதேவன், அதிகார நந்தி என்ற சிறப்புப் பெற்று மீண்டும் இறைவனை நோக்கிப் பல ஆண்டுகள் கடும் தவம் புரிந்தார். பரமேஸ்வரன், நந்திதேவன் தவத்தினை மெச்சி "சகல பூத கணங்களுக்கும் உன்னைத் தலைவனாக அமர்த்துகின்றேன். சிவ ஞானத்தை உலகுக்கு உபதேசிக்கும் ஆசிரியனும் நீதான். எனக்கு வாகனமாகவும் கையிலயங்கிரியின் காவல் தலைவனாகவும் என்னைப்போலவே நீயும் நித்தியனாவாய்" என்று வாழ்த்தினார்.

சிவகணங்களுக்கெல்லாம் தலைவராகிய நந்தி தேவருக்கு மகுடாபிசேகம் செய்ய ஈசனே இந்திராதி தேவர்களை வரவழைத்தார். மகுடாபிஷேகம் முடிந்ததும் நந்தி தேவருக்கு ஒரு தேவ கன்னியை மணமகளாகத் தேர்வு செய்யுமாறு தேவர்களிடம் பரமன் பணித்தார். அவர்களும் சயசாதேவி என்ற தேவகன்னியை நந்தி தேவருக்கு மணமகளாகத் தேர்வு செய்தனர்.

பிரம்மா வேதம் ஓத, கந்தர்வர்கள் இசைக்க, அப்சரப் பெண்கள் நடனமாட, திருவையாறிலிருந்து மாப்பிள்ளை புறப்பட, திருமழபாடியில் திருமணம் செய்து வைத்தார் சிவபெருமான்.

மணமக்கள் உமையம்மையிடமும் பரமேஸ்வரனிடமும் வணங்கி வாழ்த்துப் பெற்றனர். இருவரையும் வேண்டும் வரத்தைக் கேட்குமாறு அருளினார் கங்காதரன். நந்திதேவர்

ஈசன்பால் நீங்காத பக்தியும் அவரை விட்டுப் பிரியாவரமும், தந்தை சிலாதருக்கு திருவருள் புரியும்படியும் வேண்டினார். இறைவன் அப்படியே ஆசிவழங்கினார்.

பின்பு மும்மூர்த்திகளிடமும், முப்பத்துமுக்கோடி தேவர்களிடமும் திரும்பிய ஈசன் நந்தியும் என் புத்திரனே அவனுக்குக் கணாதிபத்தியம் அளிக்கின்றேன்! அவன் இனி எனது துவாரபாலகன்! அவன் அனுமதி உடனேயே என்னை அனைவரும் தரிசிக்க முடியும்! என்று கூறினார்.

நந்திதேவர், ஈஸ்வரனின் வாகனமாகவும் கயிலையங்கிரிக் காவல் தலைவனாகவும் ஈசனைப் போன்றே நித்தியனாகவும், தேவர்களும் முனிவர்களும் வணங்கும் நந்தீஸ்வரராகவும் இருக்கின்றார். நாமும் நந்தியம் பெருமானை வணங்கி ஈசன் அருள் பெற்று உய்வோமாக.

## செல்வச்சந்நிதியானின் ஜீவானந்தபுவன யோகவேல்

மாயைத் தொழில் செய்தியக்கிடவந்து மாயையில் கலந்தநாம்
மாயை கடந்தவர்தமை மாயா சொருபியென்று கூறி
ஆயவெப்பொருளும் விரைவில் கலந்தகு மொற்றுமையை சேர்த்து
ஏத லுபகாரத்திற்காகப் பதம்வேண்டி மேதகுபிரமம் என்பது வேல்!

தங்கு மொற்றுமையால் சொன்னதேயன்றி சகலமும் பிரமமல்ல
தங்குதலின்றி சகலமும் பிரமமய மென்போர்க்கு சந்நிதியே
எங்கணு மெந்தப் பொருளினுமிறை மிளிர்ந்ததும் பூவரசே
ஆங்கவர்தமை நிலையாயுரைத்ததே யாகும் ஒன்றே வேல்!

செந்தில்வேல் சோதி தத்துவாதீத மோகனதாஸ் கரம்தானம்
தங்கமலர்கான சேவைக்கும் பங்கமிலாப்பாரி முன்னரும் ஈசர் யாவரோ பன்னரிய வேலன்!
தவமின்றி முழுதருள்சுரக்க வேலோங்கு கரத்தைப் பார்த்து மாற்றுவதும் மலரவன் வேலே!
துதி செய் அவதார மயில்வாகன சுவாமி முழு மனத்திலங்கும் அமுத புதுமையும் சந்நிதியானே!

வெளியென அவர்தம்மனத்து பொதிந்து விளங்கும் ஆச்சிரம பூவரசுக்கு அதிபதியே!
வெளியிடை யனைத்துங்கிடப்பன போலத் தருவன யாவும் செல்வச்சந்நிதியே!
ஒளியுறு ஞானத்தரவுரிதரித்து அருள்சமய ஆசாரத்தோங்க பலமுடைய மோகனதாஸ் தீபமே!
களி பெறுமிந்தவியல் பதிந்தவர்க்கெல்லாம் ஆச்சிரம வேலின் கழல் காண்பது திண்ணம்!

இத்தகு தலத்தின் மகத்துவமென்னா யியம்பித் தருமோ கதிர்காமர்
உத்தமவேத சித்தாந்தமான பௌத்திரன் கைவலையோடு தொண்டைமானாற்றிடை மேவி
வைத்தநேமியைக் கொண்ட ஞானத்தால் கிறிவந்த கருணை வேலினை காட்டினார்
தத்துவா தீனவர் போகிவரனிடை நிமிர ஆலிலையிலண்டம் பொலிந்திடக் கண்டார்

அன்னியமான அலைகளோங்க ஆற்றங்கரையில் அடியவரை அணைத்து
மன்னிய தேவர் போற்றுமிவ் வேலினை பூசித்து தலமாகக்காண் தரணியிலே யென ஓதியது!
முன்னரியனவாய் மடுப்புப் பூஜைகாண் யாவையும் ஆதிபுவன வேலின் தேவசேனாதியருவுரு ஞானமே!
பன்னரிய மேக பாவனையாவுமிசைவுறத் தொண்டர்கள் சுவாமிகள் நிதம் பரவுதே செல்வச்சந்நிதி தலமாகும்!

-க. தெய்வேந்திரம்-

மன ஒற்றுமையும், நோக்கத்தால் ஒற்றுமையும் இல்லாவிட்டால் அதைவிட வேற்றுமை வேறில்லை.

# வழித்துணை 10

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 ஒன்றே உயிர்களென்று எண்ணுவோர்க்கு இறையுண்டு
அன்றே படைத்ததனால் பரமனுக்கும் பெருமையுண்டு
நான்வேறு நீவேறு என்றுநாம் வாழுமட்டும்
தான்வேறு என்றிறைவன் தள்ளியே நின்றிடுவான்.

02 சொத்தோடு சுகமேதும் கிடைக்கவில்லை என்பதற்காய்
செத்தேனும் போய்விடலாம் என்றெண்ணிச் சலிக்காதீர்
முத்தோடு மணியாகக் கிடைத்ததிந்த மானிடத்தை
பத்திரமாய்க் காத்திடுவீர் இதைவிடவோர் சொத்துண்டோ.

03 தன்நிலையைத் தராதரத்தைத் தரணியிலே ஏற்காதோர்
மண்ணகத்தே தம்நிலையைத் தவறாகப் புரிந்துகொண்டு
எண்ணரிய பலவற்றை இங்கிழந்து போவதுடன்
முன்னேறும் வழியினையும் மூடுகின்றார் அறிவாரோ.

04 பழம்கெட்டுப் போனதென்று பாரிலதை வீசுபவர்
உடல்கெட்டுப் போனதென்று ஊரைவிட்டே போவாரோ
பழம்கெட்டுப் போனததன் விதைமுளைக்க என்பதைப்போல்
உடல்கெட்டுப் போவதும் நம்ஊழ்கடக்க என்றறிவீர்.

05 வயிற்றுப்பசி போக்கிடவே நாம் அலைந்துலைந்து திரிகின்றோம்
கயிற்றிலே நடந்தேனும் கால்அரையை வாங்குகின்றோம்
உயிர்க்குயிராம் இன்னொன்று அறிவுப்பசி போக்குதற்கு
பயிற்றுமிடம் செல்வதுண்டோ பகலிரவாய் அலைவதுண்டோ.

06 நீதியது பொய்க்காது இங்கு நிலைபெறுமானால்
வாய்மையது வழுவாது இங்கு வளம்பெறுமானால்
நேர்மையோடு நியாயமும் எங்கும் மலர்ந்திடுமானால்
கார்முகிலும் பொய்க்காது கடும்மழை பெய்யும்.

*எண்ணத்தின் வேகமும், இயல்பும் அறிந்தோர்க்கு எண்ணமே இன்பமயம்.*

07 குறைபாடு பார்ப்போற்கு குறைபாடாய்த் தான்தெரியும்
இறைவனது படைப்பிலே எதற்கும்சில அர்த்தமுண்டு
நிறைவான மாந்தரினால் முடியாத பலவற்றை
குறையுடையோர் முடித்திடுவர் குறைபாடும் தகுதியாமே.

08 நீறு பூத்திருக்க நெருப்பென்று எண்ணாமல்
ஏறி மிதித்தந்த எரிதணல்மேல் வீழ்ந்திடப்போல்
சிலர் கூறும் வார்த்தையிலும் குழியிருக்கும் வீழாமல்
ஆறி அமர்ந்தெதையும் அணுகுதலே மேலாகும்.

09 ஆலயத்தில் அன்புவழி அனுசரிக்க முடியாதோர்
ஞாலத்து முதல்வனையும் கடவுளென்று ஏற்பாரோ
காலத்தால் அவர் தம்மைக் கடவுளென்று எண்ணுகின்ற
கோலத்தைக் கண்டிறைவன் கால்விரலை ஊன்றானோ.

10 நாமும் ஓர்நாள் நலந்திங்கு வீழ்வோம்
பேனும் இறங்கிப் பிறதலை ஏறிடும்
கூனும்வந்து குமட்டவே நிற்கும்
பின் ஏனெம் உடலுக்குள் பேதங்கள் சொல்வீர்.

## தமிழ் மகளே! சித்திரையே!

பங்குனி வயிற்றினில் பிறந்தவளே! - இப்
பார் புகழ்ந்தேத்திட வந்தவளே!
தங்க நிலவாய்த் தவழ்பவளே! - எம்
தமிழ் மகளே சித்திரையே!...

(பங்குனி)

வசந்த காலம் வரவேற்க - உனை
வாழ்த்திக் குயில்கள் தாமிசைக்க
அசைந்து அழகாய் நீயும்வர - இங்கு
அள்ளி அணைத்தே நாம் மகிழ...

(பங்குனி)

துன்பமெல்லாம் தொலைந்தோட - நீ
துணையாய் வந்தே வழிகாட்ட
அன்பும் அறமும் நிலைத்தோங்க - இங்கு
அச்சம், மடமை, பகை நீங்க...

(பங்குனி)

- கி. குலசேகரன் -

*வெறும் நற்பண்பு மட்டும் அதிகப் பயனைத் தந்துவிடாது. நல்லறிவும் சேர்ந்திருக்க வேண்டும்.*

# பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்ட பெருமான்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

"திருவாசகத்தேன்" தந்த மணிவாசகப் பெருமானது பிள்ளைத் திருநாமம் திருவாதவூரர் என்பதாகும். இது திருவாதவூரடிகள் புராணத்தில் "திருவாதவூரர்" எனும் திருநாமம் தரித்தார்கள் என்பதால் தெரிகிறது. இவரது கல்வியறிவு, ஒழுக்கம், பண்பாடு ஆளுமை மற்றும் சைவ சமய ஞான ஆசாரம் என்பன கண்ட அரிமர்த்தன பாண்டிய மன்னன் "தென்னவன் பிரமராயன்" எனும் மிக உயரிய விருது வழங்கித் தமக்கு முதன் மந்திரியாக்கினான். அவரும் வேந்தனுக்கு அறிவுரையும் ஆலோசனைகளும் வழங்கி அறவழி நடாத்தி நாட்டையும் மக்களையும் நன்னெறியில் வாழ்வித்து வந்த போதிலும் அவருள்ளம் இறை ஞானத்தையே நாடி நின்றது. இந்நிலையில் நல்ல குதிரைகள் வாங்கவென்று கருவூலத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட நிதி கோவிலுக்கும் அடியார்களுக்கும் செலவிட்டுக் குருந்த மர நிழலில் இறைவனிடம் மெய்ப்பொருளாய சிவஞானம் பெற்றார். இவை யாவும் ஏவலர்மூலம் அறிந்த வேந்தன் குதிரை அல்லது கருவூல நிதி தரவேண்டுமென செய்தி அனுப்பினான். அது கண்ட வாதவூரர் இறைவனிடம் முறையிட, இறைவன் நரியைப் பரியாக்கியும் பரியை நரியாகவும் செய்த திருவிளையாடல்களை யாவருமறிவர். இதன் தலைப்பாகிய "பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி வாங்கிய பெருமான்" பற்றிக் கூறுதலே இதன் நோக்கமாகும். "பெருமான் எனக் குறிப்பிடப்படுபவர் மதுரை மாநகர் சோமசுந்தரப் பெருமான் ஆவர். பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணத்திலும் இது உள்ளது. திருவாதவூரடிகள் புராணமும் இதுபற்றிப் பகர்கிறது.

அரச கருவூலம் காலியானதால் சினங்கொண்ட மன்னன் தண்டலாளரை அழைத்து "எவ்வாறேனும் கொள்ளையனைத் தண்டித்து நிதியை மீட்டுத் தருவீர்; பணமின்றி நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல சேவை செய்ய முடியாதுள்ளது" என்றான். ஆணை பெற்ற தண்டலர் "வாதவூரரை இழுத்துச் சென்று உச்சிக்கால நேரம் சுடுமணலில் நிறுத்தி நெற்றியிலும் கைகளிலும் பாறாங் கற்களை வைத்து, கருவூலப் பணம் தந்தால் விடுவோம்" என்றனர். இந்நிலையில் எதுவும் செய்யமுடியாது மயங்கி மண்மீது விழுந்து "அம்மையே; அப்பா! என அலறினார். தமது அன்பரான வாதவூரர் படும் வேதனைகண்ட இறைவன் துன்பமகற்றும் நோக்கில் வைகையில் கூடுதலாக நீர் பெருகுமாறு செய்ய; வெள்ளம் கரைபுரண்டோடி வீட்டினுள் பெருகிக் கால்நடைகள், பொருள் பண்டங்கள் யாவையும் உருட்டிச் சென்றது. இதுகண்டு பதறிய மக்கள் மன்னனிடம் முறையிட்டனர். வேந்தன் அமைச்சருடனும் மக்களுடனும் கலந்துரையாடிக் குடும்பத்துக்கொரு பங்கு அளந்துவிடுவதாகவும் அதனை விரைந்து கட்டிமுடிக்க வேண்டுமெனவும் முரசு அறைவித்தான்.

பிட்டுவிற்றுச் சீவியம் நடத்தும் அம்மையார் தமக்கு அளந்துவிடப்பட்ட பங்கினை அடைக்கக் கூலியாள் எவருமின்றி

*பொறுமை மிகுந்த மனிதனின் கோபத்தில் எச்சரிக்கையாக இருங்கள்.*

வருந்தி மதுரை சோமசுந்தரப் பெருமான் ஆலயம் சென்று அழுது தொழுது முறையிட்டார். இம்முறையீடு கேட்ட சோமசுந்தரப் பெருமான் தாமே வந்தியாய செம்மனச் செல்வியின் கூலியாளாக வருவாராயினர்.

"அழுக்கடைந்த பழந்துணியொன்று அரைக்கசைத்து விழுந் தொண்டர்
குழுக் கடந்த விண்டை நிகர்சுமையடைமேற் கூடை கவிழ்த்
தெழுக் கடந்தி சைகிடந்திட்டிணை கடந்ததிருத்தோண் மேன்
மழுக்கடைந்து விளங்கிய வாய்மண்டாடு திண்படையேந்தி

திருவிளை. புராணம் 3007

அழுது கண்ணீர் ஆறாக வடிக்கின்ற வந்தியம்மையின் செவியில் கேட்கும்படியாகக் "கூலி தந்து என்னை வேலை கொள்வார் உண்டோ" என்று கூவினார். இதுகேட்ட, தந்தை, தாய், தாரம், பிள்ளையாகிய யாவரையும் இழந்து தனிமரமாக நிற்கும் நரை முது மூதாட்டியாய வந்தியம்மை மகிழ்ச்சி அடைந்து காளைப்பருவமுடைய கூலியாளரைப் பார்த்துத் தம்பீ; வைகைக் கரையில் எனக்கு அளந்து விடப்பட்டிருக்கும் பங்கினை அடைத்துத் தருவாயா'' என்றார்.

''தாயே அடைத்துத் தருவேன். அடைத்தலின் என்ன கூலி தருவாய்'' என்றார். ''உதிர்ந்த பிட்டினை உனக்குக் கூலியாகத் தருவேன்'' என்றார் வந்தியம்மை. "அப்படியானால் உனது வேலையை முடித்துத் தருகிறேன்'' என்றார் கூலியாளாக வந்த சோமசுந்தரப் பெருமான்.

வந்தி தெள்ளிய மாவுடன் அன்பையும் கலந்து அவித்துச் சந்தல் நீக்கிக் கொட்டிய பிட்டினைத் தனது கந்தலில் வாங்கி உண்டு எஞ்சியதை அதிலே முடிந்து கட்டி வேலைத் தலம் சென்று கணக்கரிடம், நான் "வந்தியின் கூலியாள்'' எனப் பதிவுசெய்து இடத்தைக் காட்டுமாறு கோரினார். ஏவலாளர் காட்டிய இடத்தினருகில் மொட்டை மண் வெட்டியால் ஒருகூடை மண்ணைக் கழிந்து கொட்டி மகிழ்ந்து களைத்தவர்போல மேனி வியர்க்க கட்டிக் கொணர்ந்த பிட்டினை உண்டு "பிட்டு நன்று" என்று கூறிப் பிறை முடியசைப்பார். வேடன் இட்ட மென்றிசையிற் சால ஈசனுக் காட்டாது" என்பார். கொட்டி மண் குவிப்பார்; ஓடி மரநிழலில் கூடையைத் தலையணையாகக்கொண்டு மரநிழலில் உறங்கினார். இதைக் கண்ட ஏவலர் அரசன் தண்டிப்பானே எனப் பயந்து காலில் தட்டி எழுப்பலானான். படுத்தவர் காலால் உதைக்கலானார். அதுகண்ட ஏவலர் இவன் பெரிய எத்தனோ? ஏமாற்றுக்காரனோ? கிழவி கொடுத்த பிட்டை விழுங்கி வேலையும் செய்யாமல் படுத்திருக்கிறான். பரிதாபத்துக்குரியவர்- கூலி கொண்ட வந்திதான் பாவம் என்று பலவாறு பேசினர். இதனை "மகாராசாவிடம் சென்னால் வத்தி வைப்பதாகக் கூறி உதைப்பான். சொல்லாவிட்டாலோ வேந்தர் கண்டிப்பார். எனவே எமது கடமையை நாம் நிறைவேற்றுவோம் என்று அரண்மனையை அடைந்தனர். அங்கு மன்னவனது பாதாரவிந்தம் பணிந்து வைகையின் கரை முழுவதையும் மக்கள் ஒன்றிணைந்து நம்பிக்கையுடன் மேற்கொண்ட முயற்சியினாலும் தங்கள்மீது கொண்ட பேரன்பின் வழியாகவும் இனிது நிறைவேறத் தங்கள் மனம்போல் அரண் மலையாக உயர்ந்து நிற்கிறது. ஆனால் வந்தி என்னும் எவர் உதவி ஒத்தாசை செய்வார் எவருமற்று அனாதையான பிட்டு விற்றுச் சீவியம் நடத்தும் நரை மூதாட்டியின் கூலியாளாகப் பதிவு செய்தவனின் வேலை மாத்திரம் முடியாதுள்ளது" என்றனர். இது கேட்ட அரசன் "நாளை மறுதினம் வைகைக்

*என்னுடையது, உன்னுடையது என்பதில்லாவிட்டால் உலகம் சொர்க்கமாக இருக்கும்.*

கரையைப் பார்வையிட அமைச்சர்களுடன் வருவதாகவும் முரசறையச் செய்யுங்கள்" என்றருளினார்.

இதனிடையே அதிக "வேலையினாலே மிகவும் இளைத்த மெலிந்தவர் போன்று உடல் வியர்வை சிந்த மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க மீண்டும் நீண்டகாலப் பசி உடையார் போன்று நடை தளர்ந்து வந்தி அம்மையாரது பிட்டில் விருப்புடையராய் வந்து "அன்னையே; உமக்கு அளந்துவிடப் பட்ட பங்கின் வேலை வெகு சீராக நடை பெறுகிறது. மண்வெட்டி நெரித்து உள்ளங் கைகள் சிவந்து விட்டன. மிகவும் பசிக்கிறது. பிட்டுத் தருவாயாக" என்றார். உடனே அம்மை "உடனவித்த பிட்டைக் கொட்டிக் கொடுத்தார். கூலி அவசரமாக அள்ளி வாயிற் போடச் சூடு தாங்காமல் கன்னங்கள் புடைக்க இரு கைகளாலும் அணைத்து வேலைத் தலம் சென்றார். வெற்றிலை குதப்புவது போன்று வாயில் போட்ட பிட்டைக் குதப்பி உள்ளே தள்ளுவார். வைகையருகில் வெட்டியெடுத்த மண்ணைக் கூடையில் நிரப்பிக் கொட்டுவார். உடைப்பு அடைபட்டது கண்டு திரண்ட தோளினைத் தட்டுவார். களைத்தவர் மரநிழலில் படுத்து உறங்குவார்போன்று பாசாங்கு செய்தார். பார்த்த ஏவலாளர் "இவன் எத்தனோ? ஏமாற்றுக்காரனோ? ஐயோ பிட்டு மூதாட்டி பாவம். ஏழையின் கண்ணீர் இவனை வதைக்கும்" என்றனர்.

இந்நிலையில் வைகை அணையைப் பார்வையிட வந்த மன்னன் யாவும் சிறப்பாய் அமைந்திருப்பது கண்டு அம்மக்களை வாழ்த்தி வருமிடத்து ஒரு பங்கு மாத்திரம் சீராக அடைக்கப்படாமல் வெள்ளம் பெருகுவது கண்டு கடும் சினங்கொண்டு "இது யார் பங்கு. இழுத்து வாருங்கள் பங்கினரை" என்றான். அதுகேட்ட ஏவலர் "ஐயகோ; இது தங்களது படைத் தளபதிகளாக அமர்ந்து பல எதிரிப் படையணியினரை மடிய வைத்து வெற்றிகள் தேடித்தந்து வீரமரணம் அடைந் தவர்களின் வாரிசு தாரராய வந்தியெனும் நரைமூதாட்டியெனும் பிட்டு விற்றுச் சீவிக்கும் அம்மையாரின் பங்காகும். அவருக்குக் கூலியாளாகப் பதிவு செய்து கிழவி கொட்டிய பிட்டை விழுங்கிப் போட்டு வேலை செய்யாது மரநிழலில் குறட்டை விட்டுத் தூங்குகிறான்" என்றனர். "இழுத்து வாருங்கள் அவனை" என்றார் பாண்டியன். ஓடிச்சென்ற ஏவலர் கூலியாளின் கையைப் பிடித்திழுத்து வந்து "இவன்தான் அக்கூலி" என நிறுத்தினர். மன்னன் சினந்து ஏவலரிடமிருந்த பிரம்பை வாங்கி அண்டங்களையும் உயிர்களையும் திருமேனியாகவுடைய "பிட்டுத் தின்ட பெருமானின்" முதுகில் பிரம்பை வீசி அடித்தான் வேந்தன். உடனே இறைவன் கூடையுடன் மண்ணை உடைப்பில் கொட்டி விட்டு மறைந்தருளினார். அரசனது பிரம்படி அவனுக்கு மட்டுமன்றி அயல் நின்றவர் நில்லாதோர் யாவர் மேலும்பட்டதன்றி இந்திராதி தேவர்மீதும் பட்டது. மலைபோல் வளர்ந்து நிலைத்து நிற்கும் வந்தியின் பங்கினையும் பிரம்படிபட்ட முதுகைத் தடவுவாரையும் பார்த்து ஆச்சரியமுற்ற அரிமர்த்தன பாண்டியன் இ∴து யாது? என்று அதிசயித்து ஐயுற்றிருந்தபோது இடபாரூடராகக் காட்சி கொடுத்த இறைவன் "அசரீரியாக" "அறநெறி தவறாது செங்கோல் செலுத்திய பாண்டியனே; அறவழியில் நீ ஈட்டிய செல்வம் தூயது. எமக்கும் எமது அடியவர்க்கும் குற்றமற்ற திருவாதவூரன் தந்தவையாகும். குற்றமற்றவரை நீ தண்டிக்கச் செய்தாய்; அவர் பட்ட துன்பம் போக்கும்பொருட்டு வைகையைப் பெருகச்செய்து வந்தியின் கூலியாளாக வந்து பிட்டை உண்டு பிரம்படியும் பட்டோம். வந்தியின் துன்பம் நீக்கி அன்புடையாளை எம்பக்கல் அழைத்தோம்" என்றார்.

*படிக்கும்போது கட்டுப்பாட்டோடு இருப்பவர்கள்தான் வாழ்நாள் முழுவதும் சுதந்திரமாக இருக்கமுடியும்.*

இ∴து கேட்ட அரிமர்த்தன பாண்டியன் அச்சமும் ஆனந்தமும் ஆச்சரியமும் அடைந்து வாதவூரடிகளின் அறப்போதனையின் உண்மையுணர்ந்து சகநாதன் எனும் அறநெறி தவறாத ஏகபுத்திரனுக்கு முடி சூட்டி அரசனாக்கி வைத்து இறைதாள் சேர்ந்து இன்பமெய்தினான்.

"ஓம்; சிவாய நமக"

"எல்லாம் எமையாளும் ஈசன் செயல்"

## மந்திர மகிமை

ஒரு சொல்லையோ அல்லது பல சொற்கள் அடங்கும் ஒரு தொகுப்பையோ திரும்பத் திரும்பச் சொல்லும்படி அமைந்திருப்பது மந்திரம் எனப்படும். மந்திரங்கள் ஒலி வழிபாட்டைக் குறிக்கும் இறைவன் நாத வடிவமாக இலங்குகின்றான். நாத விந்துவாக. அதாவது நாதத்தின் மூலக் கருவாக விளங்குவது "ஓம்" என்னும் சொல்லாகும்.

ஒலியின் மூலப்பொருள் "ஓம்" என்ற அணு ஒலிதான். அவ் ஒலி அணுக்களின் தொகுப்பு ஒரு குறிப்பிட்ட வரைமுறைக்குள் அமைந்து மொழியாகிறது; சொல்லாகிறது; அருணகிரிநாதப் பெருமான் முருகக் கடவுளைத் திருப்புகழால் பாடித் துதிசெய்யும்போது "நாத விந்து கலாதி நமோ நம" என்று துதிக்கின்றார். நாதப் பிரம்மமே மந்திரம். ஒலி வடிவமாக, நாத வடிவமாக இயங்கும் கடவுளை, நாம் மந்திரமாகக் காணுகிறோம். மந்திரமும் கடவுளும் இரு வேறுபட்டவை அல்ல; வெப்பம் வேறு, நெருப்பு வேறு அல்ல என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை ஒலிவேறு மந்திரம் வேறு அல்ல என்பதும். மந்திரங்களை வெளிப்படுத்துவதன்மூலம் ஒரு பக்தன் இறைத் தன்மையை எய்த முடியும்.

"உரு ஏற திரு ஏறும்" என்று கூறுவார்கள். உரு என்பது என்ன? ஒரு மந்திரத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அதனை திரும்பத் திரும்பச் சொல்லுவது "உரு" எனப்படும். அந்த உரு எண்ணிக்கையிலும் ஒரு நிலைப்படுவதிலும் அதிகரிக்க அதிகரிக்க "திரு" எனப்படும் அருளும் கூடும் என்பதாம்.

உரு என்பது குறிப்பிட்ட பதத்தையே திரும்பத் திரும்பச் சொல்லுவதாகும். திரும்பத் திரும்ப ஒரு சொல்லைச் சொல்லும்போது அங்கே ஓர் சக்தி பிறக்கிறது. அதனால்த்தான் இறைவன் நாமத்தையே வீட்டில் குழந்தைகளுக்கு வைத்து அழைக்கிறோம். அந்த நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கும்போது அங்கே ஆன்மீக சக்தி கூடுகின்றது. உருப்போடுதலாகிய, மந்திர உச்சாடனத்தின் பலன் சொல்லொணாதது. அதனை அவரவர் அனுபவத்தால்த்தான் உணர முடியும்.

அந்தாதி பாடி அபிராமி பட்டர், அம்பிகையின் அருளைப் பரிபூரணமாகப் பெற்றார். திருப்புகழ் பாடி அருணகிரிநாதர் முருகப் பெருமானின் அருளைப் பெற்றார். பாமர மக்களாகிய நாம் சாதாரண வார்த்தைகளையே திரும்பத் திரும்ப பக்தி சிரத்தையோடு சொல்லி வந்தால் இறைவனின் அருளையும், இக பர சுகங்களையும் பெற முடியும். இதையேதான் ஜெபிப்பது அல்லது ஜபம் செய்வது என்கிறோம்.

இன்று அகில உலகிலும் புகழ்பெற்று விளங்கும் ஹரே கிருஷ்ண இயக்கத்தின் மூல தத்துவமே, மந்திரஜெபம்தான். அந்த மந்திரத்தை யார்வேண்டுமானாலும் பக்தியோடு ஜெபிக்கலாம். சாதி சமய பேதமற்ற ஒரு தாரக மந்திரம் அதுதான்.

-செல்வன் சிவகுமார் கொற்றவன்-

*அமைதியும் அறிவுத் தெளிவும் இல்லாதவனால் பணிகளைச் செய்து முடிக்க இயலாது.*

(தொடர் - 07)

# சமய வாழ்வு

- திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் -

குடும்பத்தில் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்வதும், பிரிந்து வாழ்வதும் முற்றிலும் மனதைப் பொறுத்த விடயம். ஆகவே சேர்ந்து வாழ்வது என்று முடிவு செய்துவிட்டால், வேற்றுமைகளை விலக்கி வைத்து வாழமுடியும். சேர்ந்து வாழ்வது அவசியமில்லை என்று எண்ணிவிட்டால் சிறிய குற்றங்களையும் பெரிதாக்கி பிரிந்துவிட முடியும். விட்டுக்கொடுத்து வாழ்கின்ற மனப்பான்மை இல்லாமல் நல்ல குடும்பம் அமைவது சாத்தியமில்லை. "கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் விட்டுக் கொடுத்து வாழவேண்டும்" என்பதுதான் சைவசமயம் கூறும் உண்மையாகும்.

"வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்" என்று சொல்லுவது சுலபம். பெண்டாட்டியின் கையும் காலும் மேலே படாமல் குடும்பம் நடத்துவது எப்படி? சுகம் காண்பது எப்படி? விவாகரத்தினை நமது சமயம் ஏற்கவில்லை. ஆனால் நவீன காலத்தில் உருவாகியுள்ள சூழ்நிலைகளால் சட்டம் விவாகரத்தை வழங்குகிறது.

எந்த நியாயத்துக்கும் கட்டுப்படாத கணவன்மார்களும் எந்த தர்மத்திற்கும் கட்டுப்படாத மனைவிமார்களும் நமது சமயத்திலும் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட உரிமையாகத்தான் நம்முடைய விவாகரத்து ஏற்பாட்டினை நாம் கருதவேண்டும்.

குடும்பம் என்பது ஒரு ஆலயம் போன்றது. அதாவது குடும்ப வாழ்க்கை தெய்வீகமானதாக இருக்கவேண்டும். திருமணத்தில் இணையும் ஆணும் பெண்ணும் தங்களது இறுதிக்காலம்வரை இணைந்து வாழ்வை நடத்த வேண்டும் எனும் சமய சிந்தனை ஓர் உன்னதமான சிந்தனை; ஏற்பாடு ஆகும். திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர் என்பார்கள். ஒரு கணவனும் மனைவியும் தொடங்குகின்ற குடும்ப வாழ்க்கை அவர்களோடு முடிவுக்கு வந்துவிடுவதில்லை. குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகிறார்கள். கணவனும் மனைவியும் இணைந்து இந்தக் குழந்தைகளின் வளர்ச்சி, கல்வி, திருமணம், எதிர்காலம் ஆகியவற்றுக்கு பொறுப்பேற்காவிட்டால், இந்தப் பொறுப்பினை யார் ஏற்பது?

மனிதனைத் தியானத்திற்குத் தூண்டுவதே குடும்ப வாழ்க்கைதான். முன்பின் அறிமுகமில்லாத ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டு அவளுடைய நன்மைக்காகவும் சுகத்துக்காகவும் ஓர் ஆடவன் எத்தனையோ விடயங்களைத் தியாகம் செய்கிறான். ஒரு பெண் தனக்குப் பழக்கமே இல்லாத ஓர் ஆடவனைத் திருமண மேடையில் கைப்பிடித்து, வாழ்க்கையை அவனிடம் ஒப்படைத்து அவனுடைய சுகதுக்கங்களில் பங்கேற்று அவனுடைய நலன் கருதிய தியாகங்களைச் செய்கிறாள். பின்னர் குழந்தைகள் பிறந்தவுடன் குழந்தைகளுக்காக கணவன் மனைவி இருவருமே இணைந்து பல தியாகங்களைச் செய்கிறார்கள். இந்தத் தியாகத்திலே அளவற்ற இன்பமும் காண்கிறார்கள்.

குழந்தைகள் வளர்ந்து தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுகின்றபோது,

*செயற்படும் முறையை முன்னரே தீர்மானித்துக்கொண்டுதான் செயலைத் தொடங்கவேண்டும்.*

பெற்றோர்கள் அனுபவிக்கின்ற இன்பத்துக்கு இணையான இன்பம் வேறு என்ன இருக்க முடியும், வாழ்நாள் முழுவதும் கணவனும் மனைவியும் மனம் ஒத்து இணைந்து வாழ் கின்றபோதுதான் இந்த வளர்ச்சியே சாத்திய மாகிறது.

ஒரு உன்னதமான சமுதாயக் கண் ணோட்டத்தில்த்தான் குடும்ப அமைப்புக்கு கடுமையான கட்டுப்பாடுகளைச் சமயம் விதித் தது. கணவன் மனைவியரிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றுவது இயல்பானது. பேசித் தீர்க்கவேண்டிய விடயங்களாக அவை இருக்கவேண்டுமே தவிர, பிரிந்து போவதற் கான முகாந்தரங்களாக அவை ஆகிவிடக் கூடாது. பிரிவது சுதந்திரத்தின் அடையாளம் ஆகிவிடாது. சேர்ந்து வாழ்வது மன வளர்ச்சி யையும், அறிவு முதிர்ச்சியையும் காட்டும். நமது சமுதாயத்தில் மட்டும்தான் குடும்பம் என்பது போற்றிப் பாதுகாக்கப்படவேண்டிய ஒரு விடயம் என மிகவும் அழுத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் மதுரம் தம்பதியினரின் சோவியத் யூனி யனுக்கு (1966) சென்றிருந்தனர். "உங்கள் நாட்டிலேயே மிக உயர்ந்த விடயமாக நீங் கள் எதனைக் கருதுகிறீர்கள்" என்று அவர் களைப் பார்த்துக் கேட்டார்கள். எங்களுடைய குடும்ப அமைப்பைத்தான் மிக உயர்ந்த விடயமாக நாங்கள் கருதுகிறோம் என்று பதில் சொன்னார்கள்.

அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மை. இந்தக் குடும்ப வாழ்க்கையை ஆதாரமாக வைத்தே இதர கடமைகள் பேசப் பட்டன. இதிலிருந்து பல சமுதாயக் கடமை கள் உருவாக்கப்பட்டன.

**"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை"**

என்பது வள்ளுவர் வாக்கு.

அதாவது இல்லறத்தில் வாழ்கின் றவன், சான்றோர், முனிவர், ஞானிகள் ஆகிய மூன்று பிரிவினருக்கும் துணையாக இருக்க வேண்டியவன் என்கிறார் வள்ளுவர். இந்த மூவரும் துறவற நெறியில் இருப்பவர்கள் ஆவார்கள். இவர்களுக்கு வேண்டிய உதவி களைச் செய்வது இல்வாழ்க்கையில் ஈடுபட்ட வனுடைய கடமையாகும்.

திருவள்ளுவர் கூறும் மூவரும், சமு தாய நலனுக்காகப் பணியாற்றுகிறவர்கள். சமுதாய நலனுக்காக தவம் இயற்றுகின்ற வர்கள். சமுதாய நலனுக்குத் தேவையான விடயங்களைப் பற்றிச் சிந்தித்து வழிகாட்டு கின்றார்கள். இந்தக் கடமைகளை இவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதால், இவர்கள் நலன் எனப் பேணிக் காப்பது இல் வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்களின் கடமையாகிறது. வள் ளுவர் தொடர்ந்து சில விடயங்களைச் சொல்லு கிறார். துறவிகள், ஏழைகள், இறந்து போனோர் ஆகியோருக்காக கடன் இயற்றுவதும் குடும்ப வாழ்க்கையில் உள்ளவனுடைய கடமை என் கிறார். அதனைத் தொடர்ந்து இல் வாழ்க்கை யில் இருப்பவர்கள் யார் யாருக்கு நன்மை செய்கின்ற கடப்பாடு உடையவர்கள் என்பதை யும் கூறுகிறார்.

**தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்**
**-என்று ஆங்கு**
**ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை.**

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், உறவினர் ஆகிய நால்வரோடும் சேர்ந்து தான், தனக்குத் தேவையானவற்றையும் இல்லறத் தில் உள்ளவன் கவனிக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். தென்புலத்தார் என்று வள்ளுவர் பிதுர்களை குறிப்பிடுகிறார். இறந்துபோன முன்னோர்களின் நினைவாகச் செய்யப்படும் கருமங்களை இல்வாழ்க்கையில் உள்ளவன் தவறாது செய்யவேண்டும் என்பது வள்ளு வரின் கூற்று.

*முன்னேற்றம் என்பது இன்றைய செயலாக்கம், நாளைய உறுதிநிலை.*

இறந்தவர்களுக்கான பிதிர்க்கடன் செய்வது இன்று ஆடம்பரமாகிவிட்டது. முதலில் உயிருடன் இருக்கும்போது உணவு கொடுத்து காப்பாற்ற வேண்டும். வயோதிபர்களைக் கவனிப்பாரின்றி விட்டுவிட்டு, இறந்த பின்னர் காட்டும் ஆடம்பரம் அதிகரித்து விட்டது. பிதிர்க்கடன் சரியாகச் செய்யப்படாவிடின் குடும்பத்திற்குத் துன்பம் வந்து சேரும். இறந்த உடலை தகனம் செய்வது என்பது உயர்வான முறையாகும். அந்தியேட்டிக் கிரியைகள் உடலை விட்டுப் பிரிந்த ஆன்மாவைச் சாந்தியடையச் செய்து, உரிய இடத்திற்குக் கொண்டு செல்லும். ஆயிரக்கணக்கான ரூபாவுக்குப் பட்டாசு கொளுத்துவதும், பறையும் பாண்டு வாத்தியமும் ஒருசேர முழங்கச் செய்வதும் கிரியைகள் அல்ல. கலியுகத்தின் இறுதியில் இவ்வாறு அமையும் செயல்கள் மேலும் துன்பத்தையே தரும் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆண்டுதோறும் திதி கொடுப்பது அல்லது புரட்டாதி மாதத்தில் மாளயம் கொடுப்பது அவசியமாகும்.

இங்கு குறிப்பிடப்பட்ட விருந்தினர், ஒக்கல் எனும் இருவகைப்பட்டவரும் யார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். விருந்தினர் என்பவர்கள் உறவினர்கள், நண்பர்கள் அல்லர். முன்பின் தெரியாதவர்களே விருந்தினர் எனப்படுவர். கையேந்தி வரும் ஏழை மக்களையே "விருந்தினர்" எனும் சொல் குறிக்கும். அவர்களுக்கு வடை, பாயாசத்துடனான உணவு தேவைப்படாது. அவர்களின் வயிற்றுப் பசியை நீக்குவதற்கு உணவு வழங்கவேண்டும் இதனையே பெரியபுராணத்து அடியவர்கள் சிறப்பாக காரைக்கால் அம்மையார் வரலாற்றின் மூலம் அறிகிறோம். ஒக்கல் என்பது உறவினர், நண்பர்களைக் குறிக்கும். வள்ளுவர் காட்டும் வழி நமது சமய வழியாகும். இந்த வழியில் குடும்பம் அமைந்துவிட்டால் வாழ்க்கை எவ்வளவு சுகமாக இருக்கும் என எண்ணிப் பார்ப்பதே மகிழ்ச்சியான விடயமாகும். மற்றவர்கள் வாழப் பொறுக்காத மனிதர்களை நாம் இப்போது அதிகமாகப் பார்க்கிறோம். நமது சமயம் இத்தகைய சுயநல மனப் போக்குகளை ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. குடும்பம் என்பது சமுதாயத்தின் அத்திவாரம் என்பதால், சமுதாயத்தின்மீது பரவிப் படர்கின்ற அளவுக்கு குடும்ப வாழ்வு அமைய வேண்டும் என்பதுதான் சைவ சமயத்தவரின் குறிக்கோள். அதனால்த்தான் தாம்பத்தியத்தில் இணைந்த கணவனும் மனைவியும் இடையில் பிரிவதை அவர்கள் ஏற்கவில்லை. அக்னி சாட்சி ஒருவன் ஒருத்தியைக் கைபிடித்த பிறகு வாழ்நாள்பூராவும் அவளுடன் வாழவேண்டியது அவசியம் என வற்புறுத்தினார்கள்.

அக்கினிக்கு முன்னால் அமர்ந்து மாங்கல்யத்தை மனைவியின் கழுத்தில் சூட்டுகிறான் கணவன். அந்த விநாடியில் கணவனும் மனைவியும் தங்களுடைய மாசு மருக்களையெல்லாம் அந்த அக்னியில் எரித்து சாம்பலாக்கிக் கொள்ளவேண்டும். கணவனின் கரத்தைப் பற்றிக்கொண்டு மனைவி அக்னியைச் சுற்றி வலம் வருகிறாள். "நீ எங்கு சென்றாலும் உன்னைத் தொடர்ந்து வருவது என் கடமை என்பதை மனைவி கணவனுக்கு உணர்த்தும் நிகழ்ச்சி அது. அன்று பிடித்த கரத்தை என்றுமே அவள் விடக்கூடாது.

திருமணச் சடங்குகள் சமுதாயத்தின் எல்லா இடங்களிலும் எல்லாப் பிரிவினரிடையேயும் ஒரே மாதிரியாக இருப்பதாகச் சொல்ல முடியாது விட்டாலும் திருமண பந்தம் நிலையானது. வாழ்க்கை இல்லறத்தில் தொடங்குவதுதான் மாண்பு. அதுவே சைவ சமய வாழ்வின் அழுத்தமான கோட்பாடு. அப்படியாயின் துறவு என்பது ஓர் அறம் என்று ஏற்றுக் கொள்ளக் காரணம் என்ன?

(தொடரும்...

*தொந்தரவிலிருந்து வெளியே வருவதைவிட தொந்தரவிலிருந்து விலகியிருப்பது எளிது.*

# மாதோர் பாகத்தன்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

மாதோர் பாகனைப் பற்றி இக்காலைப் பொழுதில் சிந்திப்போம். அந்தமும், ஆதியும் இல்லாத கருணைக் கடலான சிவபெருமானுக்கு உரிய மூர்த்தங்களில் அர்த்த நாரீஸ்வர மூர்த்தமும் ஒன்றாகும்.

இவ்வடிவில் சிவன் பாதி, சக்தி பாதியாக எம்பெருமான் காட்சி தருகின்றார். ஆணும் பெண்ணும் சமம் என்ற மிகப் பெரிய தோர் தத்துவத்தை விளக்கும் வகையில் சிவனும் சக்தியும் இணைந்த அற்புத அமைப்பே இந்த அர்த்தநாரீஸ்வர வடிவம்.



பிருங்கி முனிவர் சிவனின் தீவிர பக்தர் ஆவார். அவர் சிவபெருமானைத் தவிர வேறு எந்தத் தெய்வத்தையும் வணங்காதவர். உமையைத் தவிர்த்து அருகே அமர்ந்திருக்கும் சிவபெருமானை மட்டும் வணங்கிய அவரது அறியாமையைப் போக்கி அருள தமது உடம்பில் பாதியை உமையம்மைக்குத் தந்தருளி அர்த்தநாரீஸ்வர வடிவுகொண்டு முனிவரின் அஞ்ஞானத்தை நீக்கியருளினார் ஈசன்.

அடுத்து எம்பெருமானது மூர்த்தங்களில் முக்கியம் வாய்ந்தது கங்காதர மூர்த்தம். இதன் பின்னணியில் உள்ள வரலாற்றை நோக்குவோம். தனது முன்னோர்களின் பிதிர் கடன்கள் ஆற்றுவதற்காகப் புனித நீர் வேண்டி ஆகாய கங்கையை பூமிக்குத் தந்தருளுமாறு ஈசனை நோக்கிப் பெரும் தவமிருந்தான் பகீரதன். பகீரதனது தவத்தை மெச்சி ஈசன் கங்கையை பூமிக்கு அனுப்பி வைத்தார். ஆனால் கங்கை பாய்ந்து வந்தபோது அதன் வேகம் எங்கே பூமியையே அழித்துவிடுமோ என்ற அச்சத்தில் கங்கையைத் தன் ஜடா முடியில் ஏற்றி, அதன் வேகத்தைக் குறைத்து தணித்து பகீரதனுக்காகப் பூமியில் பாயவிட்டார் எம்பெருமான். இதனால் கங்காதரன் ஆனார்.

சிவனாரது கங்காதர வடிவம் தமிழ் நாட்டிலே திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையிலும், மாமல்லபுரத்து பாறைக் கோயிலிலும் இன்றும் காணப்படுகிறது.

அடுத்து எம்பெருமானது பிட்சாடன மூர்த்தம் பற்றிப் பார்ப்போம். ஒருகால், தாருகா வனத்து முனிவர்கள் தமது தவவலிமையையும் புலனடக்கத்தையும் பற்றிப் பெருமிதமும்,

*தேவைக்கேற்ற ஊதியம் என்பதே பொருளாதார சமத்துவத்தின் சரியான பொருளாகும்.*

கர்வமும் கொண்டனர். போதாக்குறைக்கு தத்தமது பத்தினி மார்களது கற்பு வலிமை பற்றியும் செருக்குற்றனர். ஒருவரது நல்ல செயல் நன்மையையும், தீய செயல் தீமையையும் விளைவிக்கும்போது, பின் இறைவன் எதற்கு! என்று மூடத்தனமாகச் செயற்படத் தொடங்கினர் இம் முனிவர்கள்.

இவர்களது அறியாமையை அடக்கத் திருவுளம் கொண்ட ஈசன், தான் பிச்சாடன வடிவம் பூண்டு மகா விஷ்ணுவை, அழகான மோகினி வடிவம் கொள்ள வைத்து இருவருமாகத் தாருகாவனம் சென்றடைந்தனர்.

இறைவனது பிச்சாடன வேடம், அழகிய இளந்துறவியாக, வசீகரமாக அமைந்ததால் தாருகாவனத்து ரிஷி பத்தினிகள் அவரது மோகன வடிவத்தில் தம் மனதைப் பறிகொடுத்து தம் நிலை மறந்து அவர் பின்னே செல்லலாயினர்.

முனிவர்களும் தமது தவவலிமையை மறந்து அழகான மோகினியின் பின் செல்லலாயினர். பின்னர் உண்மையை அறிந்து தமது செயலை எண்ணி வெட்கி ஈசனோடு போர் புரியலாயினர். போரின் இறுதியில் மயங்கி வீழ்ந்த முனிவர்களை எழுப்பி அவர்களை மன்னித்து அருளினார் எம்பெருமான்.

பிட்சாடன வடிவத்தில் சிவனார் அருகே இரு குள்ளர்கள் காணப்படுவர். ஈசன் பின் இரு கைகளிலும் சூலமும் உடுக்கையும் ஏந்தி நிற்பர். முன் வலது கரம் மானுக்குப் புல் அளிப்பதாகவும் இடது கரம் கபாலம் ஏந்தியதாகவும் காணப்படும்.

அழகிய இச்சிறப்ப வடிவங்கள் தமிழ் நாட்டிலே தாராசுரம், தஞ்சாவூர், பேரூர், வழுவூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இஃது இறைவனது பிட்சாடன மூர்த்தமாகும். அடுத்து சிவபிரானது கஜசம்ஹார மூர்த்தத்தின் வரலாற்றை நோக்குவோம். கஜம் என்றால் யானை என்று பொருள். சம்ஹாரம் செய்தல் அழித்தல் என்று பொருள்படும். இம் மூர்த்தத்தில் எம்பெருமான் யானையைச் சம்கரித்து அதன் தோலை கஜவுரியாகப் போர்த்தி உள்ளார்.

தாருகாவனத்து முனிவர்கள் எம்பெருமானோடு போர் புரிந்தபோது தமது தவ வலிமையால் யாக குண்டங்களிலிருந்து கொடிய விலங்குகளை உருவாக்கி அவற்றை ஈசன் மேல் ஏவினர். அத்தகைய விலங்குகளில் ஒன்று யானை. யானை ஈசனை நோக்கி வேகமாக வந்தபோது எம்பெருமான் அதனைக் கொன்றழித்து அதன் தோலை உரித்துப் போர்வையாகத் தன் மேனிமேல் போர்த்தருளினார்.

இவ்வடிவத்தில் எம்பெருமான் பல ஆயுதங்களை கரங்களில் ஏந்தியுள்ளார். இடது பாதத்தை யானையின் தலைமீது ஊன்றி உள்ளார்.

இவ்வடிவம் தமிழ் நாட்டிலே வழுவூர், தாராசுரம் ஆகிய தலங்களிலே சிறப்பாக அமைந்துள்ளன. காணக்கிடைக்காத காட்சியிது.

எம்பெருமான் யானைத்தோல் போர்த்த வரலாற்றைத் திருஞானசம்பந்தப் பெருமான் திருகோணமலைப் பதிகத்தில் பாடியுள்ளவற்றைப் பாருங்கள்.

"கடிதெனவந்த கரிதனை உரித்து"
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதல் அவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலம் சுமந்து
குடிதனைப் நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமாமலை அமர்ந்தாரே.

*அறிவே நன் மனிதனைத் தொடங்கி வைக்கிறது. அதுவே அவனை முழுமை அடைவிக்கிறது.*

தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம்! இதுவரை இவ்விளக்கேற்றும் நிகழ்வை "மங்கல விளக்கேற்றல்" என்ற பதத்தாலேயே கேட்டுவந்த எமக்கு "ஒளி ஏற்றுவார்கள்" என்ற பதம் வியப்பைத் தந்த வேளையில் மிக அர்த்த புஷ்டியாக அமைந்ததையும் தொடர்ந்த உரைகள் விளக்கி நின்றன. ஒளியேற்றல் நிகழ்வு எம்முடன் அம்மேடையில் கலந்துகொண்ட பிரமுகர்கள் உட்பட பலராலும் நிறைவு செய்யப்பட்டது. இதேவேளை எம் மாணவச் செல்வங்கள் ஏறக்குறைய 20-30 பெட்டிகளில் பொதிசெய்யப்பட்ட அத்தனை உதவு பொருட்களையும் ஏற்கனவே பெட்டிகளில் சுட்டிகளிடப்பட்டு ஒழுங்கமைத்த முறைப்படி அடுக்கி வைத்த பாங்கு பிள்ளைகளின் ஒத்துழைப்பான ஒருங்கிணைந்த செயற்பாட்டினை வெளிப்படுத்தி நின்றது.

ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழமைபோன்று நடைபெற்றன. சுவாமிகள் தமது ஆசியுரையில் சந்நிதியானின் பெருங் கருணையே இத்தகு உதவுபொருட்களை எம்மால் இங்கு கொண்டுவந்து தர வைத்தது. அவனது அருட்தூண்டல் இதனை வழங்க உதவிய தம்பதிகளை உசுப்பேத்தி உதவ அவர்கள் இப்பெருங் கைங்கரியத்தை செய்த சம்பவத்தை விளங்க வைக்க. அங்குள்ள அனைவரும் ஆச்சரியப்பட்ட கணங்களாக அவை அமைந்தன. எம் அன்பானவர்களே! இன்று எம் பாடசாலைகள் பலவற்றிற்கு தங்களை வளர்த்த தாயிவள் என நினைத்து பல பழைய மாணவர்கள் அள்ளிக் கொட்டிக் கொண்டிருப்பது யாழ் மண்ணின் அன்றாடச் செய்திகள். இவை பெயர் வளைவுகளாகவும், சரஸ்வதி சிலைகளாகவும், ஏன் மாடிகளாகவும்கூட அமைகின்றன. இத்தகு பல பள்ளிகளின் கல்விப் பெறுபேறுகள் உள்ளீடுகளிற்கேற்ப வெளியீடுகள் கிடைக்காதவையாக வெறுமனே பௌதீக வளத்தை விருத்தி செய்வனவாக அமைதல் வேதனையே. அது மட்டுமல்ல பல பள்ளிகளில் கட்டப்பட்ட வகுப்பறைகளிற்குரிய பிள்ளைகள் தொகை இல்லா நிலையும் இவற்றின் பெறுபேற்றுச் சுட்டிகளும் சரிந்து இழுத்து மூடும் அளவுக்கு உள்ள தன்மையும் இங்கு சுட்டிக் காட்டுதல் பொருந்தும். எனவே உதவும் அன்பு உள்ளங்களே களநிலையைக் கருத்திற் கொண்டு நீங்கள் உங்கள் வியர்வை சிந்தி உழைத்த பணத்தை வீண் விரயமாக்காது தகுந்த உதவிகளை தரமறிந்து செய்யின் பள்ளிகளும் பிள்ளைகளும் பெருமையுறுவர். இதே கருத்தை இங்கு இம் மேடையில் கருத்துரையாக வழங்கியிருந்தார் ஒரு நலன் விரும்பி என்பதையும், அவர்கூட மிகநீண்ட காலமாக இப்பள்ளியுடன் தொடர்புகொண்டு தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருப்பவர் என்பதையும் சுட்டிக்காட்டலாம். அதுமட்டுமல்ல உதவிகள் என்ற பெயரில் பலர் உதவ வந்து பள்ளி நிர்வாகத்திலும் பல இடைஞ்சல்கள் செய்து முரண்பாடுகள் செய்யும் நிலையும் இப்போ தலைதூக்கி ஆலயங்களைப்போல சில பள்ளிகளும் வழக்காடும் நிலைக்குத் தள்ளப்படுதலையும் தவிர்க்க முருகன் இம்மலரூடாக உங்களை விழிப்படையச் செய்கிறான். இத்தனைக்கும் இவர்

ஓர் பெரிய பட்டம், பதவி பெற்றவரல்ல. ஊருக்காக, பள்ளிகளுக்காகத் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் ஓர் மூத்த பிரஜை அவ்வளவே.

அதிபர் தமது உரையில் மிக அடக்கமாக எம்மை வாழ்த்தி வரவேற்று தமது பள்ளியையும் ஒரு பொருட்டாக மதித்து வந்து இந்த ஏழைச் சிறார்களின் வாழ்விற்கு ஒளி ஏற்றும் வண்ணம் கற்றல் உபகரணங்களை முருகன் தர வைத்தமை அவன் திருவிளையாடலே என அழுத்தியுரைத்தது மட்டுமல்லாமல், தாமும் ஒரு தரம் செல்வச் சந்நிதியானைத் தரிசிக்கவேண்டும் என்ற அவாவையும் விளம்பி நின்றார். அதுமட்டுமல்ல வாழும்பொழுதே ஒரு சுவாமிகளைத் தரிசித்து அவர் மூலமாக வருங்காலப் பிள்ளைகளை வளமாக்கும் ஒரு பேருதவியைப் பெற்றதை தம் வாழ்நாளில் மறக்கமுடியாத ஆனந்த அருள் அனுபவம் என்பதையும் குறிப்பிட்டு மகிழ்ந்தார்.

தொடர்ந்து உதவு பொருட்கள் மிக நேர்த்தியாக அனைத்து மாணவர்களது மனங்களும் குளிரும் வண்ணம் சுவாமிகளாலும் எம்மோடு வந்த அன்பர்களாலும் வழங்கிய நிகழ்வைத் தொடர்ந்து எங்கள் அனைவர்க்கும் மிகவும் அன்பான மதியபோசன விருந்து வைத்து வழியனுப்பினர்.

நாம் இப்பொழுது இன்னோர் முக்கிய இடத்திற்குச் சென்று அவர்களுடனும் அளவளாவிச் செல்வோம் என்று அங்கு அழைத்துச் செல்கிறார்கள். ஆம்! அதுதான் புதுக்குளம் முருகர் தங்கம்மா ஞாபகார்த்த முதியோர் இல்லம். கனகராயன் குள A9 பாதையில் சற்று உள்ளே 3-4 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளதுதான் புதுக்குளம் தங்கம்மா முதியோர் இல்லம். பார்க்கிறோம் இப்பொழுதுதான் தொடங்கப்பட்டுள்ளது. காடு வெட்டி கட்டிடங்கள் அமைத்து காய்கறிப் பயிர்களும் கனி மரங்களும் நாட்டி கச்சிதமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. இது எமது புறப்பார்வை. சற்று உள்ளே செல்ல அங்கே கல்வி வளாகம், முதியோர் இல்லம் என இரு பிரிவுகள் தென்படுகின்றன. எம்மை காவலாளி அழைத்துச் செல்கிறார். கல்வி வளாகம் முதல் தெரிகிறது. வெளியில் நின்றே பார்க்கிறோம். புதிய கட்டிட அமைப்பு. வகுப்பறைகளைத் தடுப்புகள் கொண்டே பிரித்திருக்கிறார்கள். ஓர் அம்மணி. இவர்தான் இவ்வளாகத்தின் பொறுப்பாளர். இவருடன் அளவளாவி, இவர்களது பணிகளைப்பற்றி ஆராய... (தொடரும்..

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மே | 09 | சித்திரை | 26 | புதன் | திருநாவுக்கரசர் |
| மே | 20 | வைகாசி | 06 | ஞாயிறு | நமிநந்தியடிகள் |
| | | | | | சேக்கிழார் |
| மே | 31 | வைகாசி | 17 | வியாழன் | திருஞானசம்பந்தர் |
| | | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| யூலை | 16 | ஆனி | 32 | திங்கள் | மாணிக்கவாசகர் |
| யூலை | 20 | ஆடி | 04 | வெள்ளி | மயில்வாகனம் சுவாமிகள் |
| யூலை | 21 | ஆடி | 05 | சனி | சுந்தரமூர்த்தி நாயனார் |
| யூலை | 27 | ஆடி | 11 | வெள்ளி | பட்டினத்தடிகள் |

*வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளை நிதானத்துடன் எடுத்துக்கொள்ள வேண்டும்.*

# முருகப் பெருமானின் பெருமைகள்

– திரு வி. செல்வரத்தினம் அவர்கள் –

"முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு நுங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர்குல மடங்கப்
பொடியாக் கியபெரு மாள் திருநாமம் புகல்பவரே"

-கந்தரலங்காரம்.



இறைவனது திருப்பெயர்களைக் கூறுவதால் பெறும் ஆனந்தமே பேரானந்தம் ஆகும். முருகப் பரம்பொருளின் அளவற்ற திருநாமங்களில் சரவணபவன், குமரன், கந்தன், குகன், வேலாயுதம், மயில் வாகனன், சேவற்கொடியோன் என்னும் பெயர்கள் அடிக்கடி அடியார்களால் போற்றித் துதிப்பவைகளாகும். "சரவணபவ" என்னும் ஆறு எழுத்துக்கள் முறையே செல்வம், கல்வி, முக்தி, பகை வெல்லல், காலஜயம், ஆரோக்கியம் முதலிய ஆறு பேறுகளையும் அருளவல்லவை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வாறெழுத்தில் உலகிலுள்ள ஏழு கோடி மந்திரங்களும் அடக்கம் எனச் சொல்லப்படுகிறது.

முருகன் என்னும் சொல்லுக்குத் தெய்வத்தன்மை, மாறாத அழகு, குன்றாத இளமை என்றெல்லாம் பொருள். மேலும் குமரன் என்ற சொல் வாலிபத் தன்மையைக் குறிக்கும் என்றும் பிறவி மயக்கத்தை ஒழிக்கும் என்றும் கூறுவர். கந்தன் என்ற பெயர் "ஒன்று சேர்ந்தவன்", இனிய மனமுடையவன், சர்வ வல்லமையுடையவன் என்றெல்லாம் பொருள். மேலும், "எவ்விதப் பற்றுக்கோடுமின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவப் பொருளும் உண்டு.

முருகனைக் குழந்தை உருவில் வைத்து வழிபடுவது ஏராளமான பக்தர்களின் வழக்கமாக இருக்கிறது. முருகப்பெருமான் எதிலும் சார்பற்றவர். அவர் மாயையால் சூழப்பட்டுள்ள அடியார்களுக்கு விடுதலை அருள முடியும். இதனைக் கந்தரநுபூதி மூலம் விளக்கப்படுகிறது.

"எந்தாயு மெனக் கருள் தந்தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநாய கனே"

ஆறுமுகம் என்ற சொல்லுக்கு ஆறு திருமுகங்கள் உடையவன் என்றும், எல்லா நலங்களையும் உடையவர்

*சத்திய நெறியை அறிந்து அதைப் பின்பற்றத் தவறுகின்றவன் கோழை.*

என்று பொருள்படுகிறது. முருகப்பெருமானது திருமுகங்கள் ஆறும், வேதங்களும் இதிகாசங்களும் வலியுறுத்தும் ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியத்தை விளக்கும் ஆறு மகாவாக்கிய மந்திரங்களாக இருக்கின்றன என்பர்.

மயில்வாகனன் என்னும் பெயர் மயிலை வாகனமாக உடையவன் என்றும், வேலாயுதம் என்னும் பெயர் வேலாயுதத்தைத் திருக்கரத்தில் தாங்கிய பெருமான் என்றும் பொருள் கொடுக்கின்றன. அழகுக்கே உறைவிடமான முருகப்பெருமான் மயில்மீது அமர்ந்துவரும் காட்சி அதிகாலையில் சூரியன் நீலவானத்தில் உதயமாகும் அற்புதத் தோற்றத்தை நினைவூட்டுகிறதென்பதை அருட்பிரகாச வள்ளலார் இப்படி வர்ணிக்கிறார்.

"சீர்திகழ் தோகைமயில் மேலே - இளஞ்
செஞ்சுடர் தோன்றுந் திறம் போலே
கூர்வடி வேல் கொண்டு நம் பெருமான் - வரும்
கோலத்தைப் பாருங்கள் கோதையர்காள் நீலவானத்தில்"

அதாவது புற இருளைப் போக்கச் சூரியன் தோன்றுகின்றான் என்றால் முருகப்பெருமான் திருக்கையில் வேலுடன் கோல மயில்மீது அமர்ந்து அக இருளைப் போக்க வருகிறார்.

மயில், எம்பெருமானுக்கு வாகனமாக இருந்து அடியார்களால் பெருமையுடன் வணங்கப்படுகிறது. "மயிலுண்டு பயமில்லை" என்பது ஆன்றோர் அருளிய வாக்கு. யானை, ஆடு, மயில் ஆகிய மூன்றும் முருகனுக்கு வாகனமாக விளங்கியபோதிலும் மயிலுக்கே மிகவும் சிறப்புத் தரப்படுகிறது. ஆறுமுகப் பெருமானின் சேவற் கொடியையும் அழகிய மயில்வாகனத்தையும், திருக்கரத்தில் விளங்கும் வேலையும் போற்றித் துதித்தாலே போதும் எம்பெருமானின் அருள் நிச்சயம் கிடைக்கும் என்று சிதம்பர சுவாமிகள் கூறுகிறார்.

"கோழிப் பதாகையுஞ்சீர்க் கோலமயில் வாகனமும்
ஆழிப் பெருக்குறிஞ்சி யார்வேலும் வாழியெனத்
தோத்திரஞ் செய்; போரூரிற் சுந்தரனார் பேரருளோர்
மாத்திரையில் நெஞ்சே வரும்"

ஆறுமுகப் பெருமானின் உருவத்தைக் கண்டால் இன்பம் ஊறும், பெயரைச் சொன்னாலும், கேட்டாலும், நினைத்தாலும் உள்ளம் உருகும். ஒப்பற்ற ஆனந்தம் பெருகும், தீராத வினைகள் எல்லாம் தீரும், எண்ணற்ற நலங்கள் பெருகும். இந்த ஆறுமுகனே முத்திக்கொரு வித்தாகவும் திகழ்கிறது. பக்தியுடன் தம்மை அணுகும் அன்பர்களுக்கு ஆறுமுகப்பெருமான் காட்சி கொடுப்பார். இதனைக் குமரகுருபர சுவாமிகள் கந்தர் கலிவெண்பாவில்,

"பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்சம் அகற்றும் அயில் வேலும் - கச்சைத்
திருவரையும் சீரடியுஞ் செங்கையும் ஈராறு
அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் - விரிகிரணம்
சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற - வந்து இடுக்கண்
எல்லாம் பொடி படுத்தி எவ்வரமும் தந்து புகுந்து
உல்லாச மாக உளத்திருந்து"

அருள் புரிவதாகப் பாடியுள்ளார்.

*சரியான நேரத்தைத் தேர்ந்தெடுப்பது நேரத்தை மிச்சப்படுத்துவதாகும்.*

ஆறுமுகப் பெருமானது நாமம் பக்தர்கள் மனதில் மகிழ்வையும் கொடுத்து, பகைவர்களின் கொடுமையிலிருந்தும், பழிகளிலிருந்தும் பாதுகாத்து அவர்களுக்கு நற்பயனைக் கொடுப்பார். வினைப்பயனால் ஏற்படும் துன்பங்களும் பெரிய பிணிகளும் விலகி ஓடும். ஆகவே நலங்கள் நிறைந்த முருகனது நாமத்தை எப்பொழுதும் சொல்லி, நன்மை அடையலாம்.

முருகனை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து உருகும் அடியார்முன் அச்சம் தரும் யமன் முகம் தோன்றினால், உடனே முருகப்பெருமான் கருணையுடன் ஆறுமுகங்களும் தோன்றி ஆறுதல் அளிக்கும். ஆவி பிரியும் வேளையில், மரணப் போராட்டம் ஏற்படாமல் இருக்க, முருகன் வேலுடன் தோன்றி அபயமளிக்குமாறு வேண்டினால் அவன் கண் முன்னே தோன்றி முத்தி அருளுவான்.

**"அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்**
**வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும் - நெஞ்சில்**
**ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்**
**முருகா என்றோதுவார் முன்"**

-திருமுருகாற்றுப்படை வெண்பா-

கந்தனைக் கரங்குவித்து வணங்குபவர்களுக்கு கலியின் கொடுமையும், யம பயமும் கிடையாது. உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் உயிராக விளங்கி செயலாற்றும் தெய்வம் முருகப்பெருமானே! பக்தர்களின் அகத்திற்கும், புறத்திற்கும் தரிசனம் தந்து அவர்கள் வேண்டும் வரங்கள் எல்லாம் கொடுக்கும் தெய்வம் முருகப்பெருமானே ஆகும்.

எங்கும் ஏக உருவாய்ப் பொங்கித் ததும்பிப் பூரணமாய் விளங்கும் முருகனின் பெயரைச் சொன்னாலும் கேட்டாலும் நினைத்தாலும் உள்ளம் உருகும். ஒப்பற்ற ஆனந்தம் பெருகும். தீராத வினைகளெல்லாம் தீரும். எண்ணற்ற நலங்கள் பெருகும் என குமரகுருபர சுவாமிகள் கந்தர் கலிவெண்பாவில் கூறியிருக்கிறார்.

"முருகப் பெருமானே, ஆறுமுகங்களும், பன்னிரு தோள்களும் உடையவராய், வலப்பக்கத்தில் வள்ளியம்மனும், இடப்பக்கத்தில் தேவசேனையம்மனும் சூழ்ந்திருக்க, திருக்கையில் வேலுடன் மயில்மீது அழகான கோலத்தில் அமர்ந்திருக்கும் முருகப்பெருமானை போற்றி வழிபட்டு வந்தால் எம்பெருமான் என்றென்றும் அருள் புரிந்து நற்கதி அடையச் செய்வார் என்பது அருணகிரிநாத சுவாமிகளின் வாக்காகும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

E.mail: suthanm329@gmail.com

*நடந்ததற்காக வருந்தாமல் முடிந்ததற்காக மகிழ்ச்சி கொள்ள வேண்டும்.*

# திருமுறை பாடிப் பணிவோம்

- திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் -

சிவனடியார்களால் அருளப்பட்ட திருமுறைகளைப் பாராயணஞ் செய்யும் நாம் அவர்களது வரலாறுகளையும் அறிந்திருப்பது அவசியமானதாகும். அவர்களது வரலாறு கூறுவதே பன்னிரண்டாந் திருமுறையாக அமைந்துள்ள பெரியபுராணம் என்று அழைக்கப்படும் திருத்தொண்டர் புராணம்.

சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய திருத்தொண்டத்தொகை அறுபத்திரண்டு நாயன்மார்களின் வரலாற்றை மிகச் சுருக்கமாகக் கூறியுள்ளது. நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் அந்தாதி சுந்தரமூர்த்தி நாயனாரையும் சேர்த்து அறுபத்துமூவர் பற்றிப் பேசியுள்ளது. இவற்றை அடியொற்றி சேக்கிழார் பெருமானால் எழுதப்பட்டதே திருத்தொண்டர் புராணம். "உலகெலாம்" என இறைவன் அடியெடுத்துக் கொடுக்க அதனை முதலடியாகக் கொண்டு சேக்கிழார் பெருமான் பாடிய புராணம் என்னும் பெருமை இதற்குரியது.

உலகெலாம் எனத் தொடங்கும் பாடலை இங்கு பார்ப்போம்.

**உலகெலா முணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

இந்த உலகம் முழுவதும் உணர்ந்து போற்றுவதற்கு அரியவனும் பிறைச் சந்திரனைச் சூடியவனும் கங்கையைத் தரித்ததால் நீர் நிறைந்ததுமான சடாமுடியை உடையவனும் அளக்கவியலாத ஒளிமயமானவனும் பொன்னம்பலத்திலே ஆடுபவனுமாகிய சிவபெருமானது சிலம்பணிந்த மலரடிகளை வாழ்த்தி வணங்குவோம் எனும் பொருள் கொண்ட இப்பாயிரப் பாடல் சிவனின் திருவடிகளைப் போற்றுகிறது.

அண்மையில் எனக்கொரு சந்தேகம் ஏற்பட்டு மனதைக் குடைந்து கொண்டிருக்கிறது. "ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல நீயே எனக்கென்றும் துணையிருப்பாய் என்று நம்பியிருந்தேன். எங்குற்றாய்" என ஆரம்பித்து நீண்டுகொண்டே இருக்கின்றன என் கேள்விகள். இக்கட்டுரைக்காகப் பெரியபுராணத்தைப் பார்த்தவேளை கண்ணப்பரின் ஆழ்ந்த அன்பு மனதை இடித்தது.

**வெம்மறக் குலத்து வந்த**
**வேட்டுவச் சாதி யார்போல்**
**கைம்மலை கரடி வேங்கை**
**அரிதிரி கானம் தன்னில்**
**உம்முடன் துணையாய் உள்ளார்**
**ஒருவரு மின்றிக் கெட்டேன்**
**இம்மலைத் தனியே நீரிங்**
**கிருப்பதே என்று நைந்தார்.**

கொடிய வேடர் குலத்திலே வந்த வேட்டுவச் சாதியார்போல யானைகள், கரடிகள், வேங்கைகள், சிங்கங்கள் ஆகியன திரிகின்ற இக்காட்டில் உம்முடன் துணையாய் எவருமில்லாது இருக்கக் கெட்டேன். இம்மலையில் தனியே நீரிங்கிருக்கலாமோ என்று நைந்தார் என்று கூறுகிறது மேற்குறித்த பாடல்.

நாமோ எமக்குத் துணையாய் இறைவன் இருக்கவேண்டுமென்று எண்ணுகிறோம். கண்ணப்பரோ கொடுமான காட்டில் சிவபிரான்

*உன்னுடைய தவறுகளை மற்றவர்கள் மிகைப்படுத்துவதற்கு முன்னால் ஒப்புக்கொள்.*

துணையின்றி இருப்பதற்காகக் கவலையுறு கிறார். காளத்தியப்பன் கொடிய விலங்கு களின் நடுவேதான் அன்று தனித்து நின்றான். இன்று குருரங்களெல்லாம் சடைவிரித்தாட அவற்றின் நடுவே இறைவன் தனித்து நிற் பதுபோல் என்னுள் ஒரு பிரமை. கொன்றுண் ணும் வேட்டுவக்குலத்துள்ளும் பக்தி பிர வாகித்ததுபோல் இன்றும் அன்பு எல்லோர் மனங்களிலும் ஊற்றெடுத்துப் பெருகவேண் டும் என்ற வேண்டுதலோடு இப்பாடலைப் பாடலாம்.

இவ்வாறு திருத்தொண்டர் வரலாறு கூறும் பாடல்கள் அனைத்துமே பாடிப்பரவ ஏற்றவையாக அமைந்துள்ளன. "உலகெலாம்" என சிவபெருமானே எடுத்துக் கொடுத்த அடி புராணத்தின் இடையிடையே இணைக் கப்பட்டுள்ளதுடன் 2114ஆம் பாடலிலும் இறு திப் பாடலிலும் காணப்படுவது தனிச் சிறப் பாகும். "உலகெலாம்" எனத் தொடங்கி அதே சொல்லுடன் புராணம் நிறைவுறுகிறது. அவ்வாறு நிறைவு செய்யும் பாடல் வருமாறு:

**என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்**
**ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட**
**மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்**
**நின்று எங்கும் நிலவி உலகெலாம்.**

"எப்பொழுதும் இன்பம் பெருகிக் கொண்டிருக்கும் இயல்பினால் ஒன்றி பக்தி செலுத்துவதனால் உள்ளம் உயர்வடைய தில்லையம்பலத்தில் ஆடும் நடராசப் பெரு மானதும் அவரது திருத்தொண்டர்களதும் வானளவு உயர்ந்த புகழ் உலகமெங்கும் பரவி நிற்கின்றது" என்று திருத்தொண்டர் புராணம் நிறைவுறுகிறது.

இறைவனிடம் பக்தி செலுத்தச் செலுத்த உள்ளம் உயர்வடையும் என்பதை நாம் மனதிற் கொள்ளவேண்டும். அதனால் இன்பம் எப்பொழுதும் இடையறாது பெருகும். எனவே தினமும் இறைவனை வழிபாடு செய் யும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

பன்னிரண்டாவது திருமுறையாக பெரியபுராணமே அமைந்துள்ளது. எனவே திருமுறைகளைப் பாராயணம் செய்யும்போது பெரியபுராணத்திலுள்ள பாடல்களையே பாட வேண்டும் என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

இத்தொடரை ஆரம்பிக்கும்போது அனைவரும் ஒவ்வொரு நாளும் திருமுறை களைப் பாடி வழிபாடு செய்ய வேண்டும். பாடல்களைப் பொருளுணர்ந்து பாடவேண் டும். அதற்கேற்ற வகையில் கணிசமான பாடல்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என்றவாறு எனது நோக்கமிருந்ததாயினும் பல்வேறு காரணங்களால் அந்த நோக்கம் முழுமையாக எய்தப்படவில்லை.

ஞானச்சுடரில் முதன்முதலில் எழு திய கட்டுரைகள் "அரைநிமிட நேரம்" என் னும் நூலுருப் பெற்றபோது "இவற்றை எழுதி வெளியிட்டு என்ன பயன் பெற்றீர்?" என ஒருவர் கேட்டதை அதன்பின் நடந்த பல் வேறு சம்பவங்கள் நினைவூட்டிக்கொண்டே இருக்கின்றன. ஞானச்சுடரின் ஒளியைக் கண்டேயிராத இருட்குகைகள் எமைச் சூழ உள்ளன என்ற உண்மையை உணர்ந்த வேளை உதிரம் கசிய வேதனைப்படுவதை விட வேறெதுவும் செய்யவியலவில்லை. நாம் என்ன செய்தும் எவ்வளவு எழுதியும் அவன் அருளின்றி அவன் கழல் வணங்கும் பக்கு வம் ஏற்படாது என்பது உண்மையே. தினந் தினம் சில நிமிடங்களாவது திருமுறை களைப் பாடிப் பணியும் வழக்கத்தைக் கைக் கொள்ளுங்கள். அது ஆன்மாவை உய்விக் கும் என்பது உண்மை. (நிறைவுற்றது)

*எல்லா வேதங்களின் சாரம் வலிமை என்கின்ற சொல்தான்.*

(கட்டுரைத்தொடர் - 41)

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## சைவமும் தமிழும் கலைகளும் செழித்து வளர்ந்திருக்கும் இணுவில் பதியில் வாழ்ந்த சித்த புருஷர்கள்

### (01) இணுவில் கிராமத்தின் சிறப்பு:

சைவமும் தமிழும் சிறந்தோங்கி வளரும் பெருமையும், கலை இலக்கியங்கள் என்றும் இனிது பல்கிப்பெருகும் சிறப்பும், பார்க்குமிடமெங்கும் ஆலயங்கள் நிறைந்து காணப்படும் மகிமையும் தெய்வத் தமிழாகிய திருமுறைகளைப் பண்ணோடும் பக்தியோடும் நாளாந்தம் ஆலயங்களுக்குச் சென்று பாடித் துதிக்கும் அடியார் கூட்டமும், எந்த நாளும் ஏதாவது விழாக்கோலம் பூண்டு கொண்டிருக்கும் வனப்பும் உடைய கிராமமே இணுவில் பதியாகும். ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் அரசின் அனுசரணையுடன் சுதேசிய மக்களை மதம் மாற்றும் முயற்சியில் கிறிஸ்தவ மிஷனரிகள் பெரும் ஆர்வம் காட்டிப் பல தந்திரங்களைக் கையாண்டு செயற்பட்டார்கள். அவர்களுடைய முயற்சிகள் சில கிராமங்களிலே பலித்தது. ஆனால் இணுவில் கிராமத்தில் வைத்தியசாலை, பாடசாலை என்பனவற்றை நிறுவிப் பல யுக்திகளைக் கையாண்டபொழுதுங்கூட ஒருவரையும் மதம் மாற்ற முடியவில்லை. போர்த்துக்கீசருடைய காலத்தில் சைவ ஆலயங்கள் அனைத்தும் இடித்துத் தரைமட்டமாக்கி, நமது மக்களின் வழிபாட்டு உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டிருந்த காலத்தில் வளவுகள் தோறும் வைரவ சூலத்தை நட்டு வழிபட்டு சைவ சமயத்தை அழியவிடாமற் பாதுகாத்த யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கிராமங்களில் இணுவில் முதன்மை பெறுகின்றது. இணுவில் கிராமத்தில் பக்தர்கள், சித்தர்கள், யோகிகள், ஞானிகள் எனப் பலதரப்பட்ட ஆத்ம ஒளி பெற்றவர்களும் வாழ்ந்து வந்தார்கள். சிவாலய விதிமுறைகள் தவறாது கிரியைகளைச் செய்து வரும் சிவாச்சாரியார்கள், புராணங்களுக்கு விரிவாக உரை சொல்லும் ஆற்றல் படைத்த பௌராணிகர்கள், தேவ கானமாகிய இசையை தவில், நாதஸ்வரம், வயலின், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் ஊடாக வெளிப்படுத்தும் கலைஞர்கள், சிவனை மறவாத சிந்தையாளர்களாக விளங்கும் சிவபக்தர்கள் எனப் பலரும் வாழ்ந்து வந்தார்கள்; இன்றும் வாழ்கின்றார்கள்.

பெரிய சன்னாசியார், சாத்திரம்மா, தவத்திரு வடிவேல் சுவாமிகள் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

### (02) பெரிய சன்னாசியார் (1860 - 1917):

இணுவில் கிராமத்தின் அரசோலை என்ற குறிச்சியில் சிவநெறி வழுவாது வாழ்ந்த கந்தர் தெய்வானை செய்த தவத்தின் பயனாக கி.பி.1860இல் அவர்களின் இரண்டாவது மகனாகச் சுப்பிரமணியம் என்ற தவசீலர் தோன்றினார் இக்கிராமத்தில் வாழ்ந்த பெரும்பாலானவர்களின் தொழிலாக விவசாயமே இருந்தது. ஒரு சிறந்த விவசாயி தமது பாற்பொருட்களுக்கும் விளைநிலத்துக்குமான பசளைக்குமாகப் பல கால்நடைகளையும் பேணி வருவார். சுப்பிரமணியம் தமது இளமைப் பருவத்தில் கால்நடைகளை

*அவநம்பிக்கை கொள்வதை நிறுத்தினால் உங்கள் பயமும் நின்றுவிடும்.*

மேய்க்கும் பணியினை மேற்கொண்டார். "நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு" என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு அமைய நாளாந்தம் தவறாது ஆலய தரிசனம் செய்து வந்தார். தொழுவத்திலுள்ள பசுக்களை அழைத்துச் சென்று காரைக்கால் புல்வெளியில் மேயவிடுவார். தாயார் மதிய உணவைக் கொண்டு சென்று கொடுப்பார். மாலையில் ஆநிரைகளை அழைத்துச் சென்று வீட்டுத் தொழுவத்தில் சேர்ப்பார்.

பசுக்களை மேய்க்கும் இடையனாகத் தொழில்புரிந்து வந்த சுப்பிரமணியத்தைக் காரைக்காலில் இருந்து அருள் பாலிக்கும் மாரியம்பாள் தனது அருட்பார்வையால் ஆட்கொண்டார். சுப்பிரமணியத்திற்கு ஒரு நாள் தாயார் கொண்டுவரும் மதிய உணவு தாமதம் ஆகிவிட்டது. பசியால் வாடிய இவர் "மாரியம்பாளே தஞ்சம்" என்று கூறியபடி மரநிழலிலே உறங்கிவிட்டார். தயைப் பிரகாஜினியாகிய மாரியம்பாள் அன்பர் சுப்பிரமணியத்தின் பசியைப் போக்க விரும்பினார். தாயார் தெய்வானையைப் போன்ற உடை நடை பாவனையில் நேரில் வந்து திருவமுதை வழங்கிச் சுப்பிரமணியத்தின் பசிப்பிணியைப் போக்கினார். அன்னை பராசக்தியாகிய மாரியம்பாளின் கையாலே உணவை வேண்டி உண்ட சுப்பிரமணியம் ஞானம் பெற்ற சித்தரானார். சிறிது நேரத்தில் வழமையான உணவுடன் வந்த தாயார் மகனின் ஞான நிலையைக் கண்டு வியந்தார். தாயும் மகனும் மாரியம்பாளின் அற்புதத்தை எண்ணிப் போற்றித் துதித்தனர்.

உலக மாதாவாகிய அன்னை பராசக்தியின் அருளுக்குப் பாத்திரமான சுப்பிரமணியம் தவக்கோலம் பூண்டு பூரண துறவியாக, சந்நியாசியாக வாழ்ந்து வந்தார். சித்திகள் பல கைவரப்பெற்ற பெரிய சன்னாசியார் சிவாலயத் திருத்தொண்டு செய்வதில் ஆர்வம் காட்டினார். காடு மண்டிக் கிடந்த காரைக்கால் சிவன் கோயிலைப் புனிதத் தலமாக மாற்றுவதற்காக அரும்பணிகள் பல செய்தார். பெரியாரின் அற்புதங்களையும் சித்துக்களையும் அறிந்த பலர் இவரை நாடி வந்து இவரின் பக்தர்களாயினர். உடற்பிணி, உளப்பிணி என்பவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் பல கிராமங்களில் இருந்தும் இவரை நாடி வந்தனர். தம்மைத் தேடி வந்தோரின் குறைகேட்டு திருவாக்குச் சொல்லித் திருநீறு இட்டு அவர்களின் உடல் உளப் பிணிகளை அகற்றினார். தீராத நோய்கள் பலவற்றை நீக்கியதோடு மன அமைதியற்று நிலை தளம்பிப் போய் இருந்த பலருடைய மனங்களில் தமது அருட்பார்வையால் மன அமைதியையும் ஏற்படுத்தினார். இறையருள் துணையோடு மூலிகை மரங்களில் இருந்து பெறப்படும் மூலப்பொருட்கள்மூலம் சித்த வைத்தியம் செய்து மக்களின் பிணிகள் பலவற்றைப் போக்கினார்.

அடியார்கள், பக்தர்கள் எனப் பலரும் இவருடைய மகிமையை அறிந்து இவரை நாடி வந்தனர். இவ்வாறு வந்தவர்கள் பலர் பெரிய சன்னாசியாரின் சிவத்தொண்டுக்கு உதவிபுரியும் தொண்டர்களாக மாறினர். காரைக்கால் சிவன் கோயில் சூழல் முழுவதும் துப்புரவு செய்யப்பட்டு புனிதமாக்கப்பட்டது. சித்த மருத்துவத் தேவைக்கான மூலிகை மரங்கள், ஆலயச் சூழலை மேம்படுத்தும் தெய்வீக மரங்களாகிய ஆல், அரசு, வேம்பு போன்றனவும் யாவர்க்கும் பயன்தரும் கனிமரங்கள், நிழல் மரங்கள் உட்பட 1008 நன் மரங்களை பக்தர்களின் துணையோடு ஆலயச் சூழலில் நாட்டினார். காரைக்கால் சிவன் கோயில் சூழல் சோலைவனமாக மாற்றம் பெற்றது. மரங்களை நட்டதோடு மாத்திரமல்லாது ஆலயத்தின் நான்கு வீதிகளிலும் இரு கிணறுகள், ஐந்து திருக்குளங்கள் உட்பட ஏழு நீர் நிலைகளைத்

தோண்டுவித்தார். சித்தபுருஷராகிய இவரிடம் இணுவில் மண்ணுக்கே உரிய கலையுணர் வும் குடிகொண்டிருந்தது. நாட்டார் பாடல்கள் தெருக்கூத்து என்பவற்றை ஆதரித்தார். ஆட லும் பாடலும் ஒருங்கிணைந்த கலையுணர் வில் பக்தர்கள் செயற்பட, பெரியார் யோக நெறியில் கண்ணயர்ந்து ஆழ்ந்திருப்பார். பெரியாரின் உறக்கத்தைக் கெடுக்கக் கூடா தென்று ஆடல் பாடல்களை பக்தர்கள் நிறுத் தும்போது ஓம் என்னும் ஓங்காரத்துடன் அவர் களை இயங்கச் செய்வார்.

**உலகப் பெருமஞ்சத்தை உருவாக்கிய மூலகர்த்தா.**

இணுவில் கந்தசுவாமி கோயில் உரிமையாளரின் உறவினரும் இணுவில் கிழக்கு மஞ்சத்தடியில் வாழ்ந்தவருமாகிய சித்தபுருஷர் பெரிய சன்னாசியார் தன்னை முருகப்பெருமானின் ஆலயப் பணிகளோடு இணைத்துக் கொண்டார். இப்பெரியாரின் சிறப்பினை உலக மக்கள் அனைவரும் போற்றும் வண்ணம் காண்பிக்க முருகப்பெரு மான் திருவுள்ளம் கொண்டார். பெரிய சன்னாசி யாரின் கனவில் தோன்றிய ஆறுமுகப் பெரு மான் ஒரு பெரிய மஞ்சத்தின் திருவுரு வினைக் காண்பித்து, தாம் வீதியுலா வரு வதற்குத் திருமஞ்சமொன்றை உருவாக்குமாறு கட்டளையிட்டார். கலியுகவரதனாகிய கந்த வேட் பெருமானின் பெருங்கருணையாலும், தன்னிடமிருந்த சித்து மகிமையாலும், தமது தொண்டர்களின் உதவியினாலும் தகுந்த மரங்களை முதலில் சேகரித்தார். முருகப் பெருமான் பெரிய சன்னாசியாரின் உருவத் தில் இந்தியாவிற்குச் சென்று சிற்பாசிரியர் களை அழைத்து வந்தார். அந்தக் காலத் திலே வாழ்ந்த தெய்வீகச் சிற்பங்களைச் செய்யும் சிற்பாசிரியர்கள் அகமும் புறமும் தூய்மையானவர்கள். சிற்பங்களை உரு வாக்க முன்பு ஆசார சீலர்களாகி இறை வணக்கம் செய்து மனதை ஒருநிலைப்படுத் திய பின்பே சிற்பங்களைச் செய்ய ஆரம்பிப் பார்கள். அவர்களின் கைவண்ணத்தில் உரு வாகும் சிற்பங்கள் பேசும் சிற்பங்களாகவே காணப்படும். இவ்வாறான சிற்பிகளை "அபர பிரமாக்கள்" என்றே சமய நூல்கள் குறிப்பிடு கின்றன.

கி.பி. 1902ஆம் ஆண்டில் திருமஞ்சம் செய்யும் பணியினைத் தமது வீட்டருகே ஆரம்பித்தார். 1906இல் இப்பெரு மஞ்சம் வெள்ளோட்டம் கண்டது. முதன் முதலாக 1906ஆம் ஆண்டு தைப்பூசத் திருநாளன்று ஆறுமுகப் பெருமான் ஆலயப் பெருவீதியில் பெரு மஞ்சத்தில் பவனிவந்தார். இப்பெருமஞ் சத்தில் முருகப்பெருமான் வருடந்தோறும் இரண்டுமுறை பவனி வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். தைப்பூசத் திருநாளன்றும், வருடாந்த மகோற்சவத்தின் பன்னிரெண்டாம் திருவிழாவிலும் முருகன் பவனி வருவார். யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல கிராமங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் உலகப் பெருமஞ்சத்தில் பவனி வரும் காட்சி யைக் காண்பதற்காக இணுவில் கந்தசுவாமி கோயிலை நோக்கி அணி அணியாக வருகை தருவார்கள். இந்தப் பெருமஞ்சத்தில் காணப்படும் சிற்பங்களை சாதாரண சிற்பக் கலைஞன் ஒருவன் எவ்வாறு உருவாக்கி இருக்க முடியும் என்று வியப்புடன் பார்க் கிறார்கள். அழகன் முருகன் அகத்திலே இருந்து உணர்த்தியதால்த்தான் இத்தகைய தெய்வீக சிற்பங்களை அவர்களால் உரு வாக்க முடிந்தது என்ற முடிவுக்கு வருகின் றார்கள்.

"கதிரமலை காணாத கண் என்ன கண்ணே
கர்ப்பூர ஒளி காணாத கண் என்ன கண்ணே"

என நவாலியூர் சோமசுந்தரப் புலவர் கதிர்காமக் கந்தன்மீது பாடியது போல

*மனிதர்களை உயர்ந்த மனிதர்களாக்குவது சோதனை நேரம்தான். வெற்றி நேரமல்ல.*

"உலகப் பெருமஞ்சத்தைக் காணாத கண் என்ன கண்ணே" என்று முருகப் பெருமானின் மஞ்சத் திருவிழாவை தனது வாழ்க்கையில் ஒருமுறை தானும் காணாதவர்களை நினைத்து இரங்க வேண்டியுள்ளது.

**சமாதி அடைதல்.**

தமது பக்தர்களிடம் தாம் சமாதி அடையப்போகும் காலநேரத்தைப் பெரிய சன்னாசியார் மூன்று மாதங்களுக்கு முன்பே கூறி வைத்திருந்தார். அவர் கூறியபடியே 1917ஆம் ஆண்டு சித்திரை மாத திருவோண நட்சத்திரத்தன்று சமாதி அடைந்தார். சமாதி அடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு (தற் போதைய அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் கருவறை அமைந்துள்ள இடத்தில்) தமது பக்தர்களைக் கொண்டு சமாதிக் கிடங்கைத் தோண்டுவித்தார். சமாதிக் குரிய பொருட்களையும் தமது முதன்மைச் சீடர்கள்மூலம் சேகரித்தார். அவரால் தோண்டு விக்கப்பட்ட கிடங்கில் பெரிய சன்னாசியாரின் சமாதிக் கிரியைகளை அவரின் மூத்த சகோ தரர் வேலாயுதர் தொண்டர்களினதும் உற வினர்களினதும் உதவியுடன் உரிய விதி முறைகளின்படி நிறைவேற்றினார். சமாதி அடைந்த பதினாறாம் நாள் அவரால் வழி பாடு செய்யப்பட்ட வேலைச் சமாதிமீது நிறுவினார். அவ்விடத்தில் சிறிய கோயிலை அமைத்து ஆசார முறைப்படி பூசைகளைச் செய்து வந்தனர். இவ்வழிபாட்டு நிலையமே தற்பொழுது அருணகிரிநாத சிவசுப்பிரமணி யர் ஆலயம் என அழைக்கப்பட்டு வருகிறது.

**(03) தவத்திரு வடிவேற் சுவாமிகள்:**

இணுவில் மேற்கில் வாழ்ந்த காசி நாதர் சின்னக்குட்டி தம்பதிகள் செய்த தவத் தின் பயனாக வடிவேல் சுவாமிகள் 1906ஆம் ஆண்டில் தோன்றினார். விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட காசிநாதர் ஓய்வு நேரங்களில் பெரிய சன்னாசியார் செய்து வந்த திருத்தொண்டுகளிலும் பங்கேற்றுப் பணியாற்றி வந்தார். ஐந்து பெண் பிள்ளை களுக்குப் பின்பு பிறந்தவராகையால் தந்தை யார் காசிநாதர் தன் மகன்மீது மிகுந்த அன்பு பாராட்டி வளர்த்து வந்தார். விவசாய நிலத் திற்குச் செல்லும்போது மகனைத் தோளில் சுமந்துகொண்டே செல்வார். மருதனார் மடம் சந்தைக்கு முன்பாக யோகர் சுவாமிகள் ஒரு மரநிழலில் அன்பர்கள் சிலருடன் உரை யாடிக்கொண்டிருந்தார். தந்தையின் தோளில் இருந்து இறக்கிவிடப்பட்ட வடிவேல் யோகர் சுவாமிகளை நாடி ஓடிச் சென்றார். வடிவேல் சுவாமிகளை அன்போடு அரவணைத்த யோகர் சுவாமிகள் அவருக்கு நயனதீட்சை வழங்கி அவரை ஆட்கொண்டார். கந்தர் மடத்தில் உள்ள வேதாந்த மடத்தில் மகா தேவ சுவாமிகளிடம் சென்று சமய சாத்திர நூல்களைக் கற்குமாறு கூறினார். ஒன்பது வயதாக இருந்த சிறுவன் வடிவேல் அயலில் உள்ள திண்ணைப் பள்ளியில் சேதர் சட்டம்பி யாரிடம் தமிழ், சமயம், பண்ணிசை ஆகிய பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தார். யோகர் சுவாமிகளின் உபதேசப்படி வேதாந்த மடத்தில் மகாதேவ சுவாமிகளிடம் சமய சாத்திரங்கள், சமய தத்துவங்கள் யாவற்றை யும் நன்கு கற்றார். வேதாந்த மடத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகளை நன்கு அவதானித்த வடிவேலர் தாமும் சிறப்பாக பூசை வழிபாடுகள் செய்யச் சித்தம் கொண் டார். இவருடைய தந்தையார் பெரிய சன்னாசியாரின் ஆலோசனைப்படி தமது இல் லத்தின் அருகே சிறு குடிசை அமைத்து சக்தி வழிபாட்டை நடாத்தி வந்தார். தந்தை யார் செய்துவந்த அம்பாளின் பூசா காரியங் களை மகன் வடிவேலர் மேற்கொண்டார். இவர் கிரியைகளைப் பக்திபூர்வமாகச்

செய்வதோடு தெய்வத்தமிழ்ப் பாடல்களாகிய திருமுறைகளைப் பண்ணோடு பாடி மகிழ் வார். அயலில் உள்ள பக்தர்கள் பலரும் ஆலயத்திற்கு வருகை தந்து வணங்க ஆரம் பித்தார்கள். இச்சிறப்பினால் இவ் ஆலயம் "பரமானந்தவல்லி" ஆலயம் என அழைக்கப் படுகிறது.

ஒருநாள் வடிவேலர் தமது தோட்டத் திலிருந்து தோளில் மண்வெட்டியுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். இவருக்கு முன் பாக மாட்டுவண்டியிற் சென்ற யோகர் சுவாமி கள் வடிவேலர் அணிந்திருந்த நான்குமுழ வேட்டியை உரிந்து எடுத்துக் கொண்டார். ஏற்கனவே பக்குவ நிலையிலிருந்த வடி வேலர் யோகர் சுவாமிகளின் செயலால் மேலும் புனிதம் அடைந்தார். இவர் அள வெட்டியில் பலவருட காலம் பண்ணிசை ஆசிரியராகப் பணியாற்றினார். இணுவில் கந்தப் பெருமான்மீது வேல்விருத்தம் என்ற தோத்திரப் பாமாலையைப் பாடியருளினார். இவரின் பெருமையை அறிந்த நயினை முத் துக்குமார சுவாமிகள், குடைச் சுவாமிகள் போன்ற பல சித்தர்கள் இவரை நாடி வந்து ஆன்மீக நெறியில் கலந்துரையாடுவார்கள்.

யோகர் சுவாமிகளின் ஆணைப்படி கிளிநொச்சிக்குச் சென்று சிதைவுற்றிருந்த உருத்திரபுரம் சிவாலயத்தைப் புனரமைத்து ஆலயக் கிரியைகளைக் கிரமமாகச் செய்ய வழி வகுத்தார். ஜெயந்தி நகரில் தமது குரு தேவரான மகாதேவ சுவாமிகளின் நினை வாக ஆச்சிரமத்தை நிறுவி சமயப்பணியும், சமுதாயப் பணியும் செய்து வந்தார். அவ்வூர் மக்களுக்கு சைவசமய நெறியை நன்கு போதித்ததுடன், அவர்கள் சிவநெறி மறவாச் சிந்தையாளர்களாக வாழவும் வழிகாட்டினார். பல உத்தம சீடர்களை உருவாக்கி ஆச்சிர மப் பணிகளில் அவர்களையும் ஈடுபட வைத் தார். இவர் நிறுவிய ஆச்சிரமத்தில் 1990ஆம் ஆண்டு சிவப்பேறு எய்தினார். இவருடைய சமாதிக் கோயில் மகாதேவ ஆச்சிரம வளாகத் தில் அமைந்துள்ளது.

**(04) சாத்திரம்மா:**

இணுவில் கிராமத்தின் தாய்த் தெய்வ மான சிவகாமி அம்பாளின் பேரருளினால் தன்னை நாடிவரும் பக்தர்களுக்குத் திருவாக் குச் சொல்லி வாழ்ந்த குடும்பப் பெண்ணாகிய சிவகாம சுந்தரியை இணுவில் மக்கள் அனைவரும் "சாத்திரம்மா" என்று அன்போடு அழைத்து வந்தனர். சிவகாமி அம்பாள் ஆல யத்தில் பல திருப்பணி வேலைகளை இவரே முன்நின்று நடாத்தி வைத்தார். இவரிடம் திருவாக்குக் கேட்க வருவோர் ஒவ்வொரு வரும் ஒரு பணம் (ஆறு சதம்) அன்பளிப்பாக வழங்கி வந்தார்கள். ஆலயத் திருப்பணி செய் வதற்காக சூழலில் வாழ்ந்த மக்களிடம் பிடியரிசி வாங்கி வந்து அதனை விற்றுப் பெற்ற பணத்துடன் வாக்குச் சொல்வதால் வந்த பணத்தையும் சேர்த்து அம்பாள் ஆல யத்தின் கருவறை, பிரதான மண்டபம் என்ப வற்றைக் கட்டுவித்தார். நாற்பது வருடகால அயராத பணியினால் அம்மையார் சிவகாமி ஆலயத்தைப் பொலிவுறச் செய்தார். முன் இரவு வேளையில் அம்பாள் ஆலயத்திற்கு அருகில் இருக்கும் வைரவர் ஆலயத்தில் நடைபெற்ற புராணபடனம் சிறப்பாக நடை பெறுவதற்கும் உதவியாக இருந்தார். மங்கை யர்க்குத் தனியரசியாக வாழ்ந்த சாத்திரம்மா வின் வாழ்வியல் நெறி நமது மாதரசிகள் அனைவருக்கும் முன் உதாரணமாக அமைந் துள்ளது.

(தொடரும்...

*சிறிய காரியத்தையும் ஒருவன் மிகுந்த அவதானத்துடன் செய்யவேண்டும்.*

# தூய உள்ளம் இறைவன் இல்லம்

– திரு பு. கதிர்த்தம்பி அவர்கள் –

அண்ட சராசரங்கள் எங்கும் வியாபித்திருக்கும் இறைவன் உயிரினங்களின் வினைகளை அனுபவிப்பதற்கே பூமியில் படைத்துள்ளான். இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்களில் அரிய பிறவி மானுடப் பிறவி. பஞ்சமா பாதகங்களை நீக்கி தூய உள்ளத்துடன் வாழும் அடியானை ஆட்கொண்டு அவனது உள்ளத்தைக் கோவிலாகக் கொண்டு வீற்றிருப்பானென்று மறைகள் பகருகின்றன. இறைவன் உள்ளக் கமலத்தில் வீற்றிருப்பானென்பதை, சரஸ்வதி துதி பாடலில் "வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்று அருளியிருப்பது இறைவன் தூய உள்ளத்தில் குடியிருப்பானென்பதை அறுதியிட்டுக் கூறியிருப்பதைக் காண்கின்றோம். எனவே இறைவனின் கோயில் தூய உள்ளமாகும்.

அரிய பிறவியை எடுத்த மானுடர்கள் பஞ்சமா பாதகங்களை நீக்கி, தூய உள்ளம் கொண்டவர்களாக வாழவேண்டும். தினமும் இறைவனைச் சிந்தித்து, இறைபணிகளைச் செய்ய வேண்டும். இறைபணி செய்து வர வினைகள் அகன்றுவிடும். வீடுபேறும் கிட்டிவிடும். மனிதப் பிறவியின் பயனையும் பெற்றுவிடுகின்றான். கணப்பொழுதும் மறவாது சிவனை நினைக்க, இறைவன் நீங்காது மனதில் இருப்பான் என்பது திண்ணம். அவன் எங்கும் சிவத்தையே காண்பான். தினமும் இறைவனையே வழிபட்டுவந்த பூசலார் சிவனுக்கு ஒரு கோவில் கல்லால் கட்ட விரும்பினார். கோவில் கட்ட உதவி செய்யுமாறு பலரிடம் கேட்டும் பயனளிக்கவில்லை. ஆனாலும் இறைவனுக்கு கோவில் கட்டவேண்டுமென்ற ஆசை அவரைவிட்டு நீங்காது நின்றது. பரம ஏழையான பூசலாருக்கு எப்படியும் மனதில் ஓர் கோவில் கட்டவேண்டுமென்ற ஆர்வம் பிறந்தது. ஒரு நல்ல சுபமுகூர்த்தத்தில் அடிக்கல் நெஞ்சில் நாட்டினார். ஒவ்வொரு நாளும் இறைவனுக்கு மனதில் கோவில் கட்டும் பணியைச் செய்து வந்தார். கோவில் கட்டும் பணியும் முடிந்துவிட்டது. சுபமுகூர்த்தத்தில் இறைவனை எழுந்தருளச் செய்யவேண்டும் என எண்ணி, சுபநாளையும் தீர்மானித்துவிட்டார். அதே நாளில் மன்னன் காடவராயன் கட்டிய கோவிலும், கும்பாபிஷேகம் நடைபெறுமென அறிவித்திருந்தான். முதன்நாள் இரவு இறைவன் காடவராயன் கனவிற்றோன்றி "அரசனே! நாளை பூசலார் கோவிலில் எழுந்தருளவுள்ளேன்; இன்னொரு நாளை நியமித்துக் கொள்வாய்" எனப் பயின்றார். காடவராயன் இறைவன் கனவை மனதில் எண்ணி, காலையில் பூசலார் கட்டிய கோவிலைப் பார்க்கச் சென்றார். பூசலார் கட்டிய கோவில் எங்குள்ளது என மக்களை வினவினான். மக்கள் அரசனுக்கு "பூசலார் பரம ஏழை, சிவனைத் தினமும் வழிபடுபவர், அவர் கற்கோவில் கட்டவில்லை என பதிலளித்தனர். உடனே அரசன் பூசலார் இல்லத்தை அடைந்து "நீர் கட்டிய கோவில் எங்குள்ளது" எனப் பணிவாகக் கேட்டார். அதற்குப் பூசலார் ஒருகணம் இறைவனை நினைந்து, "நான் கல்லால் கோவில் கட்டவில்லை, மனதில் கோவில் கட்டினேன்"

*வெற்றிகளையும் தோல்விகளையும் சமமாகப் பாவிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.*

என கண்ணீர் மல்க கூறினார். "தூய உள்ளம் இறைவன் இல்லம்" என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

தூய உள்ளம் கொண்ட அடியவர்களை இறைவன் ஆட்கொண்டு அருள் செய்ததை நாயன்மார்கள் வரலாறு எடுத்து இயம்புகின்றது. பாரதம், இராமாயணம் தூய உள்ளம் கொண்ட பாண்டவர்களையும், தூய உள்ளம் படைத்த இராமர், இலக்குமணர், சீதை, அனுமான் போன்றவர்களையும் இறைவன் எப்படிக் காப்பாற்றினான் என்பதையும் மக்கள் அறிய காவியங்கள் வடிவில் அமைந்துள்ளன. இறைவன் அடியார்களைக் காப்பாற்ற என்றும் ஆயத்தமாக உள்ளார் என்பதை மாணிக்கவாசகர் வரலாறும், சமணர்கள் அப்பருக்கு செய்த துயரங்களை நீக்கியமையும் சான்றுகளாக உள்ளன.

விஞ்ஞானம் தற்பொழுது அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்து செல்லுகின்றதென்பது உண்மை. ஆனால் நாசா விஞ்ஞானிகள், இறைவன் ஒருவன் உண்டு என்ற உண்மையை உணர்ந்து, நடராஜர் சிலையை விஞ்ஞானகூட வாசலில் நிறுவியுள்ளனர். அதுமட்டுமன்றி சிதம்பரக் கோவிலில், காந்த சக்திகள் உள்ளன என அறிந்து காந்த சக்தியின் தன்மையை அறிய விஞ்ஞானக் கருவிகள் அங்கு வைத்துள்ளனர் என பத்திரிகை வாயிலாக அறிகின்றோம்.

தமிழை வளர்த்த ஔவைப் பாட்டியார் தூய உள்ளம் படைத்தவர், ஆனால் இவரிடம் புலமைச் செருக்கு இருப்பதை நீக்க, ஔவையார் நிழலுக்காக நின்ற நாவல் மரத்தில் பையனாகக் காட்சி கொடுத்து "சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என வினவினார். பையன் சொன்ன வார்த்தையை ஒரு கணம் சிந்தித்து "சுட்டபழம் போடு" எனச் சொன்னார். பையன் நன்கு கனிந்த நாவற் பழங்களை மணல் நிலத்தில் போட்டார். பாட்டி ஒட்டிய மணலைப் போக்க ஊதி ஊதிச் சாப்பிட்டார். அப்பொழுது பையனாகிய முருகன் "பழம் நன்றாகச் சுடுகிறதா?" எனக் கேட்டான். பையனாக வந்து என் செருக்கை அடக்கியவன் முருகன்தான் என உணர்ந்து முருகன்மேல் பாடல்களைப் பாடினார். தூய உள்ளம் கொண்ட ஔவையார் மக்கள் நல்வாழ்வு வாழவேண்டுமென்று ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை ஆகிய பாடல்களைப் பாடியருளினார். சிறு குழந்தை தொடக்கம் முதியோர்வரை வாழ வேண்டிய அறநெறிகளை வடித்துள்ளார். இலகுவில் பாமர மக்களும் விளங்கக்கூடிய எளிய சொற்களால் பாடல்கள் அமைத்துள்ளார். ஔவையின் பாடல்களை நாம் கடைப்பிடித்தால் தூய உள்ளம் உண்டாகி இறைவனடி சேரலாம் என்பது வெள்ளிடைமலை.

மானுடர்களாகிய நாம் பிறவிப் பயனை நீக்கி, தூய உள்ளத்தவராகி வாழ தினமும் கலியுகவரதன் செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க முருகன் பாடல்களைப் பாடி அருள்பெற்று, எந்நிதியும் பெற்று, நிம்மதியாகவும் வாழ்வீர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. தொண்டைமானாறு செல்வச்சந்நிதியானால் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தையும் எட்டிப் பாருங்கள். உண்மையை உணர்வீர்கள். செல்வச்சந்நிதியான் எம் உள்ளத்தைத் தூயன ஆக்குவான், நல்லதைச் சிந்திக்கவும், நல்லதைச் சொல்லவும், நல்லதைச் செய்யவும் வைப்பானென வேண்டுகின்றேன். அவன் இருக்க நமக்குப் பயம் ஏன்?

*உன்னால் முடிந்ததையெல்லாம் செய்துவிட்டு இறைவனிடம் உதவி கேள்.*

# நித்திய வாழ்வு

## அமரர் நித்தியானந்தன் தசீதரன்



- மறவன்புலவையும் மானியம்பதியையும் இணைத்து இல்லறவாழ்வு நடாத்தி வந்த சுப்பிரமணியம் மனோன்மணி தம்பதியரின் நான்காவது புத்திரியாகத் திகழ்ந்த பராசக்திக்கும் நித்தியானந்தத்திற்கும் 1974ஆம் ஆண்டு சிவபூதவராஜர் ஆலயத்தில் திருமணம் நடைபெற்றது. இத்தம்பதியரின் வாழ்வின் நற்பேறாக மூத்த தலைமகனாய் பன்னாலையம்பதி மண் மகிழ 1975ஆம் ஆண்டு ஐப்பசி வெள்ளி தினமாம் 24ஆம் தேதி அமரர் நி. தசீதரன் அவர்கள் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அவதரித்தார்.

- ஆரம்ப கல்வியை மணிமகுடமாகத் திகழும் பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலையிலே தரம் 1முதல் 7வரை கற்றார். பின்பு 7ஆம் வகுப்பில் மகாஜனக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தது மட்டுமன்றி சிறந்த சைவபக்தி, ஆலய வழிபாடு, குருபக்தி என தன்னை அறநெறிப்படுத்திக்கொண்டார். தனது உயர் கல்வியினை அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கல்விகற்று வந்தவேளை 1990ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் தனது அன்னையின் பிறப்பிடமான மானியம்பதியில் அடைக்கலமுற்றார். 1994ஆம் ஆண்டில் இந்து நாகரீகம், இந்து சமயம், தமிழ், அளவையியலிலும் விஞ்ஞானமுறை ஆகிய பாடங்களினைக் கற்று உயர்தரப் பரீட்சைக்கு தோற்றினார். இதன்போதுதான் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் அதிபர் அ.மு. அருணாச்சலம் அவர்களினதும் ஆசிரியர்களினதும் வழிகாட்டுதல் இவருக்குக் கிடைக்கப்பெற்றது. இக்காலத்தில் விக்னா கல்வி நிறுவனத்திற்கு கல்வி கற்றுவந்ததோடு சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியராகத் தன்னை உருமாற்றி N.T. தரன் எனும் நாமத்தோடு வலம் வந்தார்.

- இதே ஆண்டில் ஏற்பட்ட உள்ளூர் இடப்பெயர்வின் காரணமாக வீட்டுப்பொறுப்பு, சகோதர பொறுப்பு என அனைத்தையும் சிறு வயதிலே பழக்கப்படுத்திக்கொண்டார். 1996ஆம் ஆண்டின் பின்பு மறவன்புலோ இடப்பெயர்வில் மீண்டும் மானியம்பதியில் அடைக்கலமுற்றார். அங்குதான் இளைஞர் தாகசாந்தி நிலையம் புத்துயிர் பெற தம்மாலான பங்களிப்பை நல்கியதோடு பெரியவர்களினதும் சமூகத்தினதும் நன்மதிப்பைப் பெற்றார். இதன்போதுதான் தனியார் கல்வி நிறுவன ஆசிரிய தொழிலும் விசாலமடைந்தது. யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கல்விப்பணியை சைக்கிளில் சென்று கற்பித்து வந்தார்.

*ஒரு மனிதனைத் தெரிந்துகொள்வது என்பது அவன் முகத்தை அல்ல, அவன் இதயத்தை.*

- யாழ்ப்பாணத்தில் 1997ஆம் ஆண்டுகளின் பின்னர் சைவ சமயத்தின் பொற்காலம் எனலாம். ஆலய வழிபாட்டில் தன்னை ஈடுபடுத்தியதன் விளைவாக சமூக விழாக்கள், பாடசாலை அறநெறி நிகழ்வுகளில் அறிவிப்பாளராக மிளிர்ந்தார். சித்தங்கேணி, நாககன்னி ஆலய பக்தனாக சென்றவேளை அம்மன் அருளாசி கிடைக்கப்பெற்ற நாள்முதல் கன்னி சொற்பொழிவாளராக மாற்றிக்கொண்டார். இவரின் நாவன்மை, சொல்லழகு, கணீரென்ற குரலோசை, சைவசமயக் கதைகள், விநாயக புராணம், மகாபாரதம், தேவிபாகவதம், ஐயப்பன் கதைகள், வைரவர் கதைகள், கந்தபுராணம், முருகன் திருவருள், விரதங்கள், பண்டிகைகள், ஆகமங்கள், உபநிடதங்கள், சிவத்தொண்டர் புராணங்கள், நாயன்மார்கள், சித்தர்கள், அகம்புறம்சார் வாழ்வியல் சைவசமய விழுமியங்கள், கலை கலாசார விடயங்களை சிறியோர் பெரியோர்வரை சகலரையும் ஈர்த்துக்கொண்டார்.

- ஆலய வர்ணனையாளராகவும், தொலைக்காட்சி, வானொலி, நேரடி ஒளிபரப்புக்கள் செய்து பல சிறிய ஆலயம் தொடங்கி பெரிய ஆலயங்கள் வரை பல பட்டங்களும், விருதுகளும், பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

- செஞ்சொல் வேந்தன், சிவத்தமிழ்ச் செல்வன், தமிழ்ச்சுடர், சிவசெஞ்சொல் செல்வன், சைவநற்றமிழ் வித்தகர், சொற்கொண்டல், சைவநெறிச் சன்மார்க்கர், செஞ்சொற்செல்வர், சிவநெறித் திலகம், சொல் அருட் செம்மல், சைவசித்தாந்மீகர், மெஞ்ஞானச்சுடர், அருட்சொல்வாரிதி, அருள்மணிவாசகர், செஞ்சொல்அருவி, ஈழத்துக் கிருபானந்தவாரியார், சைவநற்றமிழ் வித்தகர், அருள்வாரி, நேர்முகவர்ணனை வாருதி எனப் பல விருதுகளை தனதாக்கிக் கொண்டவர். இதைவிட ஏராளமான பட்டங்களையும், வாழ்த்து மடல்களினையும், கௌரவிப்புக்களையும் பெற்றுக்கொண்டார்.

- 1998ஆம் ஆண்டு அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம் நடாத்திய சைவத் தேர்வில் "இளஞ் சைவப்புலவர்" பட்டத்தினை பெற்று சிவதீட்சை பெற்று சைவநெறியில் ஆற்றுகைப் படுத்திக்கொண்டார்.

- 22.05.1997 சைவ பரிபாலன சபையினரால் சைவ சித்தாந்த பண்டிதர் பட்டத்தையும் 05.05.2000ஆம் ஆண்டு சைவ பரிபாலன சபை நடாத்திய சைவ சமயத் தேர்வில் சித்தியடைந்து சைவ சித்தாந்த பண்டிதர் எனும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். அன்றுமுதல் அனைவராலும் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதன் திரு க. நித்திய தசீதரன் என அன்போடு அழைக்கப்பட்டார்.

- 28.02.2013ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக 28ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் சைவ சித்தாந்த முதுகலைமாணி (M.A) எனும் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார்.

*நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக ஒருவருடன் விவாதிப்பது சிறப்பாகும்.*

- 2005 - 2006 காலத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பாடவிதானத்திற்கு அமைய இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்திய இந்து தர்மாசிரியர் பரீட்சையில் தேசிய ரீதியாக அதிவிஷேட சித்தியினைப் பெற்றதற் காக 10.12.2012ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அலரிமாளிகையில் இந்து தர்மாசிரியர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

- இவர் யா/ இராமநாதன் மகளிர் கல்லூரி, யா/ இணுவில் இந்துக் கல்லூரி, யா/ தெல்லிப் பளை மகாஜனக் கல்லூரி, யா/ இளவாலை புனித ஹன்றியரசர் கல்லூரியில் பகுதிநேர இந்து சமய ஆசிரியராகக் கற்பித்து வந்தவர். இந்து சமய பாட இந்துநாகரீக வளவாளராகவும், க.பொ.த. சாதாரணம் மற்றும் உயர்தர இந்து நாகரீக ஆசிரிய வளவாளராகவும் செயற்பட்டார்.

- 2000ஆம் ஆண்டு, மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய சிவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு சிவநாதம் பட்டிமன்ற குழுவில் இடம்பிடித்து பட்டிமன்றப் பேச்சாளராக, நடுவராக, பல களங்களைச் சந்தித்த கருத்தியல் வாதியாவார். இதன்பின் இளைஞர் தாகசாந்தி நிலையத்தில் மானிப்பாய் மருதடி விநாயகர் மகோற்சவகால தண்ணீர்ப் பந்தலில் இரவுநேர விருந்தாக சிவநாதன் பட்டிமன்ற தலைமைப் பேச்சாளராக மாறினார். பல கலை, கலாசார முத்தமிழைப்பேணி இந்நிலையத்தினூடாக இளஞ் சமுதாயத்தை வளர்த்தார். இவ்வாண்டில் மீண்டும் மானிப்பாயிலிருந்து சங்குவேலிப் பகுதியில் தற்காலிக வீட்டில் வசித்து வந்தார்.

- 29.11.2012 தசீதரன் அவர்கள் துசியந்தியைத் திருமணம் புரிந்துகொண்ட நாள் ஆகும். 30.06.2013 இவர்களின் இல்லறத்தில் மூத்த பிள்ளையாக த. தணிகையன் அவதரித்தார். 26.08.2014 நி. சாருகாசினி எனும் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தனர்.

- 15.11.2011 கல்குடாத் தொகுதியில் முதலாவது சைவப்புலவர் மாநாடு நடைபெற்ற தருணத்தில் தன்னையும் பங்காளராக்கிக் கொண்டார்.

- அகில இலங்கை சைவப்புலவர் பட்டமளிப்பு விழா 26.07.2012 நடைபெற்ற வேளை அதிலும் தன்னை பங்காளராக்கிக் கொண்டார்.

- 25.10.2015 கீரிமலை சிவபூமி மடாலய மண்டபத்தில் உள்ள சிவத்தமிழ்ச் செல்வி, சைவப்புலவர், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கில் நடைபெற்ற சைவப்புலவருக் கான பட்டமளிப்பு விழாவை ஏற்பாடு செய்து நடாத்தியிருந்தார்.

- இன்றைய பிரமுகர் வாயினூடாக டான் தொலைக்காட்சியில் 06.04.2016 காலைப் பொழுதில் ஆன்மீக அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். அதுமட்டுமன்றி கல்வி தொலைக்காட்சி யிலும் பல சமயம் தோன்றி இந்துநாகரீகம், சமய வினாவிடைகளை கற்பித்தார்.

- 2016ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளின் அனுசரனை யுடன் வட இந்தியத் தலயாத்திரையை மேற்கொண்டார்.

- இவர் கிராமங்களிலுள்ள ஆகமம். ஆகமம் சாராத பல ஆலயங்களில் சொற்பொழிவு களை நடாத்தினார். இதன் பயனாக இன்று பல ஆலயங்களில் அறநெறிச் சொற்பொழிவு களின் வாசற்கதவு அகல திறக்கப்பட்டது. குறிப்பாக மானிப்பாய் பெரிய தம்பிரான் ஆலய நேர்முக வர்ணனையாளன், ஆலயத் தொண்டன் என வலம் வந்தவர். இளைஞர் தாக சாந்தி நிலையத்தின் மூத்த உறுப்பினராக பல அறிவுரைகளைக் கூறி, சமூகத்தை நல்வழிப்படுத்திய தெய்வம் அவருக்காக "தம்பிரான் தாகம்" விருதினை வழங்க எண்ணியிருந்தவேளை திடீரென 13.5.2017 சனிக்கிழமை 6.30 மணியளவில் சந்நிதியான் பாதமேகினார். அவருக்கும் அவர்தம் சூழல் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திக் கின்றோம்.

**தசீதரனின் கனவுகள் மெய்ப்பட சமூக, கலை, கலாசாரம், அறநெறியினைப் பாதுகாப்போம் என உறுதிபூண்டு இவ் ஓராண்டு ஞாபகார்த்தமாக மானிப்பாய் இளைஞர் தாக சாந்தி நிலையம், மானிப்பாய் பெரிய தம்பிரான் ஆலய தொண்டர்கள் சார்பாக நித்திய வாழ்வு தம்பிரான் தாகம் ஆவணப் பதிவை வெளியிட்டு வைக்கப்படுகின்றது.**

**அகிலம் போற்றும் சந்நிதிப் பெருமானே**

அகமும் மகிழ்ந்து மனமும் விரும்பிட
தினமும் நின்றருள் புரிவேலா
கவிகள் புனைந்து கவலை தெளிந்துன்
கழல்கள் தொழுதிட வருவோனே
அபயம் எனத்தினம் அடியார் வழிபட
அருள தருளும் வடிவோனே
பயமும் தெளிந்து உவகை பெருகிட
மயிலில் வந்தருள் புரிவாயே
சுகமும் வந்துற மனது மகிழ்ந்திட
நித்திய அருள்தனைப் பொழிவேலா
உமையும் மகிழ்ந்த சிவனார் புகழ்ந்த
மனது நிறைந்த எம்குருநாதா
மமதை கொண்டவர் மனமும் பொடிபட
விரைந்து கைவேல் விடுவோனே
அயனை அடைத்து உலகில் படைத்து
அகிலம் போற்றும் சந்நிதிப் பெருமானே.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*எந்த வேலையாக இருந்தாலும் அதைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளியாவான்.*

# படங்கள் தரும் பதிவுகள்



பங்குனி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...






பங்குனி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



*தர்மம், நீதி இரண்டும் சேர்ந்துதான் நற்பண்பை உண்டாக்கிறது.*











வவுனியா கற்பகபுரம்- பாலாமைக்கல் ஸ்ரீ முத்துமாரி அறநெறிப் பாடசாலை ஆசிரியை திருமதி கமலதேவன் சிவரஞ்சினி அவர்களுக்கும், வேறு பாடசாலை மாணவர்கள் இருவருக்கும் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டது.

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்கப்பள்ளி பரிசளிப்பு நிகழ்வுக்காக 300பொது அறிவு நூல்கள் வழங்கப் பட்டபோது...

*அறிவாளிகள் மற்றவர்களின் கேடுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்கிறார்கள்.*

# வட இந்திய யாத்திரை - 05

(தொடர்ச்சி...

– மோகனதாஸ் சுவாமிகள் –

அகோரிகளைக் காணுவதென்பது சுலபமானதல்ல. பல நாட்கள் காசியில் நின்றால்த்தான் அவர்களைக் காணமுடியும். அதிலும் குறிப்பாக அந்த அமைப்பின் ஒருவரின் சிபார்சின் அடிப்படையில்தான் காணமுடியும் எனும் விடயத்தை நாம் அறியமுடிந்தது. ஆனாலும் எவ்வகையிலும் அவர்களையோ, அவர்கள் இருக்கும் இடத்தையோ அணுகுவதற்கு முயல்வோம் எனும் சிந்தனையோடு மாலை ஐந்து மணியளவில் நாம் அனைவரும் கங்கைக் கரையில் நடைபெறும் கங்கா பூசையைக் காணும் ஆவலில் புறப்பட்டுச் சென்றோம். தினமும் மாலை ஆறு மணிக்கும் எட்டு மணிக்கும் இடையில் நடைபெறும் கங்கா பூசை யானது அதிவிஷேடமானது. காசி மகாராஜாக்களின் சந்ததியினர் இந்தப் பூசையில் தினமும் கலந்து கொள்கின்றனர்.



இவ்வழிபாட்டின்போது யாத்திரிகர்கள் உட்பட காசி மாநகர் மக்கள் அனைவரும் பார்வையாளர்களாக கலந்துகொள்வதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. கங்கை படித்துறையோரம் மக்கள் அனைவரும் வருகை புரிந்து தீபமேற்றி வழிபாடு இயற்றுவது கண்கொள்ளாக் காட்சி. இக்காட்சியினை மெருகுபடுத்தும் முகமாக ஏழு ஒத்த வயதையுடைய இளம் பூசகர்கள் இளம் மஞ்சள் நிறத்திலான பட்டாடை அணிந்து ஒரேவித அலங்காரத்துடன் ஒரே சமயத்தில் பக்திமயமான பாடல்களுடன் கூடிய தீப ஆராதனை பார்ப்போரை பக்திப் பரவச நிலையை அடைய வைக்கின்றது.


*உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே.*

இப் பூசையைக் கங்கையில் மிதக்கும் படகிலிருந்தும் பார்க்கக்கூடிய வகையில் படகோட்டிகள் யாத்திரிகர்களிடம் சிறிய நிதியினைப் பெற்று இவ் வழிபாட்டின் மகத்துவத்தை உணரக்கூடிய வகையில் செயற்படுகிறார்கள். இப்பூசையின் இறுதியில் நீரில் மிதந்து செல்லக்கூடிய வகையில் செய்யப்பட்ட கிண்ணத்தில் நெய் விளக்கேற்றி அதனை கங்கை மாதாவுக்கு சமர்ப்பிக்கின்றார்கள். அக்கிண்ணங்கள் கங்கை நீரோட்டத்தில் ஒளிப்பிளம்பாக மிதந்து செல்லும் காட்சியானது வேறு எங்கும் காணமுடியாதது. ஆனால் ஹரித்துவாரிலும் இப்பூசை நடைபெறுவது வழமை. எமது குழுவினரும் இச்செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

இப்பூசை வழிபாட்டை நிறைவு செய்த பின்னர் எமது குழுவினர் தாம் தங்கி உள்ள விடுதியை நோக்கிப் புறப்பட்டனர். வழிநெடுக உள்ள வர்த்தக நிலையங்களைப் பார்வையிட்டு தத்தமக்கு வேண்டிய பொருட்களை கொள்வனவு செய்வதில் ஈடுபட்டபடி இரவு ஒன்பது மணியளவில் விடுதியை அடைந்தனர். அவர்களை விடுதியில் விட்டபின் எமக்கு வழிகாட்டியாக வந்தவருடன் நானும், ராஜனும், கஜனும், தசீதரனும் அகோரிகளைப் போய்ப் பார்க்கவேண்டும் எனும் முனைப்புடன் மறுபடியும் கங்கைக் கரைக்குச் சென்றோம்.

எம்முடன் வந்த வழிகாட்டி ஒரு இடத்தைக் கையால் சுட்டிக் காட்டினார். கங்கையின் மறுகரையோரம் இரண்டு மூன்று மைல்களுக்கப்பால் பெரிய தீச்சுவாலையொன்று கொழுந்து விட்டு எரிவது நன்கு புலப்பட்டது. அது என்ன என்று வினவியபொழுது அகோரிகள் அங்கே குழுமி இருந்து யாகம் செய்கிறார்கள் என்று கூறினார். நாம் அந்த இடத்திற்குப் போய்ப் பார்ப்போம் என்று கேட்க படகோட்டிகள் இந்நேரம் ஒருவரும் வரமாட்டார்கள். அது ஆபத்தானது என்றார். கங்கையில் படகு நடமாட்டம் இருந்தபோதும் அப்பகுதி வெறிச்சோடிப் போய் இருந்தது. நேரமோ பத்தைத் தாண்டிவிட்டது.

இளங்கன்று பயமறியாதது போல் எம்முடன் வந்த கஜன் எப்படியும் அகோரிகளைக் காண வேண்டுமென்று எம்மை நச் சரித்துக்கொண்டே இருந்தார். எமக்கும் அவர்களைக் காண வேண்டுமென்ற அவாதான். என்ன செய்வது? எனும் யோசனையுடன் நின்றபொழுது எமது வழிகாட்டியுடன் வந்த படகோட்டி அதிகாலை நான்கு மணிக்கு வந்தால் போய்ப் பார்க்கலாம். ஆனாலும் கங்கையின் மறுகரையில் இறங்கி நடந்துதான் போகவேண்டும். நாம் போகும்போது அவர்கள் இல்லாதுவிடின் அந்த இடத்தையாவது பார்வை இடலாம் என்று கூறியதற்கிணங்க அதிகாலை போய்ப் பார்ப்போம் எனும் சிந்தனையுடன் எமது விடுதியை அடைந்தோம்.




எப்போது நாலுமணி வரும் என்ற எமது ஆவலுக்கு முற்றுப்புள்ளி வைத்ததுபோன்று நான்கு மணியை எமது கடிகாரம் காட்டி நின்றது.

(தொடரும்...

# வைகாசி மாத வாராந்த நிகழ்வுகள்

04.05.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"அமரர் நித்திய தசீதரனின்

1ஆம் ஆண்டு நினைவுப் பேருரை"

---

11.05.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

18.05.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

25.05.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் வைகாசி மாத வெளியீடு**

வெளியீட்டுரை :- திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள்

(இளை. கிராம சேவகர் - பொலிகண்டி)

மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

(ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி)

245ஆவது மலர்

பதிவு இல. QD/49/NEWS/2018

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

